உ

பரமபதிதுணை.

இராமேச்சுரமென்னும்

சேதுமகத்துவம்.

இஃது சிவகெங்கை மகா-ள-ள-ஸ்ரீ,
பஞ்சாக்ஷரம்பிள்ளையவர்கள் குமாரரும், ஷை யூர்
ராஜாஸ்ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்
தேவசிகாமணியையரவர்களின் மாணாக்கருமான
கணபதியாபிள்ளையவர்களால் இயற்றியதை,

மதுரை புதுமண்டபம் புக்ஷாப்
இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்
கேட்டுக்கொண்டபடி,

மதுரை புதுமண்டபம் புக்ஷாப்
இ. ரா. ம. குருசாமிக்கோனாரால்

பிருங்கிமாநகரம்.
வேம்புலிமுதலியாரவர்கள்-குமாரர்
நமசிவாயமுதலியாரவர்களது
சென்னை - சூளை
நிரஞ்சனவிலாச அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை 1905. அணா 6.

அவதானம்பாப்பையர் வீதி நெ-88 சூளை.

சுத்தப்பதிப்பு புத்தகவிளம்பரம்.

இதனால் சகலமானவர்களுக்குந் தெரிவிப்பது யாதெனில் முன் அச்சிட்டு வழங்கிய யாழ்ப்பாணத்து பேரகராதியைவிட இப்போது யாழ்ப்பாணம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் மாணுக்கரின்மாணுக்கரிலொருவரும் சைவப்பிரசாரணருமாகிய யாழ்ப்பாணம் நா. கதிரைவேற்பிள்ளையவர்களைக்கொண்டு ஷை பேரகராதியில் அநேக நூதன சொற்கள் சேர்த்து, வினைமுற்று. வினையெச்சம், பெயரெச்சம் முதலானதற்கும் ஆங்காங்கு குறிகளமைத்தும், பொருளகராதியிலும் தொகையகராதியிலும், தொடையகராதி முதலானதற்கும் ஆங்காங்கு கருத்து நூதன சொற்களும் சேர்த்து எமது புஸ்தக ஷாப்பில் 1901-வருடத்தில் புதிதாய் பதிப்பித்த நல்லபளபளப்புள்ள கிளேசு பதினறுபவுன்கடிதத்தில் புதுயெழுத்தில் பிழையில்லாமல் அச்சிட்டு புல் சீமைத்தோல் பயிண்டுசெய்து முதுகில் சிகப்புத் தோலின்பேரில் தங்கரேக்கினல் பேர்குத்திய புத்தகம் 1-க்கு கிரையம். 3 8 0

ஸ்ரீமஹாபக்தவிஜயம்.

ஜெயதேவர், கபீர்தாசர், துளசிதாசர், நாமதேவர், ஞானேசுவரர், குசேலர் ஆகிய இவர்கள் சரித்திரங்கள் இதில் அடங்கி இருக்கின்றன.

இப்புத்தகம் படிப்பதால் மஹம்மதிய முதலிய சமயங்களின் சித்தாந்தங்களும், கற்புடைய மகளீர் ஒழுக்கங்களும், பகவான் அடியார்க்கெளியவனென்பதும், பக்திசெய்யும் வகையும், பக்தியின் இலக்ஷணமும், சமாதியின் வகைகளும், பக்தர்கள் உடற்குவரும் இடர்பற்று சிறிதும் அஞ்சார் என்பதும், மனிதராய்ப்பிறந்த ஒவ்வொருவரும் நடந்துகொள்ளும் வகை இன்னயென்பதும், உள்மதக்கலகம் கூடாதென்பதும் வேறுபிரிவும் தெளிவாய் அறிந்துக்கொள்ளலாம்.

இது ஒவ்வொருவர்கையில் அவசியமாய் இருக்கத்தக்கது தெளிவான நடையில் ஆண்பாலரேயன்றிப் பெண்பாலாரும் எளிதில் அறிந்துகொள்ளுமாறு எழுதபிபட்டிருக்கின்றன.

ராயல் 8-பேஜ் அளவில் 60-பாரம் கொண்டதாய் சுத்தமாய் அச்சிடப்பட்டு சேர்த்தியான காலிகோ கட்டடம் செய்யப்பட்டிருக்கிறது.

ஷை கிளேஸ் கடிதத்தில் அச்சிட்டது ரூபா		2 0 0
ஷை ரப்கடிதத்தில் அச்சிட்டது	,,	1 4 0

எனது மேல்விலாசம்

இ-ரா-ம-குருசாமிக்கோனர்,

புக்ஷாப் புதுமண்டபம் மதுரை.

உ

சாற்றுக்கவிகள்.

சிவகெங்கை ராஜாஸ் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதரும்,
திருவாவடுதுறை ம-ா-ா-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக
ரவர்களின் மாணுக்கரும், இந்நூலாசிரியரின்
ஆசிரியருமான பிரமஸ்ரீ,

தேவசிகாமணியையரவர்களியற்றிய

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

கந்தமலர்க்கணைகளைந் தேந்தாதமாரன்
கடவுளடிகருதுபஞ் சாக்கரன்செய்நோன்பில்
வந்தவனம்பாற்கலைக ளொருங்கேதேர்ந்த
மதியூகிகணபதிமா மறைகள்வாழ்த்தச்
செந்திருவோடார்ந்தரனை மால்பூசித்த
சிறப்புடனேனைய மகிமைசெறிந்துநாளுஞ்
சந்தமுயர்சேதுமகத் துவத்தைவாசத்
தமிழ்ப்புலவர் வியப்புறவேசாற்றினனே.

இஃது சிவகெங்கை இராமநாதபுர முபயசமஸ்தான
வித்துவானும் வேம்பத்தூர் சங்கவித்துவான்களிலொருவருமான பிர்மஸ்ரீ,

சிலேடைப்புலி பிச்சுவையரவர்கள் இயற்றியது.

வெண்பா.

திங்களணி யீசனருள் சேருங் கணபதிமால்
மங்களமாகுஞ் சேது மான்மியத்தைச்—சங்கமுற்றேன்
நத்துவான் கட்கு நயமிதெனச் சொற்றான்
வித்துவான் கள்புகழ வே.

வேம்பத்தூர்ச் சங்கவித்துவான்களி லொருவரும், பிரமஸ்ரீ
சாமாவையரென்ற ஆண்டியைய ரவர்களின்
குமாரருமான பிரமஸ்ரீ

சௌந்தரமைய ரவர்க ளியற்றிய

நேரிசை வெண்பா.

செப்பரிய சீர்சாலுஞ் சேது மகத்துவத்தை
யொப்பரிய செந்தமிழா லோதினு—னற்புதவோங்
கற்பரனைப் போற்றுசிவ கங்கைக் கணபதிவேள்
விற்பனர்கள் கொண்டாட வே.

இஃது கொட்டாம்பட்டி ம-ா-ா-ஸ்ரீ,

M. கருப்பையாப் பாவலாவர்க ளியற்றியது.

எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

நகத்துவசந் தனத்தனமா னுர்க்குமதன் குளந்தை
நகர்க்குளெனக் குரியமைத்து நன்முறையி னனிவாழ்ந்
தகத்துவசந் தயைசுகுண மன்புதழைத் துறுவோன்
அரியபஞ்சாக் கரவள்ள லருமைமகன் கயற்சீர்
புகத்துவசந் தரித்தவனும் புகழழக னறிவாற்
புனிதகண பதிபுனைந்த பொருவிலெழிற் சேது
மகத்துவசந் தவளமுயர் வண்டமிழைப் படிப்போர்
மதிநிதியும் பெருவாழ்வின் மாண்புமதிக்கரிதே.

இஃது ஒக்கூர் ம-ா-ா-ஸ்ரீ முத்துக்குமாரு பிள்ளையவர்களின் குமாரர்
ம-ா-ா-ஸ்ரீ,

சாமிநாத பிள்ளையவர்க ளியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தங்கள்.

வடமுலவு வரைமுலையார் மடலெழுதும் வடிவழகன் மணிகள்வாய்ந்த
கடலமுதைத் தடமார்பிற் கனிந்திருத்தும் புயல்வருணக் கடவுட் கந்த
மடலவிழ்மா மதுவனச மலரடியைத் துதிபுரிநன் மகிபன் மன்னும்
அடலமர்பஞ் சாக்கரவே ளரியதவத் துதித்தமைந்த னருமைமைந்தன்.

ஓதநெடுங் கடலுடுத்த வுலகமெலா மயனீங்கி யுவகையோங்க
மாதவஞ்சேர் வாணர்குழாம் பரவுகவி மழைபொழிந்து மதுரம்வார்ந்த
போதமிகுங் கம்பனெனப் புகழ்மலிந்த கணபதிநம் புலவன் பூத்த [னுல்.
சேதுமகத் துவந்தனைத்தெள் ளமுதமெனக் செப்பியெங்குஞ் சிறப்புற்ற

உ

கடவுள் துணை.

இராமேச்சுரமென்னும்
சேதுமகத்துவம்.

கடவுள்வாழ்த்து.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

ஏர்கொண்ட நெடும்புவியும் வானகமும் பிறவுமுத விருக்கு மேத்தப், பேர்கொண்ட பெரும்பதவி தருஞ்சேது மகத்துவத்தைப் பேசப்பெய்யுங், கார்கொண்ட கோதையைத்தன் னிடத்திருத்துங் கறைமிடற்றோன் கனிவோ டீன்ற, தார்கொண்ட வொருகோட்டுக் குஞ்சரச்செஞ் சரணமலர் தலைமேற் கொள்வாம்.

இராமலிங்கம்.

எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

கண்ணனு மயனு மறைகளுந் தருவிக் காணொணாப் பிரணவ வடிவை
வண்ணமார் தில்லை மன்றுளே நடித்த மாசிலாமணியெனு மணியைத்
திண்ணமே மேவுந் திரிபுர மதைப்புன் சிரிப்பினாற் சிதைத்தகண் ணுதலைப்
பண்ணவர் பரவும் ராமலிங் கேசர் பதத்தினை யிதத்தொடும் பணிவாம்.

பருவத வர்த்தனி.

எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

மின்னனே ரிடையாய் விளங்குபொன் னுடையாய் வெறிநறு வூற்றுபைந் தொடையாய், அன்னமென் னடையாய் அமர்வெலும் படையாய் அரும்பவம் நீக்குகட் கடையாய், பன்னகச் சடையாய் பலன்றரச் சடையாய் பகர்தரு நான்மறைச் சடையாய், வன்னநின் மலர்த்தாள் வழுத்தினனுவந்தாள் மலைவளர் காதலி மணியே.

திருமால்.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

பந்துறழுங் கனகவடம் பரவுகொங்கைக் கருங்குழற்பூம்பவளச்செவ்வாய்ச்
செந்திருவைத் திருமார்பிற்றினம்பொருந்தச்சேர்த்துநெடுந்திரைநீர்சூழ்ந்த
அந்தரணி தனையுயிர்த்தங் களித்தழித்து மன்பாகத் தகத்தின் மேவும்
பைந்துளவப் பரந்தாமன் பதுமமலர்ப் பதமதனைப் பணிதல் செய்வாம்.

சுப்பிரமணியர்.

எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

கந்தனைக் குகனைக் கடம்பனைச் சேயைக் காகுத்தன் மருகனைக் கலைவேல்
மைந்தனைப் பழநி மலையருள் பழநி மலையனை வளையல்விற் றவனைச்
சிந்துர முகத்தன் றனக்கிளை யவனைச் சேவலங் கொடியுடை யவனை
வந்தனை புரிந்து பவக்கடல் கடந்து மனத்திரு ளகற்றியே வாழ்வாம்.

நாமகள்.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

பவளவிதழ்க் கரியகுழற் றரளநகைப் பிடிநடைப்பெண் பாவை முன்மா
தவர்களுளந் தெளிவடையக் கலைதருவிற் பனிவாணி சகல வண்ட
புவனமனைத் துயிர்கள்படைத் தருளுமய னுமருவிப் புனித மேய்ந்த
தவளநிறக் கமலமல ரதனில்வளர் மகளிருதா டலைமேற்கொள்வாம்.

அகஸ்தியர்.

எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

உத்தரமா கிரியைப்பா தலத்திலாழ்த்தி யோராறு முகவனுப தேசம்
பெற்று,முத்தமிழ்க்கோர் வித்தாகிச் சகலஞான முனிவர்கட்குமரசனென
மொழிய வேற்றுக், கத்துகட லேழையுமூங் தளவாயாக்கிக் கரமதனி லள்
ளியா சமனஞ் செய்து,சித்துருவாய் நின்றவகத் தியன்பொற்றாளைத் தினம்
பரவித் தொல்லைவினை சிதைத்து வாழ்வாம்.

திருஞானசம்பந்தர்.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

கத்தனுயர் தோணிபுரத் தமணிருணீங் கிடஞானக் கதிர்போல் வந்து
பத்தர்தொழ மூவாண்டி லுமைமுலைப்பால் வளத்தேந்திப் பரிவா யுண்டு
முத்தமிழும் பொழிந்துசைவ சமயமதை நிலைநிறுத்தி முடிந்த பாவை
அத்தியைமாப் பெண்ணணிக ராக்கினன டிக்கமல மகத்துள் வைப்பாம்.

திருநாவுக்கரயர்.

எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

நீற்றறை புகுத்திக் கவின்மிசை பிணித்து நெடுங் கடனுப்பணை வீழ்த்திக்
காற்றுண வருந்துங் கடுவிட வரவு கடித்திட விஞ்சைகள் புரிந்த
கூற்றைநே ரமணக் கலைகளைந் தறமே குலவுசை வப்பயிர் வளர்த்து
வீற்றிருந் துழவா ரப்பணி யியற்றும் வித்தகனைத்தொழல் விருப்பே....

32/1

திருநாவலூரர்.

எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

அரம்பயிலும் வடிவேற்கண் ணுமையாள்பாகத் தண்ணலைமுன் மதனை யெரி யழற்கண் ணனைச், சிரம்பயிலு மதியறுகு புனைவோன்றன்னைச் செழுங்கமல மதிவதனச் செல்விமாதர், வரம்பயிலும் பரவையிடந்தூதுபோக வண்டமிழாற் பலபதிகம் வழுத்தி யேத்துந், திரம்பயிலுந் திருநாவ லூரன் றன்னைச் சிந்திப்பார் கழ லைத்தினமும் வந்திப்போமே.

திருவாதவூரர்.

எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

திருவளர் வாத வூரினிற் பிறந்து செழியனு லீந்தநற் பொருளை, அருமையோ டேற்றுத்திருப்பெருந் துறைசைய யடைந்துகோவிற்பணி புரிந்து, நரிகளைப் பரியாய்க் கொணர்ந்திட வழுதி நயன்சொலா தழன்றுநேர் வெறுக்க, அரனடி பணிந்து மோக்கவீ டாண்ட வருள்வடிவினன்கழ லரணே.

மற்றைத்திருத்தொண்டர்.

எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

பொன்னனைய தன்மனையை யீந்துந் தந்தை பொலன்கழலை யரிந்து மனப் பூர்த்தி யோடு,நன்னர்மிகு பிள்ளைதனைக் கொன்று கிறிசயப்பாகமுடன்சமைத்தும் நயனந் தோண்டிப், பின்னமுற்ற வரன்கண்ணிற் பதித்து மின்னம் பெருந்தொண்டைப் புரிந்துபவப் பிணியை வீட்டி, மன்னுலகிற் கீர்த்திதனை நாட்டி மோக்கம் வாய்ந்ததிருத் தொண்டரடி வணங்கி வாழ்வாம்.

பட்டினத்துப்பிள்ளையார்.

எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

நிதியொடுசம் பத்தனைத்தும் பொய்யே யென்ன நினைந்துதுற வடைந்தவத்தை நீக்கி மேலாங், கதியினிற்றன் மனமதனைத் திருப்பியாருங் கருதரிய வத்து விசக்கடலு லாழ்ந்து,குதிகொளுமைம் பொறியடக்கி நிட்டைகூடிக் குணரகித ஞகியேயெக் குரவராலுந்,துதிசேர்பட் டினத்தடிக டிருத்தா டம்மைத் தொழுதுமற விப்பவத்தை தொலைத்து வாழ்வாம்.

தாயுமானசுவாமி.

எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

மாதரொடு மக்களருஞ் சுற்ற மாசை வருமிவையா வையும்வெறுத்து மதிக்கும்ஞானப், போதமொடு பரம்பொருளே பொருளாக்கொண்டு புந்தியநு பவசுகத்திற் பொருந்தும் யோக, சாதனையில் முயன்றுபெருந் தவத்

தோர் மெச்சுஞ் சாயுச்சி யப்பதவி தனையே சார்ந்த, மேதகைய தாயுமான வன்பொற் ருளின் மிசைவீழ்ந்து பேருவகை மிகுத்து வாழ்வாம்.

குருவணக்கம்.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

பூவசியர் முதலான குலத்தோரும் நலத்தோரும் போற்றி யேத்த
மாவசிய மிகுமறையோர் மரபிலவ தரித்தொருநான் மறைக டேர்ந்து
கோவசியம் புரியரசர் தமக்குமிசை கொடுத்தெமக்குங் குருவாய் வந்த
தேவசிகா மணியிருபொற் பதமதனைத் தினந்தினமுஞ் சிந்தை சேர்ப்பாம்.

அவையடக்கம்.

எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

பன்னருநூற் றேர்ச்சியினுல் மழைபோலாகப் பாடியுள வியப்புமிகும் பாவலோர்முன், சின்னமதி கொண்டுநறும் பொழிலினுப்பண் செல்லேழும் பொழிந்தோயச் செறிந்த சீதப், பொன்னிறச் செந்தளிர்மேவுந் துளிகள் காற்ருற் பொருதுண்டு வீழ்ந்திடுமோர் புதுமைபோன்று, மன்னுலகிற்சேது மகுத்துவத்தைச் சொன்னேன் வழுக்களிருந் தாற்றிருத்தி வாழ்த்தி வீரே.

வாழி.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

மறையவர் வேத வேள்வி மன்னுக மழையை வானம்
குறையறப் பொழிக செல்வங் கூடுக வறங்க ளெல்லாந்
துறை தொறு மலிகசை வந்தோன்றுக தேவை மன்னர்
கறையறு செங்கோ லோங்கு கவளமார் சேது வாழ்க.

முதலாவது,
சேதுமகிமையுரைத்த அத்தியாயம்.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

செந்தளிருஞ் செழுமலருந் திகழ்நைமி சாரணியஞ் செறிந்து வாழுஞ்
சந்தமிகு மரிபதவச் சௌனகா தியர்கள்முனந் தகமை சார்ந்த
பந்தமறுஞ் சூதன்வரப் பணிந்திருக்கை யளித்துநெடும் பாரமீ தார்ந்த
வந்தலந்தீர்த் தத்திலெது சிறந்ததென முனியுரைத்த தறைகுவோமால்.

நூல்.

ஆதிகாலத்தில் புண்ணியசாதனமாகிய நைமிசாரண்யத்தின் கண் பிரமஞானிகளாயும், ஜிதேந்திரிகளாகியும், மமதையற்றவர்களாகியும், பாசங்களை யவித்தவர்களாகியும் பூததயையுள்ளவர்களாகியும், எஞ்ஞான்றும் பிரமவிசாரஞ் செய்யுந்தொழிலையே ஆபரணமாகவுடையவர்களாகியும், கரியகல்லைத் தன்சிறியவடியால் உரியமின்னளாக்கிய பரந்தாமனிடத்தில் விசேஷபக்தியைச்செலுத்தினவர்களாகியுமிருக்கிற சௌனகாதி அறுபதினாயிரம் ரிஷிகள் தபசுசெய்துகொண்டிருந்தார்கள். அப்படி நிகழுங்கா லோர்நாள் சங்கங்கூடி புண்ணியகதைகளையும் எளிதில் முத்தியடையும்வழியினதினதெனவும்வினவி ஆராய்ந்து கொண்டிருந்தார்கள். அத்தருணம் பௌராணிகோத்தமரும் வியாசசிஷ்யருமான சூதரவண்வர சௌனகாதியர் அர்க்கியபாத்தியாசமனாதிகள்கொடுத்து உபசரித்து சுத்தமான தெர்ப்பாசன மளித்திருக்கச்செய்து, வாரீர்! சகலபண்டித தத்வக்யானியாகிய சூதரேதங்களிடத்தில் யெங்களை நெடுநாளாக ஒருவிஷயங் கேட்கவேண்டுமென்ற ஆவல்தூண்டிக் கொண்டேயிருந்தது, அந்த ஆவல் இன்றுதான் பூரணமாகும்போலத் தோற்றுகிறது, அதென்னெனில், முத்திக்காதாரமாயிருக்கும் க்ஷேத்திரங்களிற் சிறந்தபுண்ணியக்ஷேத்திரமிதுவெனவும், புண்ணியதீர்த்தங்களிற் சிறந்ததிதுவெனவும், அச்சேத்திரங்களில் யாத்திரைசெய்பவர் பலனையும், தீர்த்தத்திற்குடைபவர் பலனையும் எங்களுக்கு விளங்குமாறு நன்குறவெடுத்துரைக்க வேண்டுமென்றனர். அதைக்கேட்ட சூதமுனிவர் தன்குருவாகிய வியாசபகவானை வணங்கி, ஹே, முனிசிரேஷ்டர்களே, நீங்கள்கேட்ட கேள்வையினால் நான் அத்தியந்தசந்தோஷத்தை யடைந்தேன் நானுங்களுக்குச் சொல்லத்துணிந்த விக்கதையை யிதுகாறும் ஒருவருக்கு முறைத்

திலன் ஆயினுமிப்பொழுது நான் உங்களுக்குச் சொல்லப்போகிற படியால் அதிபத்திவிநயத்தோடு கேட்கவேண்டுமென்றுசொல்லிக் கீழ்வருமாறுபோதிக்கத்தொடங்கினர். க்ஷேத்திரங்களிற்சிறந்தது இராமேஸ்வரம் தீர்த்தங்களிற்சிறந்தது இராமசேது. இந்த இராம சேதுவை யோர்தடவைதரிசித்தவன் ருத்ரகல்பம்வரைக்கும் சகல சுகவைபவங்களை யனுபவித்து மாதுர்பிதுர்வர்க்கத்திற் கோடி குலத்துடனே மோட்சசாம்பிராஜ்யத்தை யடைகிறான், சேது வைத்தரிசித்தவன் இவ்வுலகத்தின் கண் மோட்சத்தைவிரும்பி யென்னென்ன செய்கிறார்களோ அவைகளையெல்லா மின்னவன் அடைவா னென்பதில் ஐயமேகிடையாது, அன்றியும் யாராவ தொருவனைப்பார்த்து நீசேதுயாத்திரை போவென்று சொல்லு கிறவன் அடையும்பலனை இரண்டாயிரம் நாவைப்படைத்த ஆதி சேடனுலுஞ் சொல்லில் அசாத்தியமென்னில் ஓர் நாவைப்படை த்தயானு சொல்லவல்லவன் சேதுஸ்நானம் பண்ணுகிறவன் சகல பாபங்களினின்றும் விடுபட்டு விஷ்ணுலோகமாகிய ஸ்ரீவைகுண் டத்தையடைகிறான் இன்னும் சேதுஸ்நாநம் பண்ணினவன் (1) மூஷாவஸ்தை (2) வஸாகூபம் (3) சுவபட்சம் (4) மூத்திரபானம் (5) சல்மல்லியாரோகணம் (6) இரக்தபோஜனம் (7) கிருமிபோ ஜனம் (8) சுவமாம்சபோஜனம் (9) அக்கினி ஜ்வாலாபிரவேச னம் (10) சிலாவிருஷ்டி (11) வன்னிவிருஷ்டி (12) காலசூத்திரம் (13) க்ஷாரோதகம் (14) உஷ்ணதோயம் (15) அதச்சிரசோஷ ணம் (16) க்ஷாரஸேவனம் (17) பாஷாணயந்திரபீடை (18) மருப் பிரபதம் (19) புரீஷலேபனம் (20) கிருகசதாரணம் (21) ரேத சுபானம் (22) சந்திதாகனம் (23) அங்காரசையாப்பிரமணம் (24)

---

(1) ஈயம்போல உருக்குகிறநரகம் (2) ஊன் நிறைந்த கிணறு (3) நாயைவிட்டுத் தின்னச்செய்தல் (4) மூத்திரத்தைக்குடிப்பிக்கிறது. (5) முள்ளிலவமரத்திலேற்றுகிறது (6) இரத்தத்தைப்புஜிக்கிறது (7) புழு வைத்தின்கிறது (8) நாய்மாமிசத்தைத்தின்கிறது (9) நெருப்புஜ்வாலை யிலே பிரவேசிக்கிறது (10) கல்மழை (11) நெருப்புமழை (12) யமபா சத்தாற் கட்டுகிறது (13) உப்புஜலம் (14) சுடுநீர் (15) தலை கீழாகத் தொங்கவிடுகிறது (16) உப்பைத் தின்கிறது (17) கல்செக்கிலரைக்கிறது (18) தண்ணீரில்லாவிடத்திற் றள்ளுகிறது (19) மலத்தை புஜிக்கிறது (20) இரம்பத்தாலறுக்கிறது (21) விந்துவைக் குடிக்கிறது (22) தேக மூட்டுகளில் நெருப்புவைத்துக்சொளுத்துகிறது (23) நெருப்புப்படுக்கை யிற் போடுகிறது (24) உலக்கையாலடித்து நொறுக்குகிறது.

முசலமர்த்தனம் (25) பகுகாஷ்ட யந்திரகர்ஷணம் (26) சாஸ்திர பேதனம் (27) பதனோத்பதனம் (28) கதாதண்ட நிபீடனம் (29) கஜதந்தஹனனம் (30) நானாபுஜகதம்சனம் (31) தூமபானம் (32) பாசபந்தம் (33) நானாசூல நிபீடனம் (34) க்ஷாரோதக நிஷேசனம் (35) நாசிகாக்ஷாரோத நிஷேசனம் (36) க்ஷாராம்புபானம் (37) தப்தாயசூசிபட்சணம் (38) க்ஷாராம்பு பூரணரந்திர பிரவேசனம் (39) மேஹபோஜனம் (40) ஸ்நாயுச்சேதனம் (41) ஸ்நாயு தாகனம் (42) அஸ்திபேதனம் (43) சிலேஷ்மாதனம் (44) பித்த பானம் (45) மஹாதிக்த நிஷேவணம் (46) அத்யுஷ்ணதைலபாணம் (47) கஷாயோதகபானம் (48) தப்தபாஷாணபோஜனம் (49) அத்யுஷ்ணவலிகதாஸ்நானம் (50) தசனமர்த்தனம் (51) தப்தாயசயனம் (52) சந்தப்தாம்பு நிஷேவணம் (53) சூசிபிரக்ஷேபணம் (54) சிச்நாயோபார பந்தனம் (55) விருஷணாயோபார பந்தனம் (56) விருக்ஷாத்திரபதனம் (57) தீக்ஷணதாராஸ்திரசையை முதலான கொடிய நரகங்களைக் கனவிலும் பார்க்கிறவனேயல்லன். வழிபறிப்போன், பிராமணர்களையும், வித்துவான்களையும், பெரியோர்களையுந் தூஷிக்கிறவன், பதிதனுடைய அன்னத்தை யுண்டவன், பசுவையடித்தவன், ஔபாசனத்தைவிட்டவன், சுரா

(25) மரச்செக்கி லாட்டுகிறது (26) ஆயுதத்தாற் குத்துகிறது (27) கீழுமேலுமெறிகிறது (28) பெருந்தடியா லடிக்கிறது (29) யானைத் தந்தத்தால் மோதுகிறது (30, பாம்பாற்கடிக்கச்செய்கிறது (31) புகையைக் குடிக்கிறது (32) கயற்றால்கட்டுகிறது (33) சூலங்களாற் குத்திவருத்துகிறது (34) முகத்தில் உப்புஜலத்தை வாரியடிக்கிறது (35) மூக்கில் உப்புஜலத்தை வார்க்கிறது (36) உப்புஜலத்தைக் குடிக்கச்செய்கிறது (37) காச்சின ஊசியை விழுங்கச்செய்தல் (38) உப்புஜலக்குழியில் மூழ்குதல் (39) ஆண்குறியைத் தின்னச்செய்தல் (40) நரம்புகளை வெட்டுகிறது (41) நரம்புகளையெறிக்கிறது (42) எலும்பைவெட்டுகிறது (43) கபத்தைத் தின்னச்செய்தல் (44) பித்தத்தைக் குடிக்கச்செய்தல் (45) கசப்பை யுண்கச்செய்தல் (46) காச்சின எண்ணெயைக் குடிக்கச்செய்தல் (47) அழுகின இலையின்சாற்றைக் குடிக்கச்செய்தல் (48) சுட்டகல்லை விழுங்கச்செய்தல் (49) சுட்டமணலில் புரட்டுதல் (50) பற்களாற் கடிக்கச் செய்வித்தல் (51) காய்ச்சின இரும்பிற் படுக்கவைத்தல் (52) கொதித்த ஜலத்தில் மூழ்கச்செய்தல் (53) ஊசியின்மேலிருத்தல் (54) ஆண்குறியிலிரும்புக்குண்டுகளைக் கட்டிவிடுதல் (55) விருஷ்ணத்தி லிரும்புக்குண்டுகளைக் கட்டிவிடுதல் (56) மரத்தினுச்சியிலிருந்து தள்ளிவிடுதல் (57) கூர்மையான ஆயுதங்களின்மேற் படுக்கச்செய்தல்.

பானம் பண்ணினவன், சுராபானம் பண்ணும் ஸ்திரீயைப் புணர்ந்தவன், தாசிகள் வீட்டிலுண்போன், சகோதரி, நாட்டுப்பெண், குருஸ்திரீ, சகோதரன்மனைவி, மித்திரன் மனைவி, ஈனஜாதியிலுற்பவித்தபெண், இவர்களைப் புணர்ந்த அனருகர்களாகிய பாதகர்களுமோர்தடவை இச்சேதுவில் நீராடிவளவிலேயேதங்கள்பாவங்களெல்லாந் தவிர்த்து மோக்ஷசாம்பிராஜ்ஜியத்தை அடைவார்களென்றால், இச்சேதுவைப் பற்றி விசேஷித்துச் சொல்வதேதேனுமுண்டோ? இந்த ராமசேது விற்கேகத் தம்மிடம் பொருளில்லாவிட்டால், யாசகஞ் செய்தாயினுஞ் செல்ல வேண்டும், யாத்திரை செய்யும்படியாக, யாசகமளித்தவர்களும், மேற்கூறிய பலன்களையெல்லாம் அடைவார்களிதிற் சந்தேகமில்லை. நான்கு யுகங்களிலும், ஞானத்தினுலும், யாகத்தினுலும், தானத்தினுலும், முறையே மோக்ஷமடையப் பெற்றிருக்கிருர்கள். இந்த நாலு யுகங்களிலும், சேதுஸ்நானத்தால் மோட்சமென்று சூதமுனிவர் சொல்லக்கேட்டுச் சௌனகாதியர்கள் அடங்காத பெருமகிழ்ச்சியடைந்து, சூதரைப்பார்த்து மஹாநுபாவரே ! சேது என்ருலென்ன, அச்சேதுவின் விர்த்தாந்தத்தையும், அச்சேது மயமாகிய கந்தமாதன பருவதத்திலடங்கிய தீர்த்தங்களின் ரெருகையையும் அந்தத்தீர்த்தங்களின் வரலாற்றையும் பலனையுமெடுத்துரைக்க வேண்டுமென்றனர். அதைக்கேட்ட சூதபுராணிகர் தன் குருவினடியைச் சிரமேற்பதித்துக் கூறுவதாயினுர்.

முதலாவது அத்தியாயம் முற்றிற்று.

இரண்டாவது

சேதுவுண்டான விதமும் அங்குள்ள முக்கிய தீர்த்தங்களின் பெயருமுரைத்த அத்தியாயம்.

எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

கடிகமழ்ப்பூங் கமலமலர்த் திருவைமீட்டக் கவிச்சேனை வெள்ளமொடு கருது பத்து, முடிநிலமீ சறுந்தசுரன் வீழக் கையில் மூரிபெரும் வில்லேந்தி முடிகிச் சென்ற, படிபரவும் ராமனுக்கு நளனன் ஞளிற் பருப்பதத்தா லணைவகுத்த பண்பு மார்ந்த, இடமகன்ற வெல்கையினற் ரெருகையுந் தீர்த்தத் தெழிற்ரெருகையும் விரித்தெடுத்திங் கிசைப்போம் மாதோ.

சேது என்பது அணை அல்லது பாலம் இச்சேதுவின் வரலாறென்னவெனின் ஆதியால் ஸ்ரீராமமூர்த்தியானவர் தசரத மஹாராஜனுகிய தன்றந்தையினுரையால் தம்பதி சமேதராய் இலட்சுமணனேடு தண்டகாரணியம் வந்து பஞ்சவடியிலோர் பன்னசாலையில் வீற்றிருக்குங் கால்மாரீசன் மாய்கையால் இராவணன் சீதையை யெடுத்துக்கொண்டு செல்ல, மனம் வருந்தித்தன் றேவியைத் தேடிக் கொண்டு, பம்பாநதிக்கரையில் வந்து, அனுமனென்னுமோர் வானரத்தலைவனைச் சிநேகங்கொண்டு தன்னைச் சரணமடைந்த சுக்கிரீவனுக்காக அன்னவன்றமைமயனுகிய வாலியைக் கொன்று சுக்ரீவனுக்குப் பட்டங்கட்டி அவன் சிநேகத்தையுங் கைக்கொண்டு நாலாபக்கங்களிலுந் தன்மனைவியைத் தேட வானரப்படைகளை யேவிக்கடையில் அனுமனுல் இராவணனுடைய அசோகவனத்திற் சீதையானவ ளிருக்கிறளெனக் கேள்வியுற்று இராவணனுடன் யுத்தஞ்செய்து தன்றேவியை மீட்டிக் கொண்டு வர, தாம் வானரசைனியங்களுடன் கடலைத்தாண்டி இலங்கைக்குப் போகும்படி விசுவகர்மாவின் ஔரஸ புத்திரனுகிய நளனுல் வானரங்களாற் கொண்டு வரப்பட்ட மலை கொடி இலை. முதலானவைகளை போட்டுக்கட்டப் பெற்றதே சேது வெனப்படும் அது பத்து யோசனை அகலமும் நூறுயோசனை நீளமுமுள்ளது இது தான்சகல பாபவிமோசனத்திற்கு மேற்பட்டது இந்தச்சேதுகட்ட ஆரம்பித்த இடமே யிப்பொழுது சேதுமூலமென்றும் தர்ப்பசயனமென்றும் வழங்கிவருகிறது இந்தச் சேதுவிற் புண்ணியதீர்த்தங்கள் கணக்கில்லா திருக்கின்றன அவைகளின் கணக்கையும் பெயரையு மொருங்கே சொல்லுதற்கு ஆதிசேடனுலு முடியாது ஆபினு மவற்றுள் பிரதானமான இருபத்திநாலு தீர்த்தங்களைச் சொல்லுகின்றேன் அவைகளாவன; சக்கிர தீர்த்தம், வேதாள தீர்த்தம், பாபவிநாச தீர்த்தம், சீதாகுண்டம், மங்கல தீர்த்தம், அமுததீர்த்தம், பிரமகுண்டம், அனுமகுண்டம், அகஸ்தியதீர்த்தம், இராமதீர்த்தம், இலட்சுமணதீர்த்தம், ஜடாதீர்த்தம், இலட்சுமிதீர்த்தம், அக்கினிதீர்த்தம், முனிதீர்த்தம், சிவதீர்த்தம், சங்கதீர்த்தம், கயாதீர்த்தம், கங்கைதீர்த்தம், யமுனுதீர்த்தம், கோடிதீர்த்தம், சாத்தியாமுததீர்த்தம், சர்வதீர்த்தம், தனுக்கோடிதீர்த்தம், இந்த இருபத்துநான்கு தீர்த்தங்களின் பெயரைச் சொல்லிவிட்டேன் இனிமே லொவ்வொரு தீர்த்தத்தின் வரலாறையும்

பலனையு மெடுத்துரைப்பே னதிக பத்தி சிரத்தையோடு கேட்பீர்களென்று சொல்லத்தொடங்கினர்.

இரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

மூன்றவது அத்தியாயம்.

சக்கர தீர்த்தம்.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பக்குவமிகுந்த காலவமுனியைப் பாதகஞ்சே ரொருவசுரன்
சிக்கெனப்பிடிக்கமாலவிராழிசென் றவன்சிரங்கொய்துதிரும்பித்
தக்கபல்வரங்கண் முனிவனுக்கீந்து சலதியில்முழுகவப் பெயராற்
சக்கரதீர்த்த மெனவிளங்கியவோர் தன்மையுஞ் சிறப்பையுமுரைப் [பாம்.

இந்தத் தீர்த்தத்தில் ஆதியில் தருமதேவதை ஸ்நாநம்பண்ணி முக்கண்ணனுகிய பரமேச்சுரனை நோக்கித் தபசுபண்ண அன்னவர் பார்பதி சமேதராய்ப் பிரத்தியட்சமாகத் தோன்றினர். அது கண்டு தருமதேவதை, ஆதிமத்தியாந்தரகித! மான்மழு சதுர்ப்புஜ! திரிநேத்திரதரா! சர்வபரிபூரண அகண்ட சச்சிதானந்த சொரூப! உம்மை நமஸ்கரிக்கின்றேன். சிருட்டி, திதி, சம்மாரம், திரௌபவம் அருளல் என்னும் பஞ்சகிருத்தியங்களுக்குத் தலைவராயுள்ள உம்மை நமஸ்கரிக்கின்றேன் என் றின்னும் பலவிதமான ஸ்தௌத்தியங்களைப் புரியாநிற்கக்கண்டு தருமதேவதையே நீ புரிந்த ஸ்தௌத்தியங்களால் நான் மிகுந்த புளகாங்கிதங் கொண்டேன் நினக்கு யாதிச்சையென, உமாபதி நான் உமக்கு வாகனமாக வேண்டுமென்ன, ஈசன் றருமதேவதையின்பேரிற் கிருபைகூர்ந்து, அப்படியே யெனக்கு வாகனமாகக்கடவாய் நீ இப்பேர்ப்பட்ட மகா சிலாக்கியமான வரத்தையேற்றது இந்தத் தீர்த்தத்தில் ஸ்நாநம் பண்ணினதினு லன்றோ? ஆகையா லின்றுதொட்டு தரும புட்கரணியென நின்னுமங்கொண்டு வழங்குக யாமிதற்கு வேண்டிய வரங்களையு மளிததோம், என்று சொல்லித் தரும தேவதையாகிய ரிஷப வாகனத்தி லாரோகணித்து அந்தரத்தானமாயினர். அக்காரணம்பற்றித் தரும புட்கரணியெனப் பேர் வாய்ந்திருந்தது பின் தவத்தினிற் சிறந்த காலவமா ரிஷியென்

பவர் பைந்துள வணிந்த பரந்தாமனை நோக்கிப் பதினுயிரம் வருடம் தபமிழைக்க, அன்னவர் இலக்குமிசமேதராய்ப் பிரசன்னமாகி காலவமாரிஷிக்கு வேண்டிய வரங்களையளித்து ஹே முனியே! நீர் உம்முடைய கர்மசரீரம் விடுபடும்வரை தபசு பண்ணிக் கொண்டிரும் ஏதாகினும் உமக்குக் கெடுதிநேரிடும் விஷயத்திலெமது சக்கரத்தையனுப்பி அக்கெடுதியை விலக்கிக் காப்பாற்றுவதோடு கடையிலெமது பதத்தையுந் தந்தருளுவோமெனச் சொல்லி மறைந்தருளினர். பிற்பாடு மேற்கூறிய காலவமாரிஷி ஏகாதசியன்று உபவாசமாயிருந்து இராத்திரிக்குக் கண்விழித்து விடிந்து துவாதசியன்று இந்தத் தருமபுட்கரணியில் ஸ்நாநம்பண்ணி ஜெப தபங்களை முடித்துக்கொண்டிருக்குங்கால் ஓர் அசுரன்வந்து காலவமாரிஷியைப் பிடித்திழுத்துத் தின்ன வெத்தனித்தபோது விஷ்ணுவை ஸ்தௌத்தியம்பண்ணி யோலமிட்டார் உடனே பரந்தாமனின் கரத்தினின்று சக்கரம் விடுபட்டுவந்து மேற்படி அசுரனைச் சிரச்சேதம்பண்ணித் தரும புட்கரணியில் மூழ்கி யின்றுதொட்டு யென்பெயரால் சக்கரதீர்த்தமென்று வழங்குகவெனப் பல வரங்களளித்துக் கரியமால் திருக்கரத்திலமர்ந்தது. அன்றுதொட்டு, இதற்குச் சக்காதீர்த்தமென்றும் பெயராயிற்று இந்தத் தீர்த்தத்தை முன் இந்திரனுல் மலைகளைச் சிறகரிந்தகாலத்தில் பயந்தோர் மலையானது இச் சக்கரதீர்த்தத்தினடு வீழ்ந்து தேவிபட்டணத்திலோர் பாதியும் தர்ப்பசயனத்திலோர் பாதியுமாகப் பிரித்துவிட்டது.

திருவாலவாய் க்ஷேத்திரத்தின்கண் வசிஷ்டர் முதலாக இருபத்தினுலாயிரம் ரிஷிகள் சுந்தரேசனை வேண்டி, பஞ்சாட்சரஜபம் பண்ணிக்கொண் டிருந்தார்கள். அப்படியிருக்குங்கா லோர்நாள் கந்தருவகுலத்தி லுற்பவித்த விசுவாவிசுவின் புத்திரனுகிய துர்த்தமனென்னு மொருவன் அநேக கந்தர்வ கன்னியர்களோடு நிர்வாணமாயிருந்து பொற்றாமரையில் ஜலக்கிரீடை பண்ணிக்கொண்டிருந்தான். அப்பொழுது வசிஷ்டர் முதலானோர் மாத்தியாநிக முடிக்கக் கருதி மேற்படி பொற்றாமரைக்கு வர, கன்னியர்கள் வெட்கி ஆடையால் மானங் காத்துக்கொண்டார்கள். துர்த்தமனென்கிறவன் மாத்திரம் நாணமின்றி அதிகச் செருக்கோடு நிற்கக்கண்டு வசிஷ்டர் அடங்காச் சினங்கொண்டு அடே நிர்லஜ்ஜா! நீ யெங்களைக் கண்டாவது வஸ்திரத்தால் மூடிக்கொள்ளாது நாண

மின்றி நின்றமையால் இராட்சதனுகக் கடவாயென்று சபிக்க, சாபம் பெருது நின்ற கன்னியர் பணிந்து வேண்டிக்கொள்ள அன்னவர்களின் மேற் கருணைசுரந்து ஹே, பெண்கள் நாயகங்காள்! உங்கள் கணவன் என்னுடைய சாபப்படி இராட்சத ரூபத்தோடு சக்கரதீர்த்தத்தையடைந்து விஷ்ணுபக்தனுகிய காலரிஷியைப் பிடித்துக்கொள்ள மாலின் சக்கரம்வந்து சிரங்கொய்ய உங்கள் கணவன் முன்னுருவமெய்தி யுங்களை யணைகுவனெனச் சொல்லியேகினர். அவ்வண்ணமே தூர்த்தமன் மேற்கூறிய இராட்சத ரூபமடைந்து விஷ்ணுசக்கரத்தாற் சிரங்கொய்யப்பெற்று முன்னுருவத்தை யடைந்திருக்கிறுன்.

சத்தியலோகத்தின்கண் சரஸ்வதிகாயத்திரி சமேதராய் ரிஷீசுவரர்களோடு பிரமாவானவர் அப்சரஸ்திரீகளின் பரதநாட்டியத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார் அத்தருணத்தில் அலம்புசையென்னுந் தேவதாசியானவள் பார்ப்பவர் மனம் ரமிக்கும்படி நடித்துக்கொண் டிருக்கும்பொழுது காற்ருல் தன்னுள்ளாடை விலக, ரிஷீசுவரர்களெல்லாங் கண்ணுருது தலைகுனிறக்கினர். அவர்களில் விதூமனென்கிற வசுமாத்திரம் தலையிறக்காது நிமிர்ந் தன்னவளின் அவயவங்களைச் சிமிட்டாது பார்ந்துக்கொண் டிருந்தான். அதுகண்டு வேதா சினந்து அவ்விதூமனையும் அலம்புசையையும் மானிடராகச் சபித்தான். அச்சாபத்தைச் சிரமேற்கொண்டவர்களாய் அவ்விதூமன் பாண்டுவம்சத்து ஜெனமேஜெயமகாராஜன் புத்திரன் சதாநீகனுக்குச் சகஸ்திரநீக னெனவும் அவ்வலம்புசை யென்பவள் கிருதவன்மா வென்பவனுக்கு மிருகாவதி யெனவும் பிறந்தார்கள். அவ்விதூமனும் அவ்வலம்புசையும் நாயகனும் நாயகனுமாகி திலோத்மையின் சாபத்தால் அவ்விதூமன் தன் ஞயகியாகிய அலம்புசையைவிட்டு 14-வருடம் பிரிந்திருந்து பின் மிருகாவதியையு மன்னவளீன்ற உதயனென்கிற புத்திரனையும் ஜமதக்கினி முனிவர்மூலமாகப் பெற்று சின்ஞட் பின்னர் தன் மகனுகிய உதயனென்பவனுக்கு தன்னகண்ட ராஜ்ஜியபாரத்தைக் கொடுத்து தம்பதி சமேதனுய் இந்தச் சக்கர தீர்த்தத்தில் வந்து மூழ்கிச் சன்மசாபல்ய மடைந்திருக்கிறுன். அன்றியும் பூர்வகாலத்தில் தேவர்களுக்குத் தன்புத்திரர்களையெல்லாமிரை கொடுத்த திதியென்பவள் தன் புத்திரியைப் பார்த்து நீ தபசு புரிந்து உன் சோதரர்களைக் கொன்ற தேவர்களைப்பழிக்

குப் பழிவாங்கும்படியான ஒரு புத்திரனைப் பெறுவாய் என்று சொல்லச் சினந்து உடனே சென்று எருமையின் உருவங் கொண்டு பஞ்சாக்கினிமத்தியிற் கடுந்தவம் புரிந்து சுபார்சுவனென்னும் ரிஷியால் எருமையுருவமேற்ற மகிஷாசூரனைப் பெற்ருள் அந்த மகிஷாசூரன் மிகுந்த பராக்கிரமமுடையவனுகி மஹாநாதன் - சுசக்ஷு-மஹாஹநு-மஹாசண்டன்-மஹாபட்சன்-மஹோதரன் - மஹோத்கடன் - பஞ்சாஸியன் - பாதசூடன் - பகுநேத்திரன் - பிரபாகுகன் - ஏகாட்சன் - ஏகபாதன் - பகுபாதனென்னும் மந்திரிகளோடு தேவநாட்டிற் சென்று அமர்விளைத்து திக்குப் பாலகர் முதலானோர் பதிகளைக் கவர்ந்துகொள்ள தேவர்களெல்லாந் திரண்டு பரமேசுரன் நாராயணனிவர்களிட முறையிட, கேட்டசிவனாரணர்கள் சினந்து எதிரினின்ற இந்திரன் முதலான தேவர்களை நோக்க அன்னவர்களின் முகங்களிலிருந்து ஓர்வித பயங்கரமான ஒளி உண்டாயிற்று எல்லா வொளிகளுஞ்சேர ஓர் அக்கினி மலையுண்டாயிற்று அம்மலையினின்று ஒவ்வொருவருடைய அம்சத்தினுலுந் துர்க்கையென்னும் பேர்வகித்த ஓர்தேவியுண்டாகி அம்மகிஷா சூரனேடு யுத்தம் செய்து அவனையும்அவன் மந்திரிகளையும் கொன்று தன் பெயரால் ஓர் பட்டணம் நிருமிக்க வேண்டுமென எண்ணி இந்திரனிடஞ் சொல்ல அன்னவன் முதலான தேவர்கள் தர்மபுஷ்கரணியாகிய இந்த சக்கர தீர்த்தத்தில் அமுதம் நிரம்பச் செய்தார்கள் அது பற்றி யிந்த தீர்த்தத்திற்கு அமுததீர்த்தமென்று மோர்பேருண்டு அப்பால் தன்னுலேற்படுத்தப்பட்ட பட்டணத்திலுள்ள பசுமுதலான சகல பிராணிகளும் வியாதிமுதலானது எய்தாமலும் இந்தத் தீர்த்தத்தில் நீராடினவர்களுக்கு நினைத்தவைகள் கைகூட வேண்டுமென்றும் வரமளித்துத் தன்பதியேகினள். தேவியினுலுண்டாக்கப்பட்ட அப்பட்டணத்திற்கு தேவீபட்டணமென்று பெயர் மனிதர்களெங்கிருந்து வந்தாலும் இந்தச்சேது மூலத்திலும் சக்கரதீர்த்தத்திலும் ஸ்நாநம் பண்ணிவிட்டுத் தான் சேதுவுக்குப் போக வேண்டும் இந்த அத்தியாயத்தை படிப்பவர்க்கும் கேட்பவர்க்கும் சகல வைபவமுங் கிடைக்குமென்பதி லையமேயில்லை.

மூன்ருவது அத்தியாயம் முற்றிற்று.

நான்காவது அத்தியாயம்.

வே த ா ள தீ ர் த் த ம்.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

பொற்பிலுயர் காலவமா முனியளித்த காந்திமதிப் பூமின் றன்னை
விற்பனகந் தருவகுல சுதரிசனன் மருவுதலை விரும்பி மேவி
வற்புறுத்தக் கண்டமுனி வேதாள மாய்ச்சபிக்க வாய்ந்து பின்னோர்
அற்பகலில் முன்னுருவம் பெறப்புரிவே தாளதீர் த்தமுறைகு வோமால்

மேற்கூறிய சக்கர தீர்த்தத்தில் ஸ்நாநம் பண்ணின பிறகு தான் இதற்கு வரவேண்டும். பூர்வகாலத்தில் பரமதியானத்திலேயே புத்தியைச் செலுத்தினவரான காலவ மஹரிஷிக்குக் காந்திமதி யென்னும் ரூபலாவண்யமுள்ள ஓர்புத்திரி யிருந்தாள். அக்காந்தி மதியென்னும் பெண் ஓர்நாள் தன் பிதாவுக்குப் பூஜை முதலான கிருத்தியங்களுக்குப் புஷ்பங் கொண்டுவரப் போன பொழுது, அவ்வழியாய், விமானத்திலேறிச் சென்ற சுதரிசனன், சுகர்ணன் என்னும் இரண்டு வித்தியாதர குமாரர்களில், மூத்தவனை சுதரிசனன் கண்டு மயங்கி புணரும்படியாய்ப் பலாத்காரஞ் செய்ய, அப்பெண் உடன் படாதவளாகிச் செல்ல மோகத்தால் கண் தெரியாதவனாகி அன்னவள் சிகையைப்பற்றி யிழுக்க, பிதாவைக் கூய்க் கூக்குரலிட்டாள். அது தெரிந்து வந்த காலவமஹாரிஷி பார்த்துக் கோபமீறி சுதரிசனனை மானிடப் பிறவியாய்ப்பிறந்து அப்பிறவியிலேயே வேதாளரூபத்தை யெய்தும் படியாகச் சபித்து அருகில்நின்ற சுகர்ணனை நீ யிதற்குச் சம்மதித் திருந்தவனாதுபற்றி நீ மானிடப் பிறவி யெய்தி சீக்கிரம் விக்ஞபதி கௌதுகனால் நின்முன்னுருவம் பெறுவாயாக என்றுசபித்தனர் அவ்விருவர்களும் இச்சாபத்தினின்று விடுபட அசாத்தியமானவர்களாகிய முனைநதிக்கரையில் வாசம்பண்ணிக் கொண்டிருந்த கோவிந்தசாமி யென்னும் பிராமணனுக்கு சுதரிசனனும், சுகர்ணனும், விஜயன், அசோகதத்த னென்றும் பெயர் வகித்தவர்களாய் முறையே பிறந்தார்கள். இவர்கள் பிறந்த அதிர்ஷ்டத்தினாலோ அல்லது எதுகாரணம் பற்றியோ அந்நாட்டில் பன்னிரண்டு வருஷம் மழையில்லாது க்ஷாமகால மேற்பட, கோவிந்தசாமி தன் பத்தினியோடும் பிள்ளைகளோடும் காசியை நோக்கிச் செல்லுகையில்

அவ்விடத்தில் ஓர் ஆலமரத்தின் கீழுற்ற கபாலமாலா பரணனென்னும் முனியை வணங்கி அன்னவரால் தனக்குந் தன்பிள்ளைகளுக்கும் பந்தத்வம் நீங்கிவிடுமெனச் சொல்லக்கேட்டு விசனமுற்று ஓர் பாழ் மண்டபத்தை யடைந்து தாயும் அசோகதத்தனும் அம் மண்டபத்தினோர் புறத்தில் படுத்துக் கொண்டும் தந்தையும் விஜய னும் ஓர் புறத்தில் படுத்துக் கொண்டும் நித்திரை செய்தார்கள். கொஞ்சநேரஞ் சென்றபிறகு விஜயனுக்கு சுரமுங் குளிருமுண் டாக அதைத்தணிக்கும் பொருட்டு நெருப்பு வேண்டு மென்று விஜயன் விரும்ப, அதற்கிணங்கிக் கோவிந்தசாமி யெனுந் தந்தை யெங்குந் திரிந்தலைந்து நெருப்புக்கிடைக்கவில்லையென்று சொன்னான். அதைக் கேட்ட மைந்தன் நீ சொல்வது சுத்த அபத்தம் அதோ ஒருபெரிய வெளிச்சம் தெரிகிறதே யென்றான். அதற்குப் பிதா அது சுடுகாட்டின்தீ அதைத்தீண்டில் ஆயுள் க்ஷீணித்துவிடு மென்றான். அதைக்கேட்ட மைந்தன் பிதா அங்கு சென்றாலல்லது இக்குளிர் விடாதென்றான் அதற்கிசைந் திருவரும் பிணமெரிந்து கொண்டிருக்கிற தணலுக்கு முன்பாகப் போன வுடன் சற்று குளிர் நீங்கிற்று. அப்படி நீங்கினவுடன் கபாலத்தைப்பற்றி யெரிந்து கொண்டிருக்கிறதை நோக்கி ஈதென்ன கமலம்போ லெரிகிற தென்றான். பிதா மண்டையிற் பற்றி யெரியும் தீ யென்றான். அப் பொழுது விஜயன் ஒருதடியினல் அம்மண்டையிற் புடைக்க உடைந்து தன் முகத்திற் சிறிய மூளையை நக்கினவுடன் செம்மட்டமயிரும் கறுத்த தேகத்தையுமுடைய வேதாளரூபத்தை யடைந்து அப்பிணத்தின் மேல்விழுந்து தின்னவெத்தனித்தான் அதைக்கண்டபிதா பயந்தோடி கிரம்பவிசனக் கடலிலாழ்ந்தினன். பின்வேதாளரூபமெழுநினவன் கபாலத்தை யுடைத்தது பற்றிக் கபாலஸ்போடகனெனப் பெயரேற்று ஆங்குவேதாளங்களுக்கு அரசனை நாஸ்திபூஷணனுக்கு சேனைதிபதியாய் இருந்தான் சிலநாட்பின்னர் நாஸ்தி பூஷணன் மகா பராக்கிரமசாலியானசித்திரசேனனால் மாண்டபின் தானே அச்சேனைகளுக்கரசனானன். பின்னர், அசோகதத்தனுக்கும் இவ்வேதாளத்திற்கும் ஓர் சொர்ணத்தாமரைத் தடாகத்தினலமர்விளைந்தது அந்தப்போரில் அசோகதத்தன் வேதாளத்தினுடைய சகலபடைகளையுங் கொன்று கடைசியில் இந்தவேதாளத்தையுங் கொல்ல ஆரம்பிக்குங்கால், விஞ்ஞப்தி கௌதுகனென்னும் வித்தியதரன் விண்ணில்நின்று,

கொல்லவெத்தனிக்காதே அவன் உன்தமையனென, காலவரிஷி சாபத்தின்படி இவ்வுருவிட்டுத் தன் சுயரூபத்தை யடைந்தான். பின்தன் றமையனாகிய வேதாளத்தை கூட்டிக்கொண்டு விக்ஞப் திகௌதுகன் சொல்லியபடி சேதுவிலுள்ள வோர்தீர்த்தத்தின் கரையணுகியபோது காற்றினால் அலைப்புண்டு ஓர்துளி இந்த வேதாளத்தின் மேற்பட்டவுடன் பழைய சுதரிசன வுருவமெய்தி நின்றான் அதுகண்டு சுதரிசனனும்மிகுந்த சந்தோஷமுடைத்தான வர்களாகி அந்தத்தீர்த்தத்திலாடிச் சங்கற்பமுதலானது முடித்துத் தம்பழையபதியை யடைந்தார்கள். வேதாளத்தின் உருவத்தை விமோசனஞ்செய்ததா லிதற்கு வேதாளதீர்த்தமெனப் பேராயிற் று. இந்தத் தீர்த்தத்திற்கு சமத்துவமா யெங்குங்கிடையாது. இதிற்குடைந்தவர்கள் வேண்டிய சித்திகளை அடைவார்கள்.

நான்காவது அத்தியாயம் முற்றிற்று.

ஐந்தாவது அத்தியாயம்.

பாவநாச தீர்த்தம்.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

அந்தணர்தங் குலத்தில்வரு சுமதியெனு மோர்வரன்முன் னறிய வேத, மந்திரங்கள் கடைக்குலமார் திடமதிக்கு வகுத்துரைக்க மயலே யே ற்றும், விந்தையுட னிழிகுலத்தோன் முறைபிறழ்ந்து மறையுணர்ந்த வித த்தினாலும், வந்தகொடும் பவங்கணசித் தப்பெயர்கோ னீர்ப்பெருமை வகு த்துச் சொல்வாம்.

இதற்குமுந்தின அத்தியாயத்திலுரைத்த வேதாளதீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணின பிறகுதான் கந்தமாதனகிரிக்குப் போகவேண் டியது. கந்தமாதனமானது அநேக புண்ணிய தீர்த்தங்களுக்கும் சகல தேவகணங்களுக்கு மிருப்பிடமாயுள்ளது. இதுபிரமலோ கத்திற்குசெல்லும் மார்க்கமாக விஸ்வகர்த்தாவால் நியமிக்கப் பட்டுள்ளது. இந்தக்கந்தமாதன கிரியைப்பார்த்த அளவிலேயே விலகாத சகல கொடியபாவங்களுமிரியும். மேலும் இந்தமலையிலி ருந்து வீசுங்காற்று சரீரத்திற்படுமாயின், உடனே சிசுவிர்த்திமுத லான சகலஹத்தியினின்றும் விடுபட்டவனாகிறான். இப்பேர்ப்பட் ட இந்தமலையின் கண்ணுள்ளது பாவநாசமென்னு மிப்புண்ணிய

தீர்த்தம், முன்திடமதி யென்னுஞ் சூத்திரன் பிரமா புரியென்னும் க்ஷேத்திரத்தின்கண் வசித்த, தவசிரேஷ்டர்களிடஞ் சென்று தனக்கு யாகதீட்சை செய்து வைத்தருளுமென மிகப்பணிதலோடுகேட்க, அம்முனிவர்கள் கேட்டு, வியாகரணம், அலங்காரம், இதிகாசம், புராணம், காவியம், நாடகம், இவை முதலானவைகளைத் தாழ்ந்த குலத்திலுதித்த சூத்திரர்களுக்கு உபதேசம் செய்யலாகாதெனச் சொற்று மறுத்தார்கள். அதைக்கேட்ட திடமதி மிகுந்த சிந்தாகுலத்தனாகி வேறொரு ஆச்சிரமத்திற்குச் சென்று அங்குள்ள சுமதியென்னு மோர்பிராமணனால் யாகதீட்சைபெற்று யாகாதிகிருத்தியங்களைச் செய்து கொண்டிருந்தான். இப்படி தாழ்ந்தகுலச் சூத்திரனுக்கு உபதேசித்த சுமதியென்னும் பிராமணனை ஆங்குள்ள மற்ற பிராமணர்கள் தங்கள் கூட்டத்தினின்றும் விலக்கி விட்டார்கள் பின்னிந்த சுமதியென்னும் பிராமணன் இறந்து அநேகங்கோடி நாய் கழுதை முதலான இழியஜென்மங்களிற் பிறந்து பிறந்து கொடிய நரகங்களில் அழுந்தி பின் பிராமணகுலத் தவதரித்து ஏழாவது வயதில் வனத்திற்கேகிய பொழுது பைசாசத்தாற் பீடிக்கப்பட்டு அலைந்து திரிந்தான். அதைக்கண்ட அன்னவன் றந்தை மனம் வருந்தி ஆகத்தியமா முனிவரிடம் தன் புத்திரனை அழைத்துக்கொண்டு சென்று தன் புத்திரனுக்குநேர்ந்த சங்கடங்களைச் சிரமேற் காங்குவித்தனுய் நின்று சொன்னான் அதைக்கேட்ட முனிவர் பரிந்துரைத்த இத்தீர்த்தத்தில் மூழ்கிவிமோசனத்தை யடைந்தான் பின், நியாய விரோதமாய்ப் பிராமணனிடம் உபதேசம் பெற்றுக்கொண்ட திடமதியென்னுஞ் சூத்திரன் கழுதையாகப்பிறந்து மல முதலிய வஸ்துக்களைத் தின்றுகொண்டு திரியுங்கால் ஓர்நாள் தற்செயலாய் தாகத்தினால் வருந்தி இத்தீர்த்தத்தி லிறங்கித் தண்ணீர்குடித்த மாத்திரத்திலேயே இவ்வுருவம் நீங்கித் தேவசொரூபமடைந்து விண்ணில் விமானத்தி லியங்கிச் சென்றனன், இந்தத் தீர்த்தம் சகல பாபங்களையும் பார்த்த அளவிலேயே நாசப்படுத்துந்தன்மையை யுடைத்தாயிருப்பது பற்றி பாவநாச மென்னும் பெயரை யேற்றது இது மகா உத்தம சிலாக்கியமான தீர்த்தம் இதிற்குடைபவர்கள் மேலான வீட்டின் இன்பத்தை அநுபவிப்பாரென்பது சரதமே.

ஐந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

ஆறவது அத்தியாயம்.

சீ தா தீர் த் த ம்.

எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

காவளஞ் செறியு மிலங்கைமா வரசன் கருதிமுன் னெடுக்கப் பின் மீட்ட
தேவிதன் கற்பு நிலைமையை யுலகோர் தெரிந்திடத் தசரத பூப
னுவிநேர் மூத்த குமரனி னுரையா லழற் புகுந் தனைவரும் புகழ
மாவியப் பாய நிலையுறுத் தலத்தை வரைந்தனர் சீதை குண் டமதாய்.

இதுவுமது.

அவ்வண மழலிற் புகுந்தபின் றன மாற்றிட வமைத்தவப் புனல் வான்
றெவ்வர் தங் குலத்தில் வருசுசீ லையின்மா தேசுயர் சுசிமுனி வனுக்குக்
கவ்வை யோடளிகா பால பரணனைக் கருவிழிச் சதிமண வாளன்
செவ்வைசேர்வாளாற் சிதைத்திடவத்தி சேர்ந்திடத்தீர்ந்ததையுரைப்பாம்.

மேற்கூறிய பரவநாச தீர்த்தத்தில் ஸ்நாநம் பண்ணி விட்டுத் தான் இந்தத் தீர்த்தத்திற்கு வரவேண்டும் பூர்வகாலத்தில் விந்தாரணியத்தில் வசித்துக் கொண்டிருந்த திரிவக்திரனென்னும் இராட்சசனுடைய மனைவி சுசீலையென்பவள் சுசிமுனியினுடைய ஆச்சிரமத்திற்கு வந்து ஹே முனிநாதா, என் கணவன், புத்திரப்பேறடையாததால் என்னைத் தங்களிடஞ் சென்று புத்திரப் பேறடைந்து கொண்டுவரச் சொல்லின ரென்னக்கேட்ட சுசியென்னும் முனிவர் மகிழ்ந்து அச்சுசீலை யென்பவளைத் தன்னாச்சிரமத்தில் மூன்று நாள் வைத்திருந்து கூடிக் கபாலபரணனெனு மோர் பிள்ளையைத் தந்தருளினர் அக்கபாலபரணன் ஆயிரவருடகாலம் பிரமனை நோக்கித் தவமிழைத்து வேண்டியவரங்களைப் பெற்று பல வளங்கள் செறிந்த ஜயந்த மென்னும் பட்டணத்தை சவபட்சணனென்கிற மந்திரியோடு அரசாண்டு கொண்டிருக்குங்கால் ஓர் நாள் தன் மந்திரியைப் பார்த்து ஓ மந்திரி! நான் இந்திரனேடு படைகொண்டு சென்று அன்னவனை வெற்றிகொண்டு நந்தவனத்தில் அப்சர ஸ்திரீகளோடு கேளிவிலாசங்கள் புரிந்து கொண்டிருக்க விழைவுற்றனனென மந்திரி அப்படியே என்று சம்மதிக்க, உடனே ரதகஜ துரகபதாதிகளோடு இந்திரலோகஞ் சென்று போர்செய்து இந்திரனை இருப்புத் தண்டாலடிக்க இந்திரன் மூர்ச்சையாகிக் கீழேவிழுந்தான். பின்னர் தன் குரு

வாகிய பிரகஸ்பதிபகவான் மிருதசஞ்சீவினி யென்னும் மந்திரத்தினால் உயிர்கொடுக்க வேற்று ஐராவதத்திலேறிச் சினந்து பல வீரியங்களைக் கூறி வச்சிராயுதத்தைக் கையிலேந்தி மீறிதன்னேரில் நின்ற கபாலபரணனைக் குத்திக் கொன்றனன். ரிஷிபிண்டமாக ஜனித்த கபாலபரணனைக் கொன்றதினாலே உடனே இந்திரனுக்கு பிரமஹத்திபிடித்தது இந்திரன் மனம்புழுங்கி யெவ்விடஞ் சென்றுந் தீராது பின்றொடருவதைக்கண்டு பிரமனிடம் வந்து தெண்டனிட்டுத் தன் குறைகளைச் சொல்ல பிரமனருள் கூர்ந்து சொன்ன இந்த தீர்த்தத்தில் வந்து மூழ்கிப் பிரமஹத்தி விமோசனம்பெற்று இந்திரலோகஞ் சென்று அரசாண்டிருந்தான். இந்தத் தீர்த்தம் ஆதியில் இராவணனிடமிருந்து மீட்டிக்கொண்டுவந்த சீதாபிராட்டியார் தன் கற்புநிலைமையை உலகம் அறியும்பொருட்டு தசரத சக்கரவர்த்தியின் உயிரனைய சிரேட்டபுதல்வராகிய ஸ்ரீராமபிரான் அநுக்ஞைப்படி அக்கினிகுண்ட மேற்படுத்தி வீழ்ந்த இடமே சீதாகுண்ட மென்னப்படும். அப்படி அக்கினிப் பிரவேசமான பின் ஸ்நானஞ்செய்ய ஏற்படுத்திய தீர்த்தமே அதுவாகும். இதில் ஸ்நானஞ்செய்தவர்கள் அடையும் பலனை யினதினதென விரித்துரைத்த லசாத்தியமானதே.

ஆறாவது அத்தியாயம் முற்றிற்று.

ஏழாவது அத்தியாயம்.

மங்கல தீர்த்தம்.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

மதிகுலத்தி லுதித்தமனோ சவராஜன் மருவலரால் மயங்கி முன்னோர்
நிதிபதி யெலாமிழந்தங் கோர்முனிவ னுறுதிகொண்டு நீங்கிச் சேது
வதிநதியிற் குடைந்த வண்டன் வளையணியா யுதமாடைவழங்கப்பெற்றுப்
பதிகவர்ந்த மாற்றலனை வென்றுபின ரரசாண்டு பாலற் கீந்து.

இதுவுமது.

முன்றனக்குப் பெரும்பேறு கொடுத்தபுன லடைந்துநித மூழ்கித் தில்லை
மன்றினட மிடுபரம னடிபணியுந் தவம்புரிந்து மகிமை யார் வெண்
குன்றடையக் கண்டவன்மா மனைசக்க மனம்புரிந்து குறைவி லாத
தன்றுலி யுடனடிப் பதியடைந்த புனற்பெருமை சாற்று வோமால்.

ஆருவது அத்தியாயத்திற் சொன்ன சீதாதீர்த்தத்தில் ஸ்நாநம்பண்ணிவிட்டுத்தா னிதற்கு வரவேண்டும். சந்திரகுலத்தோன்றலாகிய விக்கிரமாட்டியன் புத்திரனான மனோஜவராஜன் கடல்புடைசூழிந்நிலவலயத்தை மனுநீதியாய்த் தன் மனைவியாகிய சுமித்திரையோடு அரசாண்டிருக்குங்கால் விதிவசத்தினுல் விஷ்ணுசிவாலயங்களின் பொருள்களைக் கவர்ந்தும் குடிகளை வரிமுதலானவைகள் போட்டும் இம்சித்துக் கொடுங்கோலரசு புரிந்தான் அப்படியிருக்குங்கால் தனக்கடங்கிய கௌட தேசாதிபதியாகிய கோலபனென்ற சிற்றரசன் படையெடுத்துவந்து போர்புரிந்து ராஜ்ஜியத்தைக் கைக்கொண்டான். மனோஜவராஜன் தோல்வியுற்றுப் பராரியாத் தன்மனைவியோடும் தன் பிள்ளையாகிய சந்திரகாந்தனோடும் அந்நியதேசத்தை நோக்கிச் சென்று ஒரிருண்ட ஆரணியத்தின்கண் புத்திரன் அன்னபாறைதிகளாற் களைத்துவிழ அதுகண்டு தானும் மூர்ச்சையாகி வீழ்ந்தான். கீழே மூர்ச்சையாகிக் கிடக்கிற இருவர்களையும் பார்த்து அழுதுகொண்டிருக்கிற அரசன் மனைவியான சுமித்திரை அவ் வழியாய் வந்த சத்திபுத்திரரான பராசரை வணங்கி அன்னவரால் தன்னுயகனையும் குழந்தையையும் மூர்ச்சை தெளிந்தெழுந்தருளப் பெற்ருள் பின் தங்களுடைய நிலைமையைச் சொல்ல கிருபைகூர்ந்து பராசரால் சொல்லியதீர்த்தத்திற்கு அன்னவரோடு தாங்கள் சென்று மூன்றுமாதகாலம் ஸ்நாநம் பண்ணிக் கடையில் ஸ்ரீராமர் ஏகாக்ஷரமந்திரத்தை ஜபித்துக்கொண்டிருந்தார்கள் அப்படிச் சபித்ததினுலே அத்தீர்த்தத்தினின்றும் ஆபரணம், ஆடை, கேடயம், பலவித ஆயுதங்கள் வரப்பெற்று மனோசவராஜன் தன் பகைவனுகிய கோலபனைவென்று ராஜ்ஜியத்தைக் கொண்டிருந்து பின்னர் தன் மகனுகிய சந்திரகாந்தனுக்குப் பட்டங்கட்டி விட்டுத் தம்பதிசமேதனுய்த் தன்னை இவ்வளவு மேன்மைக்குக் கொண்டுவந்த தீர்த்தத்தில் மூழ்கி வெள்ளியங்கிரியை அடைந்தான். அதுகண்ட மனைவியாகிய சுமித்திரையும் மங்கலத்திேனுடு மூழ்கித் தன்பதியை யடைந்தாள். மங்கலத்தோடு சக்கமனம் புரிந்ததினுலே இதற்கு மங்கல தீர்த்தமெனப் பெயராயிற்று. இந்த தீர்த்தம் சகல பாவங்களாகிய பஞ்சுக்குவியலுக்கு இதுவோர் நெருப்பாயுள்ளது. மகா சிலாக்கிய தீர்த்தமே.

ஏழாவது அத்தியாயம் முற்றிற்று.

எட்டாவது அத்தியாயம்.

அமுததீர்த்தம்.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

குடமுனியின் சோதரனு ரணவிருடி பனிவரையிற் குறுகிப் பல்காற்
சடவெறுத்து மலமகற்றித் தவமிழைத்தும் பலன்கிடையாத் தகைமைநோக்கி
வடவைநடு வுறவரனு மவணணுகிச் சேதமுத வாரி யாடிற்
புடவிபுக ழெமதுபதம் வருவையெனப் புரிந்தபுனற் புதுமை சொல்வாம்.

மேற்கூறிய மங்கல தீர்த்தத்தில் ஸ்நாநம் பண்ணின பிறகு தான் இந்தத்தீர்த்தத்தில் ஸ்நாநம் பண்ணவேண்டும் இது ஏகாந்த ராமக்ஷேத்திரத்தி லிருக்கிறது. ஏகாந்த ராமக்ஷேத்திர மென்பது முன் அனுமான் சுக்ரீவனோடு ஸ்ரீராமமூர்த்தியானவர். இராவணனைக் கொல்லவேண்டி ஏகாந்தமாயிருந்து யோசித்த இடமே அப்படிப் பேசிக்கொண் டிருக்குங்கால் அலையிரைச்சலால் ஒருவர்க்கொருவர் பேசிக்கொள்ளுவதை அறியாதிருந்தது பற்றித் தன் கோதண்டத்தை வடகடலிலூன்றி அவ்வொலியை யடக்கினர். அன்றுதொட்டு இன்றுவரை அவ்விடத்தில் கடலிரைச்சலடங்கியிருப்பதோடு எந்நாளும் நன்னீர் குமிழிகள் யெழும்புகின்றன அதை உலகத்தார் வில்லூன்றி யெனச் சொல்லுகிறார் பண்டு முத்தமிழ்க்கு வித்தாகியவரும் பொதிகாசலத்தை யிருப்பிடமாயுற்றவருமான அகஸ்தியமாமுனிவர் சோதரரான நாரணரிஷி யென்பவர் பரமனைநோக்கி ஆயிரவருடம் தவம்புரிந்தும் பலன்கிடைக்காததுபற்றி மனம்வருந்தி பஞ்சாக்கினிமத்தியில் நின்று கடுந்தபசுபுரிய மங்கையை யுடற்பங்கினில் வைத்த சங்கரன் பிரத்தியட்சமாகி வேணவரங்களை யளித்து ஹே. முனியே. நீர் வருந்தாதீர் கந்தமாதனகிரியில் மங்களதீர்த்தத்திற்கருகில் அமுததீர்த்தமென்றொன்றுளது. அதிற் சேர்ந்து மூன்றுவருடம் வரைமுழுகித் தபசு செய்வீராகில் உடனே பிரம சொரூபத்தி லைக்கியமாகுவீரென்றுரைக்க நாரணமாரிஷி கேட்டு அடங்காப் பெருமகிழ்வு கொண்டு பல்துதிசளா லீசனைத் தௌத்தியம்பண்ணி, ஈசனுரைப்படியே அமுத தீர்த்தத்திற்கணுகி மூன்று வருடந் தவமிழைத்து மோக்க வீடடைந்தார். இதில் ஸ்நாநம் புரிந்த நாரணமாரிஷிக்கு அமுதத்துவம் கிடைத்ததினுலே இதற்கு அமுததீர்த்த மெனப் பெயராயிற்று (அமுதம்-மோக்ஷம்) கொடிய பாதகரும், பெரி

யோர்களை தூஷித்த சண்டாளர்களும் இதில் குடைவராளுல் சகலபவங்களினின்றும் விடுபட்டு முக்தராவார் இதிற் சந்தேகமே இல்லை.

எட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

ஒன்பதாவது அத்தியாயம்.

பிரமகுண்டம்.

எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

அரியயனு மமர்விளைத்த தருணஞ்சோதி யான்றவழல் மலைநடுவி லமர வஞ்சப், பிரமனுச்சி காணுதற்குச் சென்றுமீண்டு பேசிடப்பொய் யது கண்டு பிறைகங் கொன்றைச், சிரன்கடுத்திவ் வுலகில்நினைப் பூசியாது செய்தனமென் றுரைத்திடநாக் குளறிப் பாடிக், கரங்குவிக்க மனமிரங்கிச் சொன்ன தீர்த்தங் கடிதி லடைந் தயன்குடைந்த கதையைச் சொல்வாம்.

முன் அத்தியாயத்தி லுரைத்த அமுத தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணி விட்டுத்தானிந்தத் தீர்த்தத்திற்கு வரவேண்டும் பூர்வகாலத்தில் சிருட்டி கர்த்தாவாகிய பிரமதேவனும் இரட்சணை கர்த்தாவாகிய விஷ்ணுவும் நானேபெரியவன். நானே கர்த்தாவெனப் பெரும்போர் விளைத்தகாலத்தில் சம்ஹார கர்த்தாவாகியசாக்ஷாத் பரமேசுரன் இவர்கள் கருவத்தை யடக்கும் பொருட்டு சோதிலிங்கமாகத் தோன்றினர் அதுகண்டு பிரம விஷ்ணுக்களிருவர்களும் இதின் அடியையாவது முடியையாவது நமக்குள் எவன் காண்கின்றானே அவனே பெரியவனெனப் பேசி முடித்துக் கொண்டு பிரமன் அம்சமாகி முடியையும். விஷ்ணுவராகமாகி அடியையும் காணும் பொருட்டுச் சென்றனர். அப்படிச் சென்ற இருவர்களில் விஷ்ணு அநேக ஆயிரவருட காலந் தேடியுங் காணாது. வருந்திக் காணவில்லையென உண்மை சொல்லியமர்ந்தனர். பிரம தேவர் தாம் முடியைப்பார்த்து வந்ததாகப் பொய் சொல்ல ஈசன் சடுத்து நீ, நம்மிடம் பொய்சொன்னதினுல் நினை உலகத்தார் பூஜிக்காது செய்தனமென்று சபிக்கக் கேட்ட பிரமன் பணிந்து. பிரபூ! சிறியோர் செய்த சிறுபிழையெல்லாம் பெரியோராகிற் பொருப்பதுகடனே, என்றபடி. மன்னித்துக் காத்தருளவேண்டு மெனச்சிரமேற் கரங்குவித்து அஞ்சலிசெய்ய மனமிரங்கி ஈசன் ஹே! பிரமதேவா, நீ சீக்கிரம் கந்த மாதனத்திற்குச் செ

ன்று யாகங்களைச் செய்வையானால் பொய்சொன்னபாவம் உன்னைவிட்டு நீங்குமென்று சொல்லி அருகில்நின்ற விஷ்ணுவைப் பார்த்து நீ உண்மை யுரைத்ததால் எங்கணும் நமக் கேற்படும் பூஜைகள் போல உனக்கு மேற்படுக எனச் சொல்லி அந்தர்த்தானமாயினர் பின் பிரமதேவன் மகேசுரன் உரைப்படி எண்ணுயிரம் வருஷம் பௌண்டரீகமுதற் பல யாகங்கள் புரிந்து தேவர் முதலானவர்களுக்குப் பூரணாகுதி கொடுக்க அரன் அவணடைந்து பிரமாவைப் புகழ்ந்து நீ பொய்சொன்னதால் நேர்ந்த பாவங்கள் நீங்கிவிட்டன ஆனால் நினக்கு விக்ரகாராதனை கிடையாதெனச் சொல்லி இந்த யாகதலத்திற்கு பிரமகுண்டமென்றும் இதிற் குடைந்தவர்களும் இதிலுள்ள வெண்மிருத்திகையைத் தரித்தவர்களும் சகல புண்ணியங்களைப் பெற்று வாழக்கடவதென வரமளித்து மறைந்தருளினர். அன்றுதொட்டு இதற்குப் பிரமகுண்டமென்று பெயர். இதில் நீராடுவோர் சத்தியசம்பன்னரா யிருப்பார்களென்பதி லையமேயில்லை. யாகமுதலியவை செய்ய விரும்புவோர் இத்தீர்த்தத்தருகேயே செய்யவேண்டியது.

ஒன்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

பத்தாவது அத்தியாயம்.

அநுமகுண்டம்.

எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

தெண்டிரையி னடுவமைந்த விலங்கை வேந்தன் சிரமறுத்த பிரமஹத்தி தீரநோக்கி, அண்டரிறை புகழனுமான் றன்னைநீயே வரியசிவக் குறி கொணர்ந்திங் கடையென் றேவித், தொண்டுசெயத் தாமரம தாகும்போலத் தோற்றுகிற தென நினைந்து தோய்ந்த மண்ணைப், பண்டுமறை நூல் வழிசே ரிலிங்க மாகப் பாவித்துக் கரங் குவித்துப் பழிச்சி னானால்.

இதுவுமது.

அச்தருண மிலிங்கமுட னனுமன் வந்தாங் காற்றசிவ பூசையைப்பார்த் தயர்வை யெய்தக், கத்துகட னிறமுகுந்த னோக்கி யிந்தக் கடிமணஞ் சே ரிலிங்கமதைக் கடிதிற் பேர்த்து, வைச்திடுநின் கரத்திலிங்க மதனையென்ன மனமுவந்து தன்னெடும் வால் வளைத்துப் போட்டுச், சுற்றியிழுத் தறப்புண்டு வீழ்ந்த குண்டத் தூயநனீர் தன்பெருமை துலங்கச் சொல்வாம்.

முன் அத்தியாயத்திற் சொன்ன பிரமகுண்டத்தில் நீராடின பிறகு தான் இந்தத் தீர்த்தத்திற்கு வந்து நீராடவேண்டும். ஆதி காலத்தில் * இராவணனாகிய † இராவணனை ‡ இராவணனங்கொன்றதால் நேரிட்ட பிரமகத்தி நீங்கும்பொருட்டு தவசிரேஷ்டர்களுத்தாரப்படி சிவலிங்கபூஜைபண்ணி ஸ்ரீராமமூர்த்தியானவர் கந்தமானகிரியமர்ந்து தன்னருகில் கைகட்டி வாய்புதைத்துக்கொண்டு நின்ற அனுமனைக் காசிலிங்கம் கொண்டுவரும்படி அனுப்பினார். அப்படி ஸ்ரீராமபிரான் உத்தரவைச் சிரமேலேற்று சிவலிங்கங் கொண்டுவரச்சென்ற அனுமன்வரத் தாமதமானது கண்டு சீதாபிராட்டியார் ஆனிமாசம் சுக்கில பட்சம் புதவாரம் அத்தநக்ஷத்திரம் - தசமி - திதி - ரிஷபலக்கன மிவைகள் கூடிய சுப தினத்தில் மணலைக் கரத்தாற் பிடித்து இலிங்கமாக வைக்க ஸ்ரீராமபிரான் அதை ஆகம விதிப்படி பூஜித்து பரம சிவதரிசனங் கண்டு வேண்டிய வரங்களைப் பெற்றார் பின் ஈசன் மனமகிழ்ந்து, உன்னால் பூஜிக்கப்பட்ட இலிங்கத்தைத் தரிசனம் பண்ணினவர் எப்பேர்ப்பட்ட கொடிய பாதகராயினும் மிகுந்த சாதகராகிச் சகல புண்ணியங்களையும் அடைகுவரெனச் சொல்லி இலிங்கப் பிரவேசமாகினர். அப்பால் அனுமன் இரண்டு காசிலிங்கங் கொண்டு வந்திருக்க இங்கு வேறு லிங்கம் வைத்துப் பூஜை யியற்றுவதைப் பார்த்து மனம் வருந்தி மௌனமாக ஓர் பக்கம் நின்று கொண்டிருக்கிற ஆஞ்சனேயரைப் பார்த்து ஹே. தனயா நின்னுடைய நோக்கப்படி இந்த லிங்கத்தை பிடுங்கி விட்டு நீ கொண்டுவந்த லிங்கத்தை வை யென்று திருவாய் மலர்ந்தருளினர். அதைக்கேட்ட ஆஞ்சனேயர் மிகுந்த களிப்போடு விஸ்வரூபங் கொண்டு தன்னுடைய நெடியவாலை இராமலிங்கத்தின் பேரில் மூன்று சுற்றாக வளைத்துப் போட்டுப் பலங்கொண்டிழுக்க வாலறுப்புண்டு வடபால் தன்றேக மெல்லாம் காயப்பட்டு இரத்தமோட மூர்ச்சித்துக் கீழே விழுந்தார். அது கண்டு ஸ்ரீராமபிரானும் சீதா தேவியும் ஓடிவந்து கரத்தெடுத்து மயக்கந் தெளிவித்து அனுமன் விழுந்த பள்ளத்திற்கு அனுமகுண்ட மென்று நாமகரணமிட்டு இதில் நீராடினவர்கள் சகல பாவத்தினின்றும்

* இரா - வண்ணன் = இருட்டுநிறம் பொருந்திய.

† இராவணனை = இராவணேஸ்வரனை.

‡ இரா - வண்ணம் = உலகத்தி லிருக்காதபடி.

விடுபட்டு புத்திரசந்தான மேற்று இறுதியில் மோக்ஷத்தையுமடைவார்களென வரமளித்தார்கள். ஆஞ்சனேயர் தான் கொண்டு வந்த இரண்டு இலிங்கங்களில் ஒன்றை இராமலிங்கத்திற்கு வடபாலில் வைத்து ஸ்ரீராமபிரான் அடியிற்றாழ்ந்து இதற்கு முதற் பூஜை நடக்க வேண்டுமென்று தொழுது நிற்க. அவ்வண்ணமே அருள்புரிந்தார். அது முதற்கொண்டு அனுமலிங்கத்திற்கு முதற் பூஜை நடந்துகொண்டே வருகிறது இன்று நாளும் இராமலிங்கத்தில் அனுமன் மூன்று சுற்றுய்வாலைப் போட்டிழுத்ததினாலுண்டான தழும்பு மூன்றுவரைகளா யிருக்கின்றனவாம்.

பலவளங்கண் மிகுந்த கேகயநாட்டை மனுநீதியாயளித்த தருமசகனென்னு மோர் அரசன் பதிவிரதா சிரோன்மணிகளான நூறு தேவிமாரோடு அரசாண்டிருக்குங்கால் தான் வயோதிகனாகியும் புத்திரசந்தானமின்றி வருந்தி அநேக தானதவங்களைச் செய்து மூத்தபத்தினி வயற்றில் சுசந்திரனென்னுமோர் பிள்ளையைப் பெற்று அத்தியந்த சந்தோஷமடைந்து பிள்ளையை நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாய் வளர்த்து வந்தான் அப்படி வளர்த்துக்கொண்டு வருநாளிலோர்நாள் குழந்தை தொட்டிலில் தூங்கிக்கொண்டிருக்கும்போது காலில் தேள்கொட்டிவிட்டதினால் குழந்தை யலற அதுகண்ட யாவர்களும் அரசனுங் கூக்குரலிட்டழுது பின் மாந்திரியர்களாற் சுகமடையக் கண்டு அரசன் வருந்தி மந்திரிகளைப் பார்த்து ஹே. மந்திரிகாள் ஏகபுத்திரனைப் பெற்றிருப்பது மிகுந்த துன்பத்தைத்தருவதாயிருக்கிறது நான்பல குழந்தைகளைப் பெறவேண்டுமென்ற எண்ணங்கொண்டல்லவா நூறு பத்தினிகளை விவாகஞ்செய்தது அன்றியும் இந்தக் குழந்தை யிறந்திருக்குமாயின் நானு மென்பத்தினிகளு மிறந்திருப்பதிற் சந்தேகமில்லையே ஆனதுபற்றி அநேகங்குழந்தைகளைப் பெற வேண்டிய வழிகளைச் சொல்லுவீராகில் அவை எவ்வளவு கஷ்டமாயிருப்பினும் செய்வதற்குச் சித்தமாயிருக்கிறேனென்று சொன்னான் மந்திரிகள் கேட்டு அரசே! கந்தமாதன கிரியில் உவமைசொல்லத் தகாத அனுமகுண்டமென வொரு மஹா புண்ணிய தீர்த்தமிருக்கிறது. அதிற்சென்று தானமுதலிய தளித்துப் புத்திரகாமேஷ்டி யாகஞ் செய்வீராகில் தங்கள் எண்ணம் பூர்த்தியாகுமென்னச் சொன்னார்கள். அவ்வண்ணமே பத்தினிமார் சமேதராய் மந்திரி சேனைபரிவாரங்களோடு சென்று சித்தி.

ரை மாதத்தில் புத்திரகாமேஷ்டியாகந்துடங்கி பிராமணர்முதலி யோர்களுக்கு பூதானம்,கோதானம், முதலியமுப்பத்திரண்டுதான ங்களுமளித்து ஒருமாதம் வரைஸ்நாநம்செய்துதன்னகரம்போய்ச் சேர்ந்து சுகமாயிருக்குங்கால், பத்தாவதுமாதம் தன்பத்தினிமார் நூறு பேர்களும் நூறுபுத்திரர்களைப் பெற்றூர்கள். தர்மஸகன் புத்திரர் நூற்றொருவரில் சுசந்திரனுக்குபட்டங்கட்டிவிட்டு தான் பேறுபெற்ற அனுமகுண்டத்தி லடைந்து தவம்புரிந்து விஷ்ணு லோகத்தை யடைந்தான். அதுகண்ட பத்தினிமார்கள் நூற்று வரும் அநுமரணம்பண்ணித் தங்கள் பதியையடைந்தார்கள் புத் ரசந்தானம் விரும்புவோ ரிதில்ஸ்நாநம்பண்ணில் அடைவார்க ளென்பதில் சந்தேகமே இல்லை.

பத்தாவது அத்தியாயம் முற்றிற்று.

பதினேராவது அத்தியாயம்.

அகஸ்திய தீர்த்தம்.

எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்

சந்தவரைவளர் முனியை நோக்கியீசன்றமிழ் முனியே நீயுமதி வேகமாக விந்தகிரிவீறடக்கப் போவாயென்னவிமலனே தங்கள் மணம்பார்க்க நாடி வந்தேனெனன வேதா ரணியர் தன்னில் வழங்குவமித் தரிசனம் நீ போ வென்றேதக் கந்தகிரியமர்ந்தளித்த தீர்த்தமேன்மை காசினிக்குயாமெடுத் துக்கழறுவோமால்

பத்தாவது அத்தியாயத்திற்கூறிய மகாபுண்ணிய தீர்த்தமாகிய அனுமகுண்டத்தில் ஸ்நாநம்பண்ணினபிறகு தானிந்தத்தீர்த்தத் தில் ஸ்நாநஞ் செய்யவேண்டும். இது அகஸ்தியரால் உண்டாக் கப்பட்டது, ஆதிகாலத்தில் விந்தியமலைக்கும் மேருமலைக்கும் ஒரு பெரிய சண்டையேற்பட விந்தியமலை ஆகாயத்தை யளாவி நிமிர்ந்துநிற்க அதால் சகல பிராணிகளும் சுவாசம்விட முடியாது தவிக்க வெள்ளியங்கிரிக்குச்சென்று தேவர்கள் முறையிட மணக் கோலத்திற்கு ஆரம்பித்துக்கொண்டிருந்த பரமேசுரன் அகஸ் தியரைப்பார்த்து ஹே தமிழ்முனியே, சீக்கிரஞ்சென்று விந் தகிரியின் கருவத்தையடக்குவீரென்று ஆஞ்ஞாபிக்க, முனிபணி ந்து சுவாமி நான் தங்கள் திருமணக்கோலத்தைப் பார்க்க ஆவ

னுற்றுவந்தேனென்ன பரமேசுரன் கிருபைகூர்ந்து ஹேமுனி யேநாம் திருமணக்கோலத்தை வேதாரணிய க்ஷேத்திரத்தில் காண்பிப்போம் விரைந்துசெல்லுமென்று திருவாய்மலர்ந்தருளி னர். அதைக்கேட்ட முனிவிரைந்து சென்று தனதுஒருவிரலினல் பூமியைச்சமனுகச் செய்துதன்றேவி. லோபாமுத்திரையோடுமதக் கணஞ்சுற்றிக்கந்தமாதனகிரியிலமர்ந்து தன் பெயராகலார்புனேல் உண்டுபண்ணியதற்கு வேண்டியவரங்களளித்து. இன்னும்வாசம்ப ண்ணிக் கொண்டிருக்கிறுர் தவத்திற் சிறந்த தீர்க்க தமசு என்கிற முனிவரின் புதல்வரான கக்ஷீவான் முனிவர் உதங்கமாமுனிவரி டம் அறுபதாண்டுவித்தியாப் பியாசஞ் செய்து கொண்டு குருதட் சணையீந்து வீட்டுக்குத் திரும்பி வர உத்தரவு கேட்டுப் பணிந்து நிற்குங்கால் உதங்கமாமுனி கக்ஷீவானைப்பார்த்து ஹே. சிஷியா நீ விவாகம்புரிய வொரு தந்திரம் சொல்லுகிறேன். அதாவது நீ சேதுரூபமாகிய கந்தமாதனகிரிக்குச் சென்று ஆங்குள்ள அகஸ் திய தீர்த்தத்தில் மூன்று வருடம் ஸ்நாநம் செய்து விரதமனுஷ் டிப்பையாகில் அத்தீர்த்தத்தி லிருந்து நான்கு மருப்புடைய ஓர் வெள்ளையானை வெளியேறும் அதிலேறிக்கொண்டு பிரதியிந்திர னைப் போல சுவநயனென்கிற அரசன் பட்டணத்திற்குச் சென்று அன்னவன் புதல்வியாகியமனேரமையைமணமாலை சூட்டிக்கொள் அன்றியும் அம்மனேரமையானவள் வெள்ளையானையிலேறி வரும் புருடனையே விவாகஞ்செய்து கொள்வதாக விரதம் பூண்டிருக் கிறுள் அவ்வண்ணம் விரதஞ் செய்திருக்கிறதை தந்தையாகிய சுவநயன் கேள்விப்பட்டு இப்பேர்ப்பட்ட புருடன் எப்பொழுது கிடைக்கப் போகிறுனென்று வருத்தப்பட்டுக் கொண்டிருக்கும் போது நாரத மாமுனிவர் வந்து அரசே வருந்தாதே சீக்கிரத்தில் தீர்க்க தமசுபுத்திரனுகிய கக்ஷீவான் வெள்ளையானையின் பேரில் வந்து மணம்புரிந்து கொள்ளுவானென்னச் சொல்லக்கேட்ட அரசன் மனக்களிப்போடு நின்னை எதிர்பார்த்துக் கொண்டிருக் கிறுன் ஆகையால் நீ சென்றடைகுவா யென விடையளிக்க ஏற்ற கக்ஷீவான் அப்படியே மூன்று வருட மிதில்ஸ்நாநம் செய்துவெள் ளையானையை அடைந்த தன்பேரிலேறிக்கொண்டு எதிர் பார்த்துக் கொண்டேயிருந்த மதுராபுரிக்கரசனுன சுவநயனுலங்கீகரிக்கப் பெற்று தன்றந்தை முதலானவர்களை வரவழைத்து அன்னவர் சம்மதத்தின் பேரில் சுவநயன் குமாரத்தியாகிய மனேரமையை

மணந்து இந்த அகஸ்திய தீர்த்தத்தில் எல்லவரு மூழ்கித்தம் தம் பதியை யடைந்தார்கள் வெள்ளையானையும் இந்தத் தீர்த்தத்தில் மூழ்கி மறைந்து விட்டது விவாகமில்லாதவர்கள் இந்த அத்தியா யத்தைப் படித்தாலும் அல்லது படிக்கக் கேட்டாலும் விவாக முடிவதோடு சகல சம்பத்தையும் பெற்று இறுதியில் பரமபதத் தையு மடைவார்கள்.

பதினோராவது அத்தியாயம் முற்றிற்று.

பனிரண்டாவது அத்தியாயம்

இராமதீர்த்தம்.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

பனிமொழிமின் ஜானகியை மீட்டியுடன் ரெரும்வழியிற் பகரி ராமன்
றனிமுதற்பூ சனைபுரிந்தா லயமியற்றி வேண்டுபொரு டரமா யீந்து
நனிபுகழ்சே ரய்யோத்தி நகர்க்குவருங் காலுயர்வா னரங்க ளோடு
மினிவிளங்க நீராடிப் பவந்தொலைத்த தீர்த்தவிசை யெடுத்துச் சொல்வாம்

அகஸ்திய தீர்த்தத்தில் முழுகின பிறகு தான் இந்தத் தீர்த் தத்திற்கு வரவேண்டும் ஸ்ரீராமமூர்த்தி சிவலிங்கப் பிரதிட்டை பண்ணி ஆலயங்கட்டுவித்து கிராமம் பூமி முதலானவை விட்டு பிராமணர்களை ஸ்தானிகர்களாக ஏற்படுத்தி நித்திய நைவேத்திய தியமுதலான பூஜைகள் நடக்கும்படி திட்டஞ்செய்து தான் வான ரப்படைகளோடு அயோத்தியா புரிக்கெழுந்தருளுந் தருணம் தன் பெயரால் ஒருதீர்த்தம் உண்டாக்கி வேண்டிய வரங்களைத் தந்தே கினர் ஸ்ரீஇராம பிரானு லேற்படுத்தியது பற்றி இப்பொழுது இராமேச்சுவரத்தில் இராமதீர்த்த மெனப் பேர்வழங்கிக் கொண் டிருக்கிறது,

இதில் அகஸ்தியர் சிஷரான சுதீட்சண னென்னுமோர் பிரா மணோத்தமன் விஷ்ணுவை ஆராதித்து நீராடி சகல பிராணிக ளின் பாஷையை அறியும்படியான அறிவும். அத்துவித ஞானமும் இன்னும் பலவிதமான சாஸ்திர ஆராய்ச்சியும் குருவின்றியடை ந்து தேவர்களோடு கலந்து களிப்பெய்தி விஷ்ணு லோகமுதலிய சத்திய லோகங்களுக்குச் செல்லுஞ் சிறப்பையும் பெறலானுன். அன்றியும் பாண்டவகுல சிகாமணியான தர்மபுத்திர மஹாராஜன்

குருக்ஷேத்திரத்தில் நடந்த பதினேந்தாம் நாட்போரில் அஸ்வத்தாமாவென்னும் யானைபிறந்திருக்க துரோணர் அருந்தவப் புத்திரனை அஸ்வத்தாமா யிறந்து விட்டானென்று பொய் சொல்ல, கேட்ட துரோணர் புத்திரசோபத்தால் வில்முதலிய ஆயுதங்களை யெறிந்துவிட்டு நிராயுதனுகச் சோர்ந்து கீழேவிழுந்தார் உடனே திருஷ்டத்துமன்னன் சத்திகொண்டு சென்று சிரசைக் கண்டித்தான் பின் மூன்று நாள் யுத்தமுஞ் செய்து கௌரவர்கள் சேனையைச் சின்னுபின்னஞ் செய்து தருமபுத்திர மஹாராஜன் பட்டந் தரித்துக் கொள்ளப்போந் தருணம் நீ பொய் சொல்லியிருக்கிறுய் பட்டந்தரித்துக் கொள்ளத் தகாதென அசரீரி சொல்லக்கேட்டு வியாகூலத்துடன் சிம்மாதனத்தை விட்டிழிந்து சகாதேவனை அவனிருத்திவிட்டு வேதவியாசர் ஆக்ஞைப்படி தௌமியாச்சாரியரோடு இத்தீர்த்தத்திற்கு வந்து ஒருமாதம் ஸ்நாநம் செய்து பாபவிமோசனமாகி விட்டதென அசரீரி சொல்லக்கேட்டு அஸ்தினுபுரத்திற்கு வந்து பட்டாபிஷேகஞ் செய்துக்கொண்டு வாழ்ந்திருந்தார் இது சகல பாவங்களையும் போக்கி புண்ணிய சாதனத்தைத் தரவொருகளைகணு யிருக்கிறது.

பனிரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

பதின்மூன்றவது அத்தியாயம்.

இலட்சுமண தீர்த்தம்.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

வம்பவிழ்பைந் தார்மார்ப னிலக்குமண சுகுணன்முனம் வாய்ந்த போரிற்
றம்பமெனுந் திண்டோளிந் திரசித்தைக் கொன்றபழி தபுதல் வேண்டி
யும்பர்செறி கந்தமா தனப்பொருப்பிற் றன்பெயரா லோங்கச் செய்த
சம்பிரமஞ் சேரிலக்கு மணதீர்த்தப் பெருமைதனைச் சாற்று வோமால்.

மேற்கூறிய இராமதீர்த்தத்தில் ஸ்நாநம்பண்ணித் தான் இப்புண்ணிய தீர்த்தத்திற்கு வரவேண்டும் பூர்வகாலத்தில் யதுகுலசிரேஷ்டரும் சேடனுடைய அவதாரருமாகிய பலராமர் பாண்டவர்களும் கௌரவர்களும் புரியும் பெரும்போரைப் பார்க்கக்கூடாது நாம் தீர்த்தயாத்திரைசெய்து வருவோமென வெண்ணி நைமிசாரணியத்தில் இந்திரிய நிக்கிரகிகளாய் தீர்க்க சத்திரயாகஞ்

செய்துகொண்டிருக்கு முனிவர்களிடம்வர அம்முனிவர்கள் தங்கள் தங்கள் ஆசனங்களைவிட்டெழுந்து பணிந்து எதிர்கொண்டழைத்தேக அம்முனிவர்களில் சூதன் பணியாதிருக்கக்கண்டு கோபித்து ஓர் தெர்ப்பையாலவன் சிரசைக்கண்டித்தார். அதுகண்டு முனிவர்கள் பணிந்தேற்ற புணரபி உயிரீந்து முனிவர்களுக்கு யாகாதி கிருத்தியங்கள் புரியாதபடி இடையூறு செய்துகொண்டிருந்த வற்கலாசூரனை அம்முனிவர்களின் வேண்டுகோளின்படி சூலாயுதத்தாற் கொன்று செல்லுங்கால் ஓர்கறுத்தநிழல் பின்றொடரக்கண்டு, ஆகாயவாணியால் ஹே! பலராமா நீ புரிந்த தீர்த்த யாத்திரைகளாற் பிரமஹத்தி தொலையவில்லையெனச் சொல்லக் கேட்டு மீண்டும் இம்முனிவர்களிடம் வந்து நடந்த வரலாற்றைக் கூற அன்னவர்கள் ஆலோசனைசெய்து சொல்லிய இலட்சுமண தீர்த்தமாகிய இத்தீர்த்தத்தில்முழுகி ஆகாயவாணியால் பிர்மஹத்தி விலகிவிட்டது என்னச் சொல்லக்கேட்டு வியப்படைந்து தன் பதியை நாடிச்சென்றார். இத்தீர்த்தமானது இந்திரஜித்தைக் கொன்றதா லேற்றப்பட்ட பிரமஹத்தி நீங்கும்பொருட்டு இராமமூர்த்தி இளவலான இலட்சுமணரால் கந்தமாதனத்திலியற்றி நீராடியது. இதில் நீராடியவர்கள் சகல பாவத்தினின்று விடுபட்டு முத்திக்காணியாளரா யிருப்பார்கள்.

பதின்மூன்றாவது அத்தியாயம் முற்றிற்று.

பதினான்காவது அத்தியாயம்.

ஜடாதீர்த்தம்.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

பெருக்கமுடன் ராமனிலக் குமணவேந் திருவர்களும் பிறங்கும் வெய்ய, திருக்கமரு மரக்கருடற் குருதிசடா மகுடமதிற் செறிந்த தென்ன, உருக்கமுட னோர்புனலுண் டாக்கியதிற் குடைந்திரத்த மொருங்கு நீத்த, விருக்குபுகழ்ந் தேற்றுசடா தீர்த்தமதின் பெருமையையா மெடுத்துச் சொல்வாம்.

இலட்சுமண தீர்த்தத்தில் ஸ்நாநம் பண்ணிவிட்டுத் தான் இத்தீர்த்தத்தில்நீராடவேண்டும் இராவணசம்ஹாரமுடிந்தபின் தங்கள் ஜடா மகுடத்தில் அரக்கர்களின் குருதி படிந்திருக்கு மென்று

நினைந்து இராமர் இலட்சுமண ரிருவர்களும் ஓர் தடாக முண்டு பண்ணி ரத்தத்தைக் கழுவிக் கொண்டார்கள் அப்படிக் கழுவப் பெற்ற மடுவையே இப்பொழுது ஜடாதீர்த்தமென்று சொல்லு கிறார். சுகர், தன்றந்தையாகிய வியாசரைப்பணிந்து என்பிதாவே நான் சகல சாஸ்திரங்களைப் பயின்று அதன் வழி நடந்தும் திடச் சித்த முண்டாகவில்லையே நான் திடசித்தத்தை யடையும்படியான ஓர் வழியை அநுக்கிரகிக்க வேண்டுமென்றனர். அப்பொழுது வியாசர் மகிழ்ந்து சுகா நீ கந்தமாதனத்தின் கண்ணமர்ந்த ஜடா தீர்த்தத்தில் நீராடுவையாகில் உனக்கு திடச்சித்த முண்டாகு மென்று அருள்புரிந்தார். அதைக்கேட்ட சுகர் அவ்வண்ணமே சென்று நீராடி அந்தக்கரண சுத்தியையடைந்தார் இன்னமும் வருண குமாரராகிய பிருகு வென்பவரும் தூர்வாசரும் தத்தாத் திரேயரும் இதில் நீராடி அந்தக்கரண சுத்தியை யடைந்திருக்கிறார் கள் உலகத்தவர்களுக்கு அஞ்ஞானத்தைநீக்கிச் சுஞ்ஞானத்தைக் கொடுப்பதில் இதைத்தவிர வேறொன்றுமில்லை, யாகம், தவம், தா னமுதலியது செய்தாற்றான் அந்தக்கரண சுத்தியுண்டாகும் இந்தத் தீர்த்தத்தில் நீராடினவர்கள் மேற்கூறிய தவங்களைச் செய்யாதே அந்தக்கரண சுத்தியை யடைவார்கள். இது ராமலிங்கத்திற்கு வலபாரிசத்திலிருக்கிறது.

பதினான்காவது அத்தியாயம் முற்றிற்று.

பதினைந்தாவது அத்தியாயம்.

இலட்சுமிதீர்த்தம்.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

செங்கமலத் திருமாலின் மார்பகன்று கந்தவரை சேர்ந்து சின்ன
ளங்கமரு மமரருரை கொண்டுசிவார்ச் சனைபுரிந்தே யரிய தீர்த்தம்
பொங்கமுறக் குடைவுசெய்தா யியற்றியநாள் மாலடைந்தப் புனிதபோதின்
மங்கைதனை யழைத்தேகும் போதளித்த திருத்தீர்த்த மகிமைசொல்வாம்.

மேலே சொன்ன ஜடாதீர்த்தத்திற்குப் போய்த் தான் இந் தத் தீர்த்தத்திற்கு வர வேண்டும். இந்தத் தீர்த்தம் இலட்சுமியா லேற்படுத்தப்பட்டது அதாவது செந்தாமரைக் கிழத்தியாகிய இலட்சுமி விஷ்ணுவின் மார்பினின்று விலகி கந்தமாதன கிரிச்சார்

பில் வசித்துக்கொண்டிருந்த ரிஷிகளிடம் ஓர் பன்னசாலை யியற்றி நாரதர் வாக்கியப்படி இலிங்கப்பிரதிஷ்டை செய்து ஓர் வாவி யுண்டுபண்ணி யதிலனுதினம் நீராடிப் பஜித்துக்கொண்டிருந்தாள் அப்படி யிருக்குங்கால் விஷ்ணுவானவர் தன்றேவியை யெங்குந் தேடிக்காணாது இவணடைந்து கண்டு வேண்டிய சமாதானங்கூறி யழைத்துக் கொண்டு தன்பதிக்குச் செல்லுங்கால் தான் நீராடிய வாவிக்குச் சகல வரங்களுமீந்து இலட்சுமியானவள் ஏகினாள். அன்று தொட்டு இதற்கு இலட்சுமி தீர்த்தமெனப் பெயராயிற்று, இதில் பரத வமிசத்திலுற்பவித்த திரிதராட்டிர மஹாராஜாவின் சொற்படி இந்திரப் பிரஸ்தத்தில் பாண்டவர்கள் வசித்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது கிருஷ்ண பகவான் வர வணங்கி பல துதிகளாற் புகழ்ந்து ஹே ஜகத்ரட்சகா, உலகத்தில் மகத்தான ஐசுவரியத்தை விரும்பினவர்கள் செய்யவேண்டிய கிருத்தியம் யாதென்று தருமபுத்திர மஹாராஜன் கேட்க கிருஷ்ணபகவான் மனமகிழ்ந்து மைத்துனனே பூர்வகாலத்தில் கந்தமாதனத்திலுள்ள இலட்சுமி தீர்த்தத்தில் நீராடிய மகத்துவத்தால் தேவர்கள் கற்பக நிழலையும் குபேரன் பதும முதலாகிய நவநிதிகளையும் குபேரன் குமாரனான நளகூபரன் சிலாக்கியமான அப்சர ஸ்திரீகளின் போகவின்பத்தையும் அடைந்திருக்கிறார்கள் ஆகையால் நீருமப்படியே சென்று ஒரு திங்கள்வரை நீராடுவீராகில் சகல ஐசுவரியங்களையும் எய்துவீரிதிற் சந்தேகமேயில்லை யென்று விரித்தெடுத்துரைத்தனர். அதைக்கேட்ட யுதிஷ்டிரர் தம்பியர்களோடு இத்தீர்த்தத்திற் சென்று ஒருமாதம்வரை நீராடித் திரும்பி இந்திர பிரஸ்தத்திற்கு வந்து தன்றந்தையாகிய பாண்டு மஹாராஜன் தேவராஜன் சபைக்கு உரிமைப்பட்டவனாகத் தன்னைச் செய்யும் பொருட்டு ராஜசூயயாகம் புரியச்சொன்னதாக நாரதபகவானால் கேள்வியுற்று அப்படியே ராஜசூயயாகஞ் செய்யத்துடங்கி திக்கு விஜயஞ்செய்து பலராஜர்களிட மிருந்து வேண்டிய திரவியங்களைக் கைப்பற்றி மகத்தான ஐசுவரியத்தை யடைந்தார்கள் இந்தத் தீர்த்தமானது வறுமைமுதலான துக்கங்களைக் கெடுத்து மிகுந்த செல்வத்தை தருமென்பதிலையமேயில்லை இது இராமலிங்கத்திற்கு எதிரே யிருக்கிறது.

பதினைந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

பதினாறாவது அத்தியாயம்.

அக்கினிதீர்த்தம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

மின்னுலவுஞ் செழுங்கமல முகச்சீதா தேவிகற்பை விரிநீர் சூழ்ந்த
தென்னுலவு நெடும்புவியில் விளக்கியெழுத் தாலுவுறு தீவேந் தன்பாய்ப்
பொன்னுலவுங் கடலாடி ராமனடி பணியனயன் பொங்க நோக்கி
அன்னதுநின் பெயர்தீர்த்த மாகவெனப் புரிந்ததின்சீ ரறைகு வோமால்.

பதினைந்தாவது அத்தியாயத்தி லுரைத்த இலட்சுமி தீர்த்தத்திற்குச் சென்று தானிந்தத் தீர்த்தத்திற்கு வரவேண்டும் இது அக்கினி பகவானால் நீராடப்பெற்றது, ஆதியில் ஸ்ரீராமபிரான் இராவண சம்ஹாரமுடித்து விபீஷணனுக்கு பட்டங்கட்டிவிட்டுத் தன்றேவி சீதாபிராட்டியா ரோடும் லக்ஷுமணரோடும் சேது மார்க்கமாகக் கந்தமாதனத்தில் இலட்சுமி தீர்த்தத்தின்கரையில் நின்று கொண்டு சீதாபிராட்டியார் பரிசுத்தமாம் பொருட்டு அக்கினிபகவானை அழைக்க உலகத்தின் கண் சீதையின் கற்பைவிளங்கக் காட்டினவரும் காளி கராளி மனோஜவா சுலோகிதா சுதூமர வர்ணம் உக்கிரை பிரதீப்தை எனும் ஏழுநாவையுடைய வருமான அக்கினிபகவான் சமுத்திரத்தினின்று தோன்றின இடமே இப்பொழுது அக்கினிதீர்த்த மெனவழங்கி வருகிறது பூர்வகாலத்தில் பாடலி புரமென்கிற பட்டணத்தில் பசுமான் என்னும் ஓர் வணிகன் மூன்று பத்னிமார்களோடு இல்லறதருமத்தை ஒழுங்காகவும் எவ்வுயிரிடத்தும் ஜீவகாருண்யமாகவும் கடவுளிடத்தில் மிகுந்த பக்தியை யுடையவனாகவும் நடத்திக் கொண்டுவந்தான் இப்படி நடத்திக்கொண்டு வருங்கால் மூன்று பத்தினிமார்களும் சுபண்ணியன் புண்ணியவான் சாருபண்ணியன் என்றும் சுகோசன்பகுகோசன் என்றும் மஹாபண்ணியன் மஹாகேசன் துஷ்டிபண்ணியன் என்றும் முறையே புத்திரர்களைப் பெற்றார்கள் இவ்விதமாகப் பிறந்த எட்டுக் குமாரர்களையும் பசுமன் மிக ஆவலோடு வளர்த்து வந்தான் இவர்கள் எண்மரில் கடையனான துஷ்பண்ணியன் சிறுவயதிலேயே அடுத்த வீட்டுப் பிள்ளைகளை அடிக்கிறதும் கிள்ளுகிறதும் தகப்பன் கண்டித்தால் தான் எச்சலைக்காறி யுமிழ்கிறது மிப்பேர்ப்பட்ட துர்க்கிருத்தியங்களை செய்து கொண்டு வந்தான்.

நாளேற நாளேறத்தகுந்தபிராயம் வந்தவுடன் சிறுகுழந்தைகளைப் பழமுதலானதின்பண்டங்கள் தருவதாகவெய்த்துக்கூட்டிக்கொண்டு போய்அக்குழந்தைகளணிந்திருக்கும் ஆபரணமுதலானவைகளைக் கழற்றிக் கொண்டு கழுத்தை முறித்துக் கேணி கிணறு குட்டைகளிற்றள்ளிவிட்டு வீட்டுக்கு வந்து விடுகிறதுமாயிருந்து கொண்டிருந்தான் பின் குழந்தைகளின் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை யெங்கணுங் தேடிக்காணாது கேணி கிணறுகளில் மிதப்பதைக் கண்டெடுத்து குழந்தைகளிறந்த காரணந்தெரியாது அடக்கம் பண்ணிவிடுவது வழக்கமாயிருந்தது இவ்வண்ணமாய்க் கொடியதுஷ்பண்ணியன் நெடுநாளாகக் குழந்தைகளைக் கொன்று வருகிற வழக்கத்தைக் கைவிடாது பற்றி வந்ததினுலே அந்நகரத்தில் சிசு வென்னும் நாமகரணமே யில்லாது போய்விட்டது ஆகையினுல் குடிகள் யாவரும் அரசனிடம்போய் முறையிட காவலாளி முதலானவர்களை யேற்படுத்தியும் கொலை செய்யுமித் துஷ்டனைக் கண்டு பிடிக்கவில்லை சிலநாட் பின்னர் இத்துஷ்பண்ணியன் ஐந்து குழந்தைகளைத் தான் தாமரைப் பூப்பறித்துக் கொடுப்பதாய்க் கூட்டிக் கொண்டுபோய் நகைகளைக் கழற்றிக்கொண்டு தண்ணீரில் அமிழ்த்தி குழந்தைகளிறந்து போய்விட்டதென்று நினைத்து வீட்டுக்குத் திரும்பிவிட்டான் தண்ணீரி லமிழ்த்திய குழந்தைகளிற் சில குழந்தைகள் தெய்வசகாயத்தால் கரையோரத்தி லொதுங்கி காற்று வீசியவுடனெழுந்து தள்ளாடிக் கொண்டு வீட்டுக்கு வரும் பொழுது பெற்றோர்கள் தேடிக்கொண்டு வந்தார்கள் பெற்றோரைக் கண்டவுடன் தேம்பிச் சங்கதிகளைச் சொல்லியழுக உடனே குழந்தைகளோடு அரசனிடமேகி நடந்த விர்த்தாந்தங்களைச் சொல்லி பசுமான் புத்திரன் துஷ்பண்ணியன்றுன்.

இப்படிச்செய்தவ னென்றும் கூக்குரலிட்டுச் சொன்னுர்கள் உடனே அரசன் அடங்காச்சினங்கொண்டு துஷ்பண்ணியனைக் கொலைசெய்யும்படி ஆக்ஞாபிக்க பசுமானென்னும் வணிகன் சருமசிந்தைக்கும் ஊரார்கள்வேண்டு கோளுக்குமிணங்கி நகருக்கு அப்புறப்படுத்தித் துரத்திவிடும்படி கட்டளையிடத்துரத்திவிட்டார்கள் அப்படித் துரத்தப்பட்ட துஷ்பண்ணியன் தவசிரேஷ்டர்கள் வசிக்கும் காட்டினிடஞ்சென்று அவ்விடத்திலேயும் உக்கிரசிரவசுவின் புத்திரனைத் தண்ணீரில் அமிழ்த்திவிட்டான் அதுகண்டு உக்கிரசிரவசுவென்னு முனிவர் கோபமீறி அடே தூர்த்தா! நீ என்

னுடைய குழந்தையைத் தண்ணீரில் அமிழ்த்தியபடியால் நீயும் தண்ணீரிலேயே முழுகியிறந்து பின் பைசாசமாய்த் திரிவாயாக என்று சபித்தனர். அச்சாபத்தை ஏற்ற துஷ்பண்ணியன் சிந்தை நைந்து காட்டின்வழிசெல்லுகையில் இடி மின்னல் காற்றோடு ஆலகாலவிஷம்போற் சீறிக்கொண்டு மண்டலவருஷமாய் மழை பொழிந்தது. துஷ்பண்ணியன் தங்குதற்கு இடமின்றி மழையால் வருந்திப் பயங்கொண்டு அங்குமிங்கும் ஓடித்திரிந்து கடைசியில் பிணமாய்க்கிடந்த ஓர் யானையின் வாயில் நுழைந்து இருந்துகொண்டான் இம்மழையினால் வெள்ளமேற்பட்டு இந்த யானையை யிழுத்துக்கொண்டுபோய்க் கடலிற்சேர்த்தது யானையின் வயற்றுக்குளிருந்த துஷ்பண்ணியன் வெளியில்வரச் சாத்தியமில்லாது மரித்துப் பைசாசங்கொண்டு ஆகாரமின்றி ஆயிரங்கோடி கற்பங்கள் சுற்றித்திரிந்து தண்டகாரணியம் வந்து அங்கு தபசுபண்ணிக்கொண்டிருக்கும் முனிவர்களிடம் தன் குறைகளைச்சொல்லி முறையிட அம்முனிவர்கள் மனமிரங்கி அகஸ்தியரிடங்கூட்டிச் சென்று பைசாசத்தின் வரலாற்றைச்சொல்லி பலனடையும்படியான வழியைச் செய்யும்படி பணிந்துகேட்டுக் கொண்டார்கள் அதன் பேரில் கும்பமுனிகிருபைகூர்ந்து சுதீட்சணனை நோக்கி சுதீட்சணனே இப்பைசாசத்தை கந்தமாதனத்திலுற்ற அக்கினிதீர்த்தத்தில் ஸ்நாநம்பண்ணும்படி செய்வையாகில் நிவர்த்தியாகுமென்று சொல்லி சுதீட்சணனையுங் கூட அனுப்பிவித்தார் சுதீட்சணன் பைசாசத்தோடு சென்று மூன்றுநாள்வரை சங்கற்பம் பண்ணி, இராமநாதனைத்தொழுது கையில் இந்தத்தீர்த்தத்தையள்ளிப் பைசாசத்தின் பேரிலறைந்த மாத்திரத்தில் பைசாசம் நீக்கி தேவசரீரம் பெற்று விமானத்திலேறி அகஸ்தியரையும் சுதீட்சணனையும் பணிந்து சென்றனன் இந்தத்தீர்த்தம் மகா உத்தமமானது, சகலபாபங்களையும் நசிப்பிக்கும்.

பதினாறாவது அத்தியாயம் முற்றிற்று.

பதினேழாவது அத்தியாயம்.

சக்கரதீர்த்தமாகிய முனிதீர்த்தம்.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

பவமறுத்த வகிர்ப்புத்த நீயனெனு மோர்முனிவன் பண்டைக் காலத்
தவமிழைத்து மாற்சுதரி சனங்கரத்தி லடைந்சாங்கு சார்ந்த தீங்கை
எவர்களிழைத்திடினுமுடன்கொன்றிருக்குங்காலசுர ரினத்தைத்தேய்த்துக்
கவரவமோ டாடியமா முனிதீர்த்தப் பெருமையினைக் கழறு வோமால்.

மேற்கூறிய அக்கினிதீர்த்தத்தில் ஸ்நாநம்பண்ணித் தான் இந்தத் தீர்த்தத்திற்கு வரவேண்டும். ஆதியில் அகிர்ப்புத்தநீய ரென்னுமோர் முனிவர் அசுரர்களா லிம்சிக்கப்பட்டு, தான் அத் துன்பத்திலிருந்து நீங்கும்பொருட்டு விஷ்ணுவின் சுதரிசன ஆழ் வாரை நோக்கித் தவமிழைக்க, சுதரிசன ஆழ்வார் விரைந்துவந்து இம்சித்துக்கொண் டிருந்த இராட்சதர்களைக் கொன்று அகிர்புத்த நீயரியற்றிய தடாகத்திற் குளித்ததுபற்றி, இதற்குச் சக்கரதீர்த்த மென்றும், அகிர்ப்புத்தநீயமுனிவ ரியற்றியதுபற்றி முனிதீர்த்த மென்றும் பெயராயிற்று. பூர்வத்தில் இராக்கதர்களாற் றுன்ப மடைந்த தேவர்கள் இந்திரனை முன்னிட்டு, பிரமனிடஞ்சென்று முறையிட, ஹே! தேவர்காள், நீவீர் சக்கரதீர்த்தமாகிய முனி தீர்த்தத்திற் சென்று, ஆங்கு மஹேசுவரயாகம் புரிவீர்களாக, அவ்விடத்தி லசுரர்கள் துன்பஞ் செய்யமாட்டார்கள். ஏனெனில், சுதரிசன ஆழ்வார் அவ்விடத்தில் இம்சைசெய்பவர்களைக் கண்டிப் பதற்காகவே காத்துக்கொண்டிருக்கிறார். ஆகையால் அவண்செ ன்று யாகம்புரிந்து உங்கள் பகைவர்களைச் சம்ஹாரஞ் செய்வீர்க ளாக, என்றுசொல்ல, கேட்ட தேவர்கள் உடனே, பிரமாவின் சொற்படி சக்கரதீர்த்தத்திற்கு வந்து, பிரகஸ்பதி ஹோதாவாக வும், இந்திரகுமாரன் ஜயந்தன், மைத்திராவருணனுசவும், விசுவா மித்திரன் பிரதிபிரஸ்தாவாகவும், குபேரன் உன்னேதாவாகவும், அஷ்டாவக்கிர மகாரிஷியானவர் அத்துவாயுவாகவும் சூரியன் பிரமாவாகவும், வருணன் நேஷ்டாவாகவும், மதுச்சந்தன் சுப்பிர மணியராகவும், எட்டாவது வசுஅச்சரவாகனுகவும்,பராசன் சிரா வயனுகவும், வசிஷ்டர் பிராம்மணுச்சம்ஸிவாசவும், சுனச்சேபன் அக்கினிதரனுகவும், அக்கினிபோதாவாகவும், வாயு உத்காதாவா

கவும், யமன் பிரஸ்தோதாவாகவும், அகஸ்தியர் பிரதிகர்த்தாவாக வும், சாக்ஷிதேவதையாக ஈசுவரனைவைத்து, யாககர்த்தாவாக இந் திரனிருந்து மஹேசுவரயாகஞ் செய்து பூரணாகுதிகொடுக்குந் தரு ணம், அவிப்பாகசேஷத்தை அத்வரியுவாயிருந்த அஷ்டாவக்கிரர் பாகித்துக்கொடுத்தார்.

அதில் பிராசித்ரமென்னும் பாகத்தைப் பிரமாவாகவிருந்த சூரியன் கரத்திலேற்க, இரண்டுகரங்களு மறுந்து கீழேவிழுந்தன. அதுகண்டு சூரியன் வெகுண்டு எனக்குக் கரங்கொடுத்தாலாச்சுது, அல்லாவிடில் இதோபாரு மிந்த யாகத்தை யழித்துவிடுகிறேனென் றெழும்ப, அஷ்டாவக்கிரர் கரமமர்த்தி, பதராதீர் இதோயிருக்கிற முனிதீர்த்தத்தில் மூழ்குமென்று சொல்ல, அப்படியே வீழ்ந்து, அற்றவிரண்டு கைகளையுமடைந்தனன். மேலும் சாமளபுரவாசி யாகிய ஹரிஹரனென்னும் வேதியன், தண்டகாரணிய மணுகி, ஆங்குள்ள தபோதனர்களைத் தரிசித்துக்கொண்டு நிற்குங்கால் ஓர் வனசரன், ஓர் பிராணியின்மேல் விடுத்த அம்புகள் இலக்குமாறி காலிற்பட்டுக் கண்டித்துக்கொண்டு போய்விட்டன. அதுகண்ட வேதியன் தபோதனர்களைப்பணிந்து அன்னவர்களா லருள்புரிந்த இந்தத் தீர்த்தத்தில்மூழ்கி மீண்டுந் தன் அவயவங்களைப் பெற்றிருக் கிறான் குஷ்டரோகிகளும் அங்கஹீனர்களும் இதில் ஓர் முறை குடைவராகில் ரோகங்கணீங்கி முத்தியைச் சாதனமாகக் கொள் வரென்பதிற் சந்தேகமே யில்லை.

பதினேழாவது அத்தியாயம் முற்றிற்று.

பதினெட்டாவது அத்தியாயம்.

சிவதீர்த்தம்.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

கலைமுனியுங் கௌதமனுங் காமியசா நம்பெறவே கருதித் தெண்ணீர்
அலைமதியோ டறுகணிசெஞ் சடைப்பரம னடிபணிய வமல னோக்கி
இலைமருவு சூலமதாற் றரைகிழிக்க நீர்பெருக வின்புற் றுயும்
பலதுதிக ளாற்புகழ்ந்த சிவதீர்த்தப் பெருமைதனை பகுத்துச் சொல்வாம்.

மேற்கூறிய முனிதீர்த்தத்தில் நீராடிய பின்றான் இந்தத்தீர்த் தத்திற்கு வரவேண்டும் முனிவர்களுக் கரசனான அகத்தியமாமு

னிவரும் கௌதமரும் இஷ்ட சித்திகளை வேண்டிப் பரமனை நோக்கித்தபசுபுரிய சாக்ஷாத்சிவபெருமான் தவத்திற்கிரங்கிப் பிரசன்னமாகித்தன் சூலத்தால் பூமியைக்கீறி ஓர் தீர்த்தமுண்டாக்கி வேண்டிய வரங்களையளித்து மறைந்தருளினர். அத்தீர்த்தத்தை, தேவர்கள் சிவ தீர்த்தமென்று பெயரிட்டழைத்தார்கள். அந்தச்சிவதீர்த்தத்தில் மேற்கூறிய முனிவரிருவர்களும் நீராடி தங்கள் மனக்குறைகளைத் தீர்த்துக் கொண்டார்கள். ஆதிகாலத்தில் பிரமனும் விஷ்ணுவும் உயர்வு தாழ்வைப் பற்றி இறுமாப்புக் கொண்டு பெரும் போர் விளைத்தருணம், வேதம் நான்குமணுகி நீங்களிருவரும் பெரியவரல்லர் உமையாள் காந்தனாகிய பரமேசுரனே பெரியவன் என்று விரித்துரைக்கக் கேளாதவர்களாய் அகந்தை கொண்டு சமர் விளைத்தார் மேலும், வேதத்தினுச்சியில் விளங்கிக் கொண்டிருக்குங் குடிலையென்னும் பிரணவமும், மஹேசுரனே பெரியவன் நீர் வீண் கர்வங் கொள்ளாதீரென்று சொல்லியும், அதையுங் கேளாதவர்களாய் போர் புரிந்தார். அது கண்டு பரமதயாளுவான சங்கரன் ஓர் ஒப்பற்ற ஜோதியாய் விளங்கினன். அச்சோதியை பிரமன் தான் தவத்தாற் பெற்ற ஐந்தாவது முகத்தால் நோக்க ஓர் புருடன்தேஜஸ் எனக்கண்டு ஒ! மஹாதேவரே, நீரென்னுடைய லலாடத்திற் பிறந்தருத்திரனென்னும் பிள்ளையல்லவாவென்று கருவித்துச் சொல்ல, உடனே பரமேசுரனிடமிருந்து கால பைரவாவெனவோர் சப்தங் கேட்டது அந்தட்சணமே சூலகதாதரராய் வக்கிரதந்தங்களேற்றுப் பயங்கரமான ரூபத்தோடு தோன்றி பிரமாவோடு வெகுநாட் போர்புரிந்து பிரமன் ஐந்தாவது சிரசைக்கிள்ளி உயிரைக் கவர்ந்தார். பின்னர் பரமேசுரன் கிருபைகூர்ந்து பிரமனை யெழுப்ப வணங்கித் தன்பதிக்குச் சென்றனன். அப்பால் பரமேசுரன் அருகிற்கையிற் கபாலத்தோடு நிற்கின்ற கால பைரவரைநோக்கி, நீ பிரமன் சிரங்கொய்ததினால் கபாலம் உன் கரத்தில் நீங்காது பிடித்துக்கொண்டது ஆகையால் நீயவ்வோட்டிலேயே பிச்சையெடுத்துண்டு கொண்டு சகலதீர்த்தங்களிலுமாடிக் காசி க்ஷேத்திரத்திற்குப்போ அப்படிப் போனவுடன் முக்கால்வாசி பிரமஹத்தி நீங்கிவிடும் பிற்பாடு மிச்சமிருக்கிற கால்வாசியை நாம் வசித்துக் கொண்டிருக்கிற கந்தமாதன கிரியின் கண்சிவ தீர்த்தத்தில் முழுகி, நிவர்த்திபண்ணிக் கொள்ளுவாயென்று சொல்லி பயங்கரமான பெண்வடிவமாக்கி விடுத்தனர். அப்படியே பின்பு பைரவரும், கபாலத்தில் அநேகங்கா

லம் பிச்சை யெடுத்துக்கொண்டு திரிந்து சகல புண்ணிய தீர்த்தங்களிலுமாடி காசிக்குப்போன வுடனே முக்கால்வாசி பிரமஹத்தி நீங்கி விட்டது. பின் இந்தத்தீர்த்தத்தில் வந்து ஸ்நானம் பண்ணின வளவிலேயே மிச்சமான கால்வாசியும் நீங்க, கபாலம் கரத்தைவிட்டுக் கீழே விழுந்தது. அப்பொழுது பார்வதி சமேதராய் ஈசன் பிரத்தியக்ஷமாகி பைரவரைப் பார்த்து நீ யிந்தக் கபாலத்தைக் காசியி லெவ்விடத்திலாவது வைத்து விடென்று சொல்லி வேண்டிய வரங்களை யளித்து அந்தர்த்தானமாகினர். காலபைரவர் ஈசன் உரைப்படியே காசியிற்கொண்டுபோய் இந்தக் கபாலத்தை ஸ்தாபனம் பண்ணினர். அப்படி ஸ்தாபனம் பண்ணின இடமிப்பொழுது கபாலதீர்த்தமெனப் பெயர் வழங்கிக் கொண்டு வருகிறது இது மஹா பாதகங்களையும் நீக்கிப் பரமனுலகாகிய கைலாசத்தைத் தருமென்பதிற் சந்தேகமேயில்லை.

பதினெட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

பத்தோன்பதாவது அத்தியாயம்.

சங்கதீர்த்தம்.

எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

துக்கமே விளைவும் மலமோடைம் பொறியைத் தொலைத்தறு வீட்டினைக் கடந்து, தொக்குடற் றருத்தி யூதிவெந் தணலைத் துலக்கிச்சன் மார்க்கமாம் யோகம், மிக்கவே புரிந்த சங்கமா முனிவன் விழைவுட னுடிய தீர்த்தச், சொக்கமு மதனிற் குடைந்தவர் பலனுந் தொல்லுல கறிந்திடத் தொகுப்பாம்.

மேற்கூறிய தீர்த்தத்தில் நீராடித் தான் இந்தத் தீர்த்தத்தில் நீராடவேண்டும். ஆணவம், மாயை, காமியமென்னும் மூன்றுமலங்களை யொருங்கேயகற்றியும் மெய், வாய், கண், மூக்கு, செவி, என்னுமைம் பொறிகளை யடக்கியும் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞையென்னும் ஆதாரம் ஆறையுங்கடந்து உடலென்னுந் தோற்றுருத்தியை யூதி அழலுகின்ற உட்டணலைவளர்த்து யோகத்தைச்செய்துகொண்டிருந்த சங்கமா முனிவர் மாதவனைநோக்கித் தபசுபுரியும்போது ஸ்நாநம் பண்ணும்பொருட்டு உண்டாக்கியதாலிதற்குச் சங்கதீர்த்தமெனப்

பேராயிற்று சர்வசீவ காருண்யராகியும் அகப்பற்று புறப்பற்று இவைகளை நீக்கி இந்திரியநிக்கிரகஞ் செய்தவருமான வத்ஸநாபர் என்னும்மஹாமுனி பரமனைநோக்கி அநேக ஆயிரவருடகாலந்தவமிழைத்துக் கொண்டிருந்தார். அத்தவத்தைப் பரிசீலனைபண்ணும் பொருட்டு தேவேந்திரன் சப்தமேகங்களையுமேவி வருஷிக்கச் செய்தான். அம்மேகங்கள் இடிமின்னல் குமுறலுடனேபெய்ய, தருமதேவதை கிருபைகூர்ந்து அம்முனிவரை இவ்வாபத்தினின்றும் நீக்கும்பொருட்டு கடினதோலை யுடைய எருமையாகச்சென்று, தன்மடிக்குளிருத்தி, ஓர் துளிகூட விழாதபடிகாப்பாற்றி வெளியேறி சேற்றில் நான்குகாலையும் விட்டுக்கொண்டு நின்றது. பின்வத்ஸநாபர் தன் தபசுகலைந்து, கண்விழித்துப்பார்த்து தான் மழையிலிருந்துங் காப்பாற்றபெற்ற செயலெலாமுணர்த்தும் சேற்றில் காலைநட்டுக் கொண்டுழலுகிற மகிஷத்தைப் போயெடுத்துவிடத்துணியாது, தீர்க்காயுளாகவென்றதை யாசீர்வதித்து மீண்டும் தவத்தின்மனதைச் செலுத்தினர். இவர் எவ்வண்ணமோமனதைச் செலுத்தியும் ஒன்றும் பயன்படாது கண்டுயோஜித்து ஆகா நாம் என்னவேலைசெய்தோம், நன்றி மறந்து விட்டோம். அப்படிநன்றிமறந்தவனுக்கு மரணத்தைத்தவிர்த்துப்பிராயசித்தம் ஒன்றுங்கிடையா தெனத் திடம்பண்ணிக் கொண்டு இரக்சவெத்தனிக்குங்கால், தருமதேவதை மகிஷரூபத்தை விட்டோடிவந்து, முனியே பதராதே நன்றிமறந்தவர்களுக்கு மரணமன்றிப் பிராயச்சித்தமில்லை யெனினும் நீ தரும சீலனானபடியால் உனக்குப் பிராயச்சித்தமொன்றுண்டு அதென்னெனில், கந்தமாதனகிரியின் கண்ணுற்ற சங்கதீர்த்தத்திற்குச் சென்று நீராடுவையாகில் நிவர்த்தியாகுமென்று சொல்ல, உடனே தர்மதேவதையென்றுகண்டு கொண்டவத்ஸநாபன் அப்படியேயிந்தச் சங்கதீர்த்தத்தில் வந்துமூழ்கி விமோசனம் பெற்றிருக்கிறன். இத்தகைமைவாய்ந்த தீர்த்தத்தில் எந்தவிதப்பாவங்கள் தான் நிவர்த்தியாகாது சகலமு நிவாரணமே தந்தைதாய் குருமுதலானவர்களுக்குச் செய்தபாவமும் நசித்துப்போம்.

பத்தொன்பதாவதுஅத்தியாயம்முற்றிற்று.

இருபதாவது அத்தியாயம்.

கயை, கங்கை, யமுனை.

எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

கந்தமா தனத்திற் பரமனை நோக்கிக் கடுந்தவம் புரிமறைக் குலத்தில்
வந்திடு விரயுக் குவமுனி முடத்தால் வண்டியிற் றிரிந்திடுங் காலை
சந்தமார் யமுனை கயைகங்கை முதற்றீர்த் தங்களை யாடிட விரும்ப
வந்தநன்னதிகள்பெண்ணுருவடைந்தங்கமர்ந்ததின்சிறப்பையுமுரைப்பாம்.

மேலத்தியாயத்திற் சொன்ன சங்கதீர்த்தத்தில் தானம்பண்ணினபிறகுதான். இந்த மஹா புண்ணியதீர்த்தங்களில் ஸ்நாநம் பண்ணவேண்டும். ஆதிகாலத்தில் பிறவிக்கான் முடமாகிக் கந்தமாதனகிரிச்சார்பில் யுவக் என்னும் வண்டியிலேறித் திரிந்துகொண்டிருந்த இரயுக்குவ முனியென்பவர் கொடுந்தபசுபுரிய, சொறிசிரங்கு முதலான வியாதிகள் நேரிட்டன, அவைகளாலுந் தன் மனஞ் சிறிதுந் தவத்தினின்றும் விலகாது தபசுபண்ணிக்கொண்டிருந்தார். அப்படியிருக்குங்கா லோர் நினைவுபிறந்தது. அதாவது, நாமோமுடவன், கயை, கங்கை, யமுனை என்னும் நதிகளில் நீராட ஆவலிருந்துகொண்டே யிருக்கிறது. அப்படி அவ்வாவலைப் பூர்த்திசெய்துகொள்ள நெடுந்தூரஞ் செல்லமுடியாது. ஆகையால் நாம் கடுந்தவம்புரியில் கிடைத்தது கிடைக்கட்டுமென நினைந்து அன்னுகாரமின்றி இந்திரியங்களையடக்கிக் கீழ்திசைநோக்கித் தபசுசெய்யலானுர். அத்தபசின் கொடூரத்தைக் கண்டு பொறுக்க முடியாதவர்களாய் கயை, கங்கை, யமுனை என்னும் நதிகள் பூமியைக் கிழித்து வெளியேறி மானிடவுருவோடு அம்முனிவன் முன்வர பணிந்து, ஹே! தேவிகாள், என் காரணம்பற்றி இந்தக் கந்தமாதனத்திலேயே வசித்துக்கொண்டிருக்கவேண்டும். அன்றியும், நீங்க ளெந்தெந்தவிடங்களினின்றும் வெளிப்பட்டீர்களோ அவைகளெல்லாந் தனித்தனியே உங்க ளொவ்வொருவரின் பேரால், தீர்த்தமாக வழங்கவேண்டுமென்று, சிரமேற் கரங்குவித்தவனுகநின்றரற்ற, அத்தேவிக ளவ்வண்ணமே வரங்களீந்து மறைந்தனர், பிற்பாடு இம்முனிவர் அத்தீர்த்தங்களில் ஸ்நாநம் பண்ணிக்கொண்டு வந்தார்.

பூர்வத்தி லதிகச் சிரத்தையோடு அன்னபானுதிகள் அகுதிக்களுக்கு வழங்கிவந்ததினல் சிரத்தாதயனென்றும்வந்த ஆதுலர்க

னுக்குப் பசியறிந்து கொடுக்கும்படியாக காய்கறி முதலானவை பகுவா யிருப்பதுபற்றி, பகுபாக்கியனென்றும் நாமங்களையேற்ற ஞானசுருதி என்பவன் மனுநீதி யரசாண்டுகொண் டிருக்குங்கால், தேவர் முதலானோர் இவ்வரசன் கீர்த்தியைக்கேட்டு அன்ன வடிவங்கொண்டு வந்தார்கள். அப்படிவந்து இம்மஹாராஜன் புகழ் சகல லோகங்களிலும் பரவியிருக்கக்கண்டு அரசனைக் கடைத்தேறச் செய்ய நோக்கங்கொண்டவர்களாய், முன்னால் அன்ன வடிவங் கொண்டு செல்லுகிற முனியைப் பின்னால் அன்னவடிவங்கொண்டு வருகிற முனிவன்பார்த்து ஞானசுருதி மஹாராஜனுக்குக் கேட்கும்படியாய் ஏ அன்னமே எதிரிலிருக்கிற ஞானசுருதி மஹாராஜனைப் பாராமல் அந்தகனைப்போலச் செல்கிறாயே, இம்மன்னவனே மஹாசத்திய சம்பன்னனும் தாதாவுமாயிற்றே என்ன முன் செல்லும் அன்னம் (அடே) பயித்தியகாரா இவ்வரசன் எம்மாத்திரம் கந்தமாதனத்தின் கண் கயை கங்கையமுனை என்னும் நதிகளை வரவழைத்த இரயுக்குவ முனியோவென்று ஏளனமாய்ச் சொல்ல அரசன்கேட்டு உடனே அரசாளுகை விட்டு விட்டுகந்த மாதனகிரிக்குவந்து இரயுக்குவமுனியைக்கண்டு அன்னவருக்கு அறுநூறு பசும்பொன் முதலானவைகளைப் பாதகாணிக்கையாக வைத்துத் தனக்கு அத்துவித ஞானோபதேசஞ் செய்து வைக்கவேண்டுமென்று பணிந்துகேட்க அம்முனிவர் இந்த நிதிகள் யாவற்றையும் இராமநாதன் கோவிலுக்குச் சேர்த்து விட்டு ஞான சுருதியைப்பார்த்து அப்பா நீ ஞானோபதேசம் பெற்றுக் கொள்ளவேண்டுமென்றால் பிராப்தகர்மம்வேண்டும் அப்படியுனக்குப் பிராப்தகர்மமில்லையே ஆனலதற்கு ஒருபாயஞ்சொல்லுகிறேன். நீயிந்த கயை கங்கை யமுனையென்னுமிந்த மூன்றுதீர்த்தங்களில் ஸ்நாநம் பண்ணுவாயாகில் ஞானப்பிராப்திக்குத் தடையாயுள்ளதுஷ்கர் மநாசமுண்டாகுமென் றருளிச்செய்தார். அப்படியே ஞான சுருதி முழுகித் துஷ்கர்மநாச முண்டாகி இரயுக்குவமுனிவரிடம் அத்துவித ஞானோபதேசம்பெற்று தபோதனர்களுக்குங் கிடைத்தற்கரிதான பிரமஞானத்தை யடைந்தான். அஞ்ஞானியாயிருப்பினும், இதிற்குடைந்த அளவிலேயே சுஞ்ஞானிகளாகி மோட்சத்தை யடைவார்.

இருபதாவது அத்தியாயம் முற்றிற்று.

இருபத்தோராவது அத்தியாயம்.

கோடி தீர்த்தம்.

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

களிமயில்க ளகவுகந்தப் பொருப்பி னுப்பண் கருணைமிகு ராமபிரான் கனவினோடு, வளமைபெறத் தாபித்த விலிங்கந் தன்னை வயங்கானீ ராட்டுவிக்க மருங்காற் றூன, அளமலிந்த கோதண்டக் கோடி கொண்டாங் கார்நிலத்தைக் கீறிடவு மதனி னின்றே, சளசளென வருநீரார் தனுவின்கோடித் தவதீர்த்தப் பெருமைதனைச் சாற்றுவோமால்.

மேற்கூறிய தீர்த்தங்களில் ஸ்நாநம் பண்ணினபிறகு தான் இந்தக்கோடி தீர்த்தத்திற்கு வரவேண்டும். இராவணனைக் கொன்றபிர்பஹத்தி நீங்கும்பொருட்டு ஸ்ரீராகவமூர்த்தி சிவலிங்கப்பிரதிட்டை செய்த இலிங்கத்திற்கு அபிஷேகஞ் செய்ய சுத்தஜலங்கிடைக்காததினாலே பகீரதியை நினைத்துத்தன் கோதண்டக் கோடியினால் பூமியைக்கிழிக்க வந்த பாதாளகங்கையை அபிஷேகஞ்செய்தார். இது ஸ்ரீராமபிரான் கோதண்டக் கோடியினால் உண்டானதுபற்றி கோடிதீர்த்தமெனப் பெயரேற்றது யதுகுலத்தி லுற்பவித்த சூரன் புத்திரனாகிய வசுதேவனுக்கு தேவகன் புத்திரிதேவகியாகிய தன்றங்கையைக் கலியாணஞ்செய்துகொடுத்துக் கம்ஸன் கூட்டிக் கொண்டு தேவகனுடைய ஊருக்குச் செல்லுகையில் உன்றங்கையின் வயிற்றிற் பிறக்குங் குழந்தையால் நீ மரணமடைவாயென அசரீரி சொல்லக் கேட்ட கம்ஸன் வெகுண்டு தன்றங்கையாகிய தேவகியின் சிகையைப் பிடித்து வளைத்துக் கட்கத்தினால் வெட்டப் போகையில் தேவகனோடி வந்து கம்ஸனுடைய கையைப் பிடித்துக் கொண்டு மைத்துனா உன்றங்கையை வெட்ட வேண்டாம். அவள் வயிற்றிற் பிறக்குங் குழந்தைகளை உன் கையிலொப்புவித்து விடுகிறேனெனச் சொல்ல உறுதி வாங்கிக்கொண்டு கட்கத்தை உறையிற்போட்டுத் தன்றங்கையையும் தங்கை புருஷனையும் தன்னகரத்திற்குக் கூட்டிக்கொண்டுபோய் விலங்கிட்டுச் சிறையிலடைத்து வைத்தான். பின்னர் தேவகி ஆறு குழந்தைகளைப் பெற அவ்வாறு குழந்தைகளையும் சொன்ன வாக்குத்தவறாது கம்ஸனிடமொப்பிவிக்க இரக்க மின்றிக்கொன்றுவிட்டான் ஏழாவது குழந்தைபிறக்க அக்குழந்தையைநந்த கோபன்மனை சேர்த்து தேவகியின் கர்ப்பம் கலைந்துபோ

யிற்றென்று பிரசித்தப் படுத்தினர்கள். எட்டாவது குழந்தைமகா விஷ்ணுவே சங்குசக்கரதாரியாய்க் கிருஷ்ணனெனப் பிறக்க நந்த கோபன் மனைவிய சோதையிட மிக்குழந்தையைச் சேர்த்துவிட்டு அவ்வசோதை விஷ்ணு மாயையாற் பெற்ற பெண் குழந்தை யைத் தேவகியிடங்கொண்டு வந்து சேர்த்துக்கம்ஸனிடம் ஒப்பு விக்க அக்குழந்தையைக் காலைவாரிக் கீழேயடிக்கப் போகுங்கால் கையினின்றும் விடுபட்டு ஹே! கம்ஸா, தூர்த்தா, கொடியா உன் னைக்கொலை செய்ய மற்றொரு வீட்டில் ஒரு குழந்தை வளருகிறான் அவனைக்கண்டு பிடித்துக்கொல், என்று சொல்லி ஆகாயத்தில் மறைந்தது. அதைக்கேட்ட கம்ஸன் வியாகூல சித்தனாகப் பூதனை முதலான கொடிய பூதங்களிடம் அவனைக் கொன்று வரும்படி ஆக்ஞாபிக்க அவைகளெல்லாம் வந்து கிருட்டிண பகவானால் மர ணமாகியமலோகஞ் சேர்ந்தன சின்னாட் பின்னர் ராமகிருஷ்ணர் களை, கம்ஸன் தன்னரண்மனைக்கு அழைக்க அவர்கள் வரும் வழியிலே காவலாளிகளாக விருந்த மல்லர்களைக் கொன்றும், குவ லயாபீடமென்னும் யானையின் கொம்பையொடித் திருவர்களு மிரண்டாகப் பிடித்துக் கொண்டணுகி மஞ்சத்தின் மேலிருந்தகம் ஸன் காலைப் பிடித்திழுத்துக் கொன்று கூத்தாடி, கம்ஸனுக்குப் பயந்து தூரதேசங்களிற் குடியேறி யிருந்த தங்கள் பந்துக்களை யெல்லாம் அழைத்துக் கொண்டு சுகமாய் வாழ்ந்து கொண்டிருக் குங்கால் நாரதர் வாக்கின்படி மாமனைக் கொன்றதாலேற்பட்ட பாபம் தீரும் பொருட்டு ஸ்ரீ கிருஷ்ணபகவான் கந்தமாதன கிரி யின் கண்ணமர்ந்த இந்தக்கோடி தீர்த்தத்தில் நீராடிப் பாபம் நீங் கப் பெற்றார். இந்தத் தீர்த்தத்தில் ஸ்நாநம் பண்ணி விட்டு அவ் விடம் நிற்காதேக வேண்டும். ஏனென்றால் ஸ்ரீராமபிரான் இதில் ஸ்நாநஞ்செய்து தங்காதுடனே வேறு தீர்த்தங்களில் ஸ்நாநம் பண்ணாது கந்தமாதனத்தை விட்டுச் செல்லவேண்டிய தவசியமே இதற்குச் சமானமான தீர்த்தங்கிடையவே கிடையாது.

இருபத்தோராவது அத்தியாயம் முற்றிற்று.

இருபத்திரண்டாவது அத்தியாயம்.

சாத்தியாமிருததீர்த்தம்.

எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

துன்னுமதி குலதிலக புரூரு வென்னுந் தோன்றலுருப் பசியடைந்து விடுத்த பின்னர், பொன்னுலகில் மீண்டனுகி யவடன் போகம் புரிந்திடவும் புரிந்திலகிப் புனிதம் வாய்ந்த, தன்னீராடி டினவர்சிவ பதவி சேரத் தக்கநல னளிக்கவந்த தகைமை சார்ந்து, மன்னியவாஞ் சாத்தியா மிர்ததீர்த்தத்தின் மகிமையினை யெமக்கறிந்த மட்டுஞ் சொல்வாம்.

மேற்கூறின கோடிதீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணிவிட்டுத் தானிந்தத் தீர்த்தத்திற்கு வரவேண்டியது இதில் நீராடினவர்களுக்கு வேண்டிய வரங்களையும் மோட்ச வீட்டையும் அசாத்தியமில்லாது சாத்தியமா யளிக்குந் தன்மையைப் பொருந்தி யிருப்பது பற்றி இதற்குச் சாத்தியாமிருத தீர்த்த மெனப்பெயர் வழங்கிக்கொண்டு வருகிறது. பூர்வகாலத்தில் சந்திரகுலத் தோன்றலாகிய புரூரவச் சக்கிரவர்த்தி மைத்திரா வருணனுல் நாதனைக்கூடி இன்பமனுபவிப்பாயென்று சபிக்கவேற்ற ஊர்வசி பூலோகத்திற்கு வந்து தன்னுடைய உத்தியானவனத்தில் வீணுகானஞ்செய்து கொண்டிருப்பதை நோக்கி மோகக் கடலிலாழ்ந்துஹே! மாதுசிரோன்மணி என்னை வரித்துக்கொள்ளுவாயா வெனப்பணிந்து, கேட்க ஊர்வசி அரசனை நோக்கி எனக்கு மூன்று வரங்கள் தரவேண்டும். அவையாவன என்னிடமிருக்கிற இரண்டு ஆட்டுக்கடாக்களைக் காப்பாற்ற வேண்டும் எனக்கு முன் நிர்வாணியாய் வரக்கூடாது அன்றியும் உம்முடைய எச்சலை உண்பிக்கப்படாது இம்மூன்று வரங்களையுங் கொடுத்தால் உம்முடன் கூடிவாழ்வேன் இவைகளிலிருந்து இடை நடுவில் தவறிவிடுவீராகில் உம்முடன் சொல்லாதேகி விடுவேன் என்று சொன்னுள். அதற்குச் சம்மதித்து அவளை விவாகம் பண்ணிக்கொண்டு நகரத்திலேயுமிராது சமீபத்திலுள்ள சரஸ்வதி நதிக்கரை யோரத்திலோர் சிங்காரமாளிகையமைத்து அறுபது வருஷகாலம் வாசம்பண்ணிக் கொண்டிருக்குங் கால் ஊர் வசியில்லாது தேவநாடு சோபிதமில்லா திருக்கக் கண்ட விசுவாவிசு வென்னுங் கந்தருவன் ஓர் நாளிருண் மிகுந்த நடுராத்திரியில் வந்து மெள்ள ஆட்டுக்கிடாக்களைத் தூக்கிச்சென்றான். அதுகண்டு ஊர்வசி ஐயோ யாரோ நான் பிள்ளைபேர்ல்

வளர்த்த ஆட்டுக் கிடாக்களைத் தூக்கிக்கொண்டு செல்கிறானெனக் கதறினள். உடனே புரூரவன் கட்கத்தைக் கையிற் பிடித்துக்கொண்டு அவசரமாய்த் திருடர்களை நோக்கிச் செல்லுங்கால் ஆடை நழுவ அதைத் தெரியாதவனாய்ச் சென்றான். அந்தத்தருணத்தில் கந்தருவர் மாய்கையாலோர் வெளிச்சந்தோன்ற அவ்வெளிச்சத்தால் அரசன் நக்னமாயிருப்பது கண்டு உடனேசொல்லாது தன் பதிக்கேகினள். அரசன் வந்து பார்த்துக் காணாதுமையல் மீறியெங்குந் தேடிக்கொண்டு திரிந்து ஓர்தாமரைத் தடாகத்தில் இரண்டு மூன்று இதரஸ்திரீகளோடு ஜலக்கிரீடை பண்ணிக் கொண்டிருப்பதைக்கண்டு அடிபாதகி என்னைப் பிரிந்து சென்றாயே இது தன்மமா இது முறையா என்று பல விதமாய் அங்கலாய்க்கும் அரசனைப் பார்த்து வருந்தாதீர் உமக்குக்கர்ப்பவதியா யிருக்கிறேன் இன்னும் பத்து மாதங்கழித்து இங்குவருவீராகில் உம்முடைய குழந்தையைத் தந்து ஓர் நாள் முழுதும் கூடி யிருந்தேகுவனெனச் சொல்லி மறைந்தனள். அப்படியே அரசன் பத்து மாதங் கழித்தவன் வர ஊர்வசி ஆயுவென்னும் பிள்ளையோடு வந்து ஒருநாள் முழுவதும் அவ்விறைவனோடு கூடியிருந்து குழந்தையைக் கொடுத்தேகும்போது பிரிவாற்றாமையால் வருந்துமரசனைப் பார்த்து நீர் தும்புரு முதலானவர் களிடமேகி என்னோடு எப்பொழுதும் சுகித்திருக்கக்கூடிய வழிகளைச் செய்து கொள்ளுமென்றுரைத்தேகினள். அப்படியே புரூரவன் அவர்களிடமேகித் தன் குறைகளையெல்லாஞ் சொல்லியழுக அன்னவர் இம்மன்னவர் பேரிற் கிருபைகூர்ந்து ஓர் அக்கினிஸ்தாலியை (ஸ்தாலி-மண்பாண்டம்) கொடுத்து இத்தாலியிலிருந்து மூன்று கூறாய் அக்கினியெடுத்து யாகங் களையியற்று வையாகில், ஊர்வசி யின்பத்தை எஞ்ஞான்றும் பிரியாதிருப்பாயென்று ரைத்தனர். அதைக்கேட்டுப் புரூரவன் அக்கினிஸ்தாலியை எடுத்துக்கொண்டு வரும் வழியிற்போட்டுவிட்டு அரண்மனைக்குத்திரும்பிவிட்டான் மறுநாட்காலையிலெழுந்து அக்கானிடஞ்சென்று அக்கினிஸ்தாலியைப்போய்ப் பார்க்கக்காணாதவடத்தி லோர் அரசமரம் நிற்கக்கண்டு அதைவெட்டிக்கொண்டு வந்து 24-அங்குலப் பிரமாணமாய் அரணிசெய்து தக்ஷிணாக்கினி, காருகபத்தியம், ஆகவனீயமென்கிறமூவகையான அக்கினிகளை வளர்த்து யாகஞ்செய்து, கந்தர்வலோகஞ் சென்று ஊர்வசியினுடன் கூடி வாழ்ந்துகொண்டிருந்தான். அப்படி வாழ்

துக்கொண்டிருக்குங்கா லோர்நாள், தேவேந்திரன்சபைக்கு ஊர்வசிநடிக்கச்சென்றாள். புரூரவனுங்கூடச் சென்றான். ஊர்வசியானவள் அதிக உல்லாசத்தோடு பரதவிதிப்படி நம்மையன்றி நடிப்பவ ரில்லையெனச் செருக்கி நடித்துக்கொண்டிருக்குங்கால், புரூரவனைப்பார்த் திவள்சிரிக்க, புரூரவனு மவளைப் பார்த்துச்சிரித்தான். இப்படி யிவர்கள் சிரித்துக்கொண்டிருப்பதினால், சுதிக்கியானஞ் சிறிது விலகக்கண்ட நாட்டியாசாரியான தும்புருவர்கண்டு, சினந்து இக்கணமே நீங்களிருவர்களும் பிரிந்துவிடுவீர்களென்று சபிக்க, உடனே புரூரவன் மனம்வருந்தி, வாசவனிரண்டு பாதங்களைப் பிடித்துக்கொண்டு இவ்வூர்வசியைவிட்டு விலகுவேனாகில், உய்யேன், உய்யேன், என்னை யிச்சாபத்தினின்றுங் காப்பாற்றுமெனப் பணிந்துகதற, இந்திரன் புரூரவன்மேற் கிருபைகூர்ந்து சொன்ன இச்சாத்தியாமுத தீர்த்தத்தில் நீராடிச் சாபவிமோசனம் பெற்று ஊர்வசியை நீங்காது கூடிக் களித்துக்கொண்டிருந்தான். இதில் காமியார்த்தமாய் ஸ்நாநம்பண்ணுவோர் சகல சித்திகளையும் நிஷ்காமமாய் நீராடுவோர் மோக்ஷார்த்தத்தையு மடைவார்கள் இது சரதமே.

இருபத்திரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

இருபத்துமூன்றாவது அத்தியாயம்.

சர்வ தீர்த்தம்.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

கண்ணிரண்டும் பழுதாகிக் கொடியநோய் நரைதிரையிற் கலுழ்ந்து சிதப்
புண்ணியநற் றீர்த்தமெலா மாடமனங் கொண்டுகந்தப் பொருப்பினுப்பண்
நண்ணியசு தரிசனனும் வேதியற்குப் பலனளிக்க நாடி யீசன்
றிண்ணியமா விடைக்குளம்பில் வரவழைக்கவந்தசர்வதீர்த்தஞ்சொல்வாம்.

முன்சொன்ன சாத்தியாமுத தீர்த்தத்தில் ஸ்நாநம்பண்ணிவிட்டுத்தான், இந்தப் புண்ணியதீர்த்தத்தில் ஸ்நாநம்பண்ணவேண்டும். பிருகுமாரிஷியின் வம்சத்திலுற்பவித்த சுதரிசனனென்னுமோர் அந்தணன் பிறவிக்குருடனேடு, மிகுந்த வியாதியினாலும், நரைதிரைமூப்பினாலும் உழன்றுகொண்டிருந்தான். அப்படியிருந்தும் சகல புண்ணியதீர்த்தங்களிலும் நீராடவேண்டுமென்ற ஆவ

னுடைத்தானவனுயிருந்தான், இவன் குருடனுகவும், விருத்தனுகவு மிருந்ததினுலே தன் மனக்குறையைத் தீர்த்துக்கொள்ள முடியாத வனுய், பத்தர்களினுள்ளத்தையே பதியாகக்கொண்ட பரமேச்சு ரனை நோக்கி பஞ்சாக்கினிமத்தியில் சிலகாலம் ஜலபட்சணம் பண் ணியும், சிலகாலம் வாயுபட்சணம்பண்ணியும், சிலகாலம் உபவா சமாயிருந்தும் பத்துவருடகாலம் கடுந்தவமிழைக்க, ஈசன் பிரசன் னமாகிச் சுதரிசனனுக்கு நேத்திரங்கொடுத்து அன்னவன் மனத் திற்கொண்ட சர்வதீர்த்தங்களையும் வரவழைத்து தன் மகிமையார் ந்த ரிஷபத்தின் வலிமைதங்கிய குளம்பினுற் கீறப்பட்டகுழியி லடங்கும்படிசெய்து, சுதரிசனனைப்பார்த்து ஹே! சுதரிசன், நின் னுடைய எண்ணப்படி சர்வதீர்த்தங்களை யிங்கு வரவழைத்தேம். நீராடுவாயாக என்றருளிச்செய்ய சுதரிசனன் மூழ்கி, யௌவனதி சையடைந்து மாதேவ! கபாலி! சம்போ! ஹரிஹர! சுயம்பூ! கால கால! கருணுநிதே என்று பலவிதமாக ஸ்தோத்தியம்பண்ணி ஆன ந்தபாஷ்பமொழுகநின்றுன். அப்படிநிற்கும் சுதரிசனனைச் சிவபெ ருமான் நோக்கி சுதரிசன்! நின்னைவேண்டிச் சகலதீர்த்தங்களும் வந்து தங்கியிருந்ததினுலே இதற்குச் சர்வதீர்த்தமென்றும், எல் லாத் தீர்த்தங்களும் என்மனதினுல் நினைக்கவந்ததுபற்றி மானச தீர்த்தமென்றும் பெயரேற்றுத் தன்னிடம்வந்து குடைபவர்களுக் குச் சகலவைபவங்களையுங்கொடுத்துப் பிரகாசித்துக்கொண்டிருக் கக்கடவது. என்று பலவரங்களளித்து மறைந்தருளினர். அன்று தொட்டிதற்குச் சர்வதீர்த்தமென்றும் மானசதீர்த்தமென்றும் பெ யர் வழங்கிக்கொண்டுவருகிறது. இந்தத்தீர்த்தத்தில் ஸ்நாநம் பண் ணவேண்டுமென்று நினைத்தவளவிலேயே, அவர்களைப்பிடித்திருக் கிற பாபமுதலானவை சொல்லாதேகுமென்ருலிதன்பெருமையை யெவரெடுத்துரைக்கவல்லார்.

இருபத்துமூன்றுவது அத்தியாயம் முற்றிற்று.

இருபத்துநான்காவது அத்தியாயம்.

தனுக்கோடி தீர்த்தம்

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

வாதுசெய்து ராவணனை முடித்துச் சீதை மங்கைபரி வாரமுடன் வாரி வாய்ந்த, சேதுதனைக் கடந்துகரை யடைந்த பின்னர் திமிரநிறத் தவுணர்குழாஞ் சோர வண்ணம், ஏதமறு நின்றனுவின் கோடி யாலே யிடிப்பையெனத் தசமுகன்போற் கிளையோ னன்றெர், கேதமொழி போலுடைத்தம் பெருகச் செய்தங் கோங்குதீர்த் தப்பெருமை யுரைசெய் வோமால்.

மேலேசொன்ன சர்வதீர்த்தத்தில் நீராடிய பின்முனிதற்கு வரவேண்டும். அங்கம், அருணம், அவந்தி, ஆந்திரம், இலாடம். யவனம், ஒட்டியம், கருசம், கலிங்கம், கன்னடம், கன்னடம், காசம், காஸ்மீரம், காந்தாரம், காம்போசம், கிராடம், குருகு, குடகம், குந்தளம், குரு, குலிந்தம், கூர்ச்சரம், கேகயம், கேரளம், கொங்கணம், கொல்லம், கோசலம், சகம், சவ்வீரம், சாலவம், சிங்களம், சிந்து, சூரசேனம், சோழம், சோனகம், திராவிடம், துளுவம், தெங்கணம், நிடதம், நேபாளம், பாஞ்சாலம், பப்பரம், பல்லவம், பாண்டியம், புலிந்தம், போடம், மகதம், மச்சம், மராடம், மலையாளம், மாளவம், யுகந்தரம், வங்கம். வங்காளம், விதர்ப்பம், என்னுமைம்பத்தாறுதேயங்கட்கு மதிபதியான, தசரதசக்ரவர்த்தியின் சிரேட்டபுதல்வரான ஸ்ரீராமபிரான் இராவணசம்ஹாரமுடித்துச் சீதாபிராட்டியாரோடும், மற்ற படைகளோடுங் கரைவந்திருக்குங்கால் விபீஷணாழ்வான் பணிந்து! ஜகநாதா! இலங்கையிலிருந்துங் கொடிய அரக்கர்கள் சேதுவழியாய்க்கரையணுகி உலகத்தவர்களை இம்சியாதிருக்க திருவணையையுடைத்துக்காப்பாற்றியருள்புரிவீரென்று பிரார்த்திக்க உடனே ஸ்ரீராமமூர்த்தியானவர் தன்னுடைய கையிலிருந்த தனுவின்கோடியாகிய நுனியினால் திருவணையைக் குறுக்கேகீறியுடைத்து இரண்டுசமுத்திரஜலமும் பொருதும்படிசெய்தார் அக்காரணம்பற்றியே அவ்விடமானது தனுக்கோடியெனப் பேர்விளங்கிக்கொண்டிருக்கிறது.

பூர்வகாலத்தில் திரிதராட்டிரன் புத்திரர்களான கௌரவர்களுக்கும் பாண்டுவின் புத்திரர்களான பாண்டவர்களுக்கும் தாயாதிவிஷயமாய் நடந்த பாரதப்பெரும்போரில் கௌரவ குலசிகாம

ணியான துரியோதனன் பதினேழா நாள்வரை தன் சேனுசைனி யங்களைத்தோற்றுப் பதினெட்டாம்நாள்தான் வீமனால் தொடையி லடிபட்டு இரணகளத்திற்குற்றுயிராய்க்கிடக்குங்கால், கிருதவர்மா, கிருபாசாரி, அசுவத்தாமாவாகிய மூன்று பேர்களும் வந்து துரி யோதனனைப்பார்த்து விசனப்பட்டழுதார்கள், பின் அசுவத்தாமா அநேகந் தேறுதலைகளைச் சொல்லி துரியோதனனிடமிருந்து சே னுதிபதிப் பட்டம்பெற்று, கிருதவர்மா, கிருபாசாரியோடு, ஐவ ரில்லாத நேரம் பாண்டவர்கள் பாசறைக்குட்சென்று ஆழ்ந்த நித் திரையிலிருந்த திருஷ்டித்துய்மனையும் உபபஞ்ச பாண்டவர்க ளாகிய சிசுக்களையும் கொன்ற தோஷத்தினாலே தவசிரேஷ்டர்க ளால் இகழப்பட்டு கடையில் வியாகூல சித்தனாய் வேதவியாசரி டம்சென்று தன்னுடைய குறைகளைச் சொல்லி முறையிட அன் னவர் பரிந்துரைத்த இந்தத்தீர்த்தத்தில் ஒரு மாதம்வரை வேதா கமப்படி ஸ்நாநஞ்செய்து தன்னுடைய சிசுஹத்திமுதலான தோ ஷங்களை நிவர்த்திசெய்து கொண்டான்.

இன்னும் சந்திரகுலத்தி லுதித்த தருமசீலனான தருமகுப்த னென்னும் அரசன் வேட்டமாடச் சென்று களைத்து இருட்டாய் விட்டதால் துஷ்டஜெந்துக்களுக்குப் பயந்து ஓர் விருட்சத்தின் மேலேறி உட்கார்ந்திருக்குங்கால் ஓர் மயிரடர்ந்த கரடியானது சிம்மத்தாற் பின்றொடரப் பட்டுப்பயந்து இவ்விருட்சத்திலேயே யேறிக் கொண்டது சிம்மம் மரத்தடியில் காத்துக் கொண்டிருந் தது. உயரவேறின கரடி சமீபத்திலிருந்த அரசனைப்பார்த்து பயப் படாதே. இந்த இராத்திரி முழுவதும் தூங்காதிருந்தாற் றப்பி ழைப்போம் அல்லாவிடில் தூக்கத்தால் சோர்ந்து கீழே விழுந்து சிங்கத்தின்கையி லகப்பட்டுக் கொள்வோம். ஆகையால் பாதிநே ரம் நான் விழித்துக்கொண் டிருக்கிறேன் நீ நித்திரைசெய், பின் பாதி நான் நித்திரை செய்கிறேன் நீ விழித்துக் காத்துக் கொண் டிருவென்று சொல்லித் தன்மடியில் அரசனைப் படுக்கச்செய்து தான் விழித்துக் காத்துக் கொண்டிருந்தது. அப்படி யிருக்கும் போது சிங்கம் கரடியைப் பார்த்து, கரடியே உன் மடியில் படுத் திருக்கிற மனிதனை மெள்ளத் தள்ளி விடுவையாகில் நான் தின்று சென்று விடுகிறேன் என்று சொல்ல, கரடிகேட்டு அடே தருமமு ணராத பாதகா! எல்லாவித மோசத்திற்கும் பிராயச்சித்தமுண்டு ஆனலிந்த நம்பிக்கை மோசத்திற்குமட்டும் பிராயசித்தங் கிடை

யாதெனச் சொல்லிற்று அதைக்கேட்ட சிம்மம்பேசாது மரத்தின் கிழே காத்துக்கொண் டிருந்தது. பின் அரசனெழுந்து கரடியைத் தன் மடியிற் படுக்கவைத்துத் தான் காத்துக்கொண்டிருந்தான். அப்பொழுது சிங்கம்மேலே நோக்கி. ஹே. மனிதா நீ மெள்ள உன் மடியிற்படுத்துக்கொண்டிருக்கிற கரடியைக் கிழே தள்ளி விடுவையாகில் நான் தின்று இங்கு நிற்காது சென்று விடுவேன் என்று சொல்லிற்று. உடனே அரசன் பயம்நீங்கிற்றென்று நினைத்துக் கரடியைத் தள்ளினன், நகங்களுள்ள தன் காலால் கிளை முதலானவைகளை ஆதாரவாகப் பற்றித் தொங்கிக்கொண்டு மேலே பார்த்து அடே. விசுவாசகாதகா என்னை யாரென்று நினைத்தாய் நினைத்த வுருவெடுக்கக் கூடிய வல்லமை பொருந்திய பிருகுவம்சத்தில் தோன்றின தியான காஷ்டரல்ல வாடா! நீ நம்பின என்னை மோசஞ்செய்தால் நீ பைத்தியமேற்றுத்திரியக் கடவாயெனச் சபித்து கிழே நின்ற சிம்மத்தைப் பார்த்து. ஏ ! சிம்மமே நீ முன் ஜென்மத்தில் குபேரன் மந்திரியாகிய பத்திரன் ! நீ உன்னுடைய ஸ்திரீயோடு சம்போகம் பண்ணித் திகம்பரனு யிருப்பதைக்கண்ட கௌதமர் கோபித்துச் சிங்கமாய்ப் போகக் கடவாயெனச் சொல்ல இவ்வுருவேற்று யல்லவா நீ குபேரன் மந்திரியா யிருந்தும் ரிஷியாகிய என்னை ஏனிம் சிக்கிறுயென்று சொல்ல கேட்ட சிம்மம் தன்னுருவத்தை விட்டுப்பழைய ரூபத்தை யேற்று. ஏ. நாதா! கௌதமர் சபித்தகால் தியான காஷ்டர் கரடி ரூபமாய் வந்து நின்னேடு சம்பாஷித்த வளவிலேயே விமோசனமாகி விடுமென்று சொல்லி யிருக்கிறுர் இப்பொழுதுதா னெனக்குத் தோற்றுகிற தென்று பலவிதமாய்த் துதித்து உத்தரவுபெற்றுத் தன்பதியையடைந்தான். பின்னர்தியானகாஷ்டர்சாபத்தால் பைத்தியம்பிடித்த தருமகுப்தன் எங்குமலைந்து திரிந்து தன் பட்டணம்வரநந்தனுகிய அன்னவன் றகப்பன் கண்டு மனம் வருந்தி ஜைமினி முனிவரிடம் கூட்டிக்கொண்டு சென்று தன் மகன் வரலாற்றைச் சொன்னுன். அம்முனிவர் பரிவுகூர்ந்து விரித்துரைத்த இந்தத் தீர்த்தத்தில் மூழ்கி தருமகுப் தன பைத்தியம் நீங்கித் தன்ராஜ்ஜியத்தைப் பரிபாலித்தான். நந்தனுகிய அன்னவன் றந்தையு மூழ்கிச் சுவர்க்கத்தை யடைந்தான்.

பராக்கிரமசாலியாகிய பிருகத்துய்மனனென்னு மரசன் சத்திரயாகஞ் செய்யத்துடங்கி சகல சாத்திரபண்டிதரான ரைப்பிய

ரென்னு முனிவரிடஞ் சென்று தன் யாகத்தை நிறைவேற்றிக்கொடுக்க வேண்டுமெனப் பிரார்த்திக்க அம்முனிவர் கேட்டு மகா வல்லவர்களான பராவசு, அர்வாவசு என்னும் தன்புத்திரர்களைப் பௌரோகிதர்களாக விருந்து யாகத்தை நிறைவேற்றும்படி சொல்லி, அரசன் கூட அனுப்பினர் பராவசு, அர்வாவசு என்னு மிருவர்களும் வந்து யாகத்தை நிறைவேற்றி, மூன்ருவது யாக முடிந்ததும், பராவசு வென்பவன் தன் ஆச்சிரமத்தை நோக்கிச் சென்றபோது வாடையால் மெலிந்ததன் றந்தையாகிய ரைப்பிய முனி புலித்தோலால் தன்றேகத்தை மூடிக்கொண்டிருந்தார். அதைக்கண்ட பராவசு யாகத்தில் விழித்திருந்து வேலை செய்த அலுப்பினலும், தூக்கமயக்கத்தினலும் மயங்கித் தன்மேல் பாய வரும் புலியென நினைத்துக் கொன்று விட்டான். பின்னர் சமீபத்திற் சென்று பார்க்சத் தன்றந்தையெனக் கண்டு அடங்காமன வருத்தத்தோடு மீண்டு தன்றம்பி அர்வாவசு விடம் வந்து நடந்த விர்த்தாந்தங்களை யெல்லாம் விளங்க உரைத்துத் தம்பி நீயோசிறு பிள்ளையா யிருக்கிருய் இராஜனே பெரிய யாகத்தைத் துடங்கி விட்டான். ஆகையால் நீ தந்தையைக் கொன்றதாலெனக் கேற்பட்ட பிதுர்ஹத்தியைப் பெற்றுக்கொள், நான் யாகத்தை நிறைவேற்றுகிறேன் என்று சொன்னன். அப்படியே தம்பியாகிய அர்வாவசு ஒத்துக்கொண்டு ஹத்தியையேற்று வெகுகால மெங்குந் திரிந்தலைந்து கடைசியில் சூரியனை நோக்கித் தவமியற்றினன். சூரியனத்தவத்திற் கிரங்கிப் பிரசன்னமாகி இறந்துபோன அவன் றந்தையாகிய ரைப்பிய முனிவரை உயிர்த்தெழும்படி செய்துஉன் அண்ணன் செய்த பிரமஹத்தி தனுக்கோடியின் ஸ்நாநத்தாற்ருன் விலகவேண்டு மென்று சொல்லி மறைந்தனன். அப்படியேதான் தன் அண்ணனுகிய பராவசுவைக் கூட்டித் தனுக்கோடிக்குச் சென்று இருவர்களும் அதில் ஆகம விதிப்படி நீராடி மீண்டு தம் ஆச்சிரமத்திற்கு வந்து உயிரோடிருந்த தங்கள் தந்தையைக்கண்டு சகல தோஷங்களும் நீங்கிச் சுகமாய் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

ஓரடர்ந்த கானில் வாசஞ்செய்து கொண்டிருந்த நரிசமத்தில் சென்று பிணத்தை இழுத்துத் தின்றுகொண்டிருக்குங்கால் முன் மானிடப் பிறப்பில் சிநேகமாயிருந்த ஓர் குரங்கு சமீபத்திலணுகி ஏ மித்திரா நீ முன் ஜென்மத்தில் என்னபாவஞ் செய்ததாலிப் பேர்ப்பட்ட கொடிய பிறப்பையடைந்தாயென நரி ஏ மித்திரா!

நான் முந்தின ஜென்மத்தில் தேவசர்மா வென்னும் பிராமணனுக்குக் கொடுக்கிறதாகச் சொன்ன பணத்தைக் கொடாததினு லிப்பேர்ப்பட்ட இழிவான மிருக ஜென்மத்தையடைந்தேன் நீ என்ன பாவத்தைச் செய்ததினுல் இந்தக் குரங்கு ஜென்மத்தை யடைந்தாயென்றது. அதற்குக் குரங்கு நான் முந்தின ஜென்மத்தில் வேதியர் குலத்துதித்த விசுவநாதனுக்கும், கமலாமாயைக்கும் பிறந்தவன் என் பெயர் வேதநாதன். நான் பிராமணனுடைய தோட்டத்தின் வேலியைத் தாண்டிக் காய்கறி திருடிக்கொண்டு வந்ததினுலே இந்த ஜென்மத்தை யடைந்தே னென்றது. இப்படியாக ஒன்றுக்கொன்று செப்பி விர்த்தாந்தங்களைத் தெரிந்து கொண்டு, இதை எப்படி நிவர்த்திசெய்து கொள்ளுவோம். எம்மஹானுபாவனிடஞ் சென்று முறையிடுவோ மென்று மனவருத்தத்தோடு நின்றனன். அப்பொழுது விபூதி உத்தூளனராய் கையில் உருத்திராக்க மாலையைத் தரித்துக்கொண்டு, சிந்துத்வீபரென்னு மாமுனிவர் வர அவரைக்கண்டு வணங்கி பிரபூ எங்களை இச்சன்மத்தினின்றும் விலகும்படியான ஓர் உபாயத்தைச் சொல்லிக் காப்பாற்றி யருளுவீரென்ன, முனிவர் இச்செந்துக்களுக் கிரங்கி ஏ குரங்கு நரிகளே உங்கள் பூர்வஜென்மத்தை யறிந்து கொண்டேன். நீங்களிருவரும் தென் சமுத்திரத்திலுள்ள தனுக்கோடியிற் சென்று நீராடுவீர்களாகில் விமோசன மடைவீர்கள். இதில் பூர்வத்தில் கள்ளைக்குடித்தும், சொர்னத் திருட்டுச் செய்தும் வேடஸ்திரீயோடு கூடிக் கலந்திருந்தவனுமான சுமதியென்னுமோர் பிராமணன் நீராடிப் பரிசுத்தனுனன் என்று சொல்ல நரிகுரங்குகள் முனிவரைப்பணிந்து அந்தச்சுமதியின் சரித்திரத்தைவிரிவாக எங்களுக்குச் சொல்லவேண்டு மென்றன, அதற்கிணங்கி முனிவர் சொல்லுவாராயினர்.

வளங்கண்மலிந்த மகாராஷ்டிரதேசத்தில் யக்ஞதேவனென்னுமோர் பிராமணனுக்குக் கொடியதுஷ்டனுன ஓர் புத்திரனிருந்தான். அவன்பெயர் சுமதி, அச்சுமதியெனுங் கொடியன் தன் தாய்தந்தை முதலினேரை விடுத்து உற்கலமென்னுந் தேசஞ்சென்று ஆங்குள்ள வாலிபர்களை வேசைத்தொழிலால் மயக்கிக் காலங்கழித்துக் கொண்டிருந்த ஓர் வேடஸ்திரீயோடு கூடி அவளோடு ஓர்கலத்திலுண்டும், சுராபானம் பண்ணியும் பொழுது போக்கிக் கொண்டிருக்குங்கால் அவ்விடத்திலுள்ள வேடர்க

ளோடு சேர்ந்து, திருடப்போய், ஓர் பிராமணன் வீட்டினுள் நுழைந்து அப்பிராமணனையும் அவன்மனைவியையுங் கொன்று பொருள்களைக் கவர்ந்துகொண்டு வெளியேறிவரும்போது, பிராமணனைக்கொன்றதா லேற்பட்ட பிரமஹத்தி கருத்த உருவத்தோடு பின்றொடர்ந்து இத்தச் சுமதி யென்பவனை விரட்டப்பயந்தோடித் தன் றந்தையின் காலில்விழுந்து கட்டிக்கொண்டு என்னைக்காப்பாற்று மென்றுகதற, தந்தை எதிரினின்ற பிரமஹத்திக்குவேண்டிய சமாதானங்கள் சொல்லியுங் கேளாமல் சுமதி யென்பவனை இழுத்து அடித்துத் தொந்தரைபண்ணினது. அந்தத் தொந்தரையைப் பார்த்து, யக்ஞதேவன் அழுதுக் கொண்டிருக்குங்கால், தூருவாசமஹரிஷி அவ்வழியாய்வரக் கண்டு பணிந்து தன் மகனுக்கு நேர்ந்ததைச் சொல்லி முறையிட முனிவேதியனைப்பார்த்து ஹே! யக்ஞதேவா உன்மகன்செய்த காரியங்களுங் கொடியனவே ஆயினும் தென்சமுத்திரத்தில் தனுக்கோடியிற் சென்று ஸ்நானம் பண்ணுவானாகிற் சகலமும் நிவர்த்தியாகிவிடும். அதைத்தவிர்த்திதற்கு வேறே பிராயசித்த மொன்றுங்கிடையாது இந்தத்தீர்த்தத்தில் மாதாவைப்புணர்ந்த துர்வீநீதமென்னும் பிராமணன் கூடஸ்நாநம்பண்ணி முத்தியடைந் திருக்கிறனென்று சொல்ல யக்ஞதேவன் பணிந்து பிரபூ அந்த துர்விநீதனென்னும் பிராமணன் சரித்திரத்தை நாங்கள்கேட்டு நல்வழி சேரும்வண்ணம்சொல்லியருளவேண்டுமென்ன தூர்வாசரிஷி சொல்லத்துடங்கினார். முத்தமிழுக்குப் பிறப்பிடமாயுள்ள தாயும் பரமேச்சுரன் அறுபத்துநான்கு திருவிளையாடல்களைப்புரிந்த க்ஷேத்திரமுமான மதுரையைத் தலைமைநகராய்க்கொண்ட பாண்டிய நாட்டின்கண் இத்மவாகனென்னு மோர் பிராமணன் அதிரூபவதியான தன் மனை ருசியென்பவளோடு கூடிக்கலந்திருந்து துர்வநீதனென்னு மோர் பிள்ளையைப் பெற்று நிரியாணதிசையை யடைந்தான். அப்பால்தாயும் பிள்ளையுமாக வசித்துக் கொண்டிருக்குங்கால் அந்நாட்டில் பன்னிரண்டு வருடம் க்ஷாமம் ஏற்பட துர்விநீதன்தன்றாயோடு கோகர்ணம் வந்து சிலகாலம்வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அப்படி யிருக்குங்கா லோர்நாள் துர்வநீதன் காமவிடாய் கொண்டு தன்றாயைப் பிடித்திழுத்துப் பலாத்காரமாய்ப்புணர்ந்து விடாய் தணிந்தபின் தன் செய்கையைப்பற்றி இகழ்ந்து கொண்டு மனவருத்தத்தோடு தவசிரேட்டர்களிடஞ்

செல்ல அவர்களா லிகழ்ந்து துரத்தப்பட்டுக் கடைசியில் வேதவியாசரிடஞ் சென்று முறையிட, அம்மஹானுபாவர் கிருபைகூர்ந்து அடே பாவி. நீயுன் றாயோடு இராமதனுக்கோடி தீர்த்தத்திற் சென்று சூரியன் மகரத்திற்கு வந்தமாதமாகிய உஷற்காலத்தில் ஓர் மாதம்வரை சங்கற்பப்படி ஸ்நாநஞ் செய்வையாகில் மாதுரு கமனதோஷம் நிவர்த்தியாகு மென்றுசொல்ல, அப்படியேதுர்விநீதன் தன்றாயோடு தனுக்கோடிக்குச்சென்று நீராடி மீண்டு வேதவியாசரிடம் வந்துபணிந்து நின்று அன்னவரா லுபதேசிக்கப்பட்ட நன்னீதிகளைக் கைக்கொண்டு தன் பழையபதியடைந்து விவாகஞ் செய்துகொண்டு தாயோடுஞ் சுகமாய் வாழ்ந்துகொண்டிருந்தானென்று துருவாசமாரிஷி சொல்ல யக்ஞதேவன் தன் பிள்ளையைக் கூட்டிக்கொண்டு தனுக்கோடி தீர்த்தத்தில் வந்து ஆறுமாதகாலம்வரை ஸ்நாநஞ் செய்து தன் பிள்ளையின் பிர்மஹத்திநீங்கிவிட்டதாக அசரீரிசொல்லக்கேட்டுத் தன் பிள்ளையோடு ஊர்வந்தடைந்து சுகமாய் வாழ்ந்துகொண்டிருந்தான். ஹே! நரி குரங்குகாள் நீங்கள் கேட்டுக்கொண்டபடி சுமதியின் சரித்திரத்தைச் சொல்லிவிட்டேன். நீங்களுமப்படியே தனுக்கோடி தீர்த்தத்திற்சென்று நீராடுங்களென்று சிந்துத்வீபர் சொல்லி மறைந்தருளினர். அப்படியே நரி குரங்குகளும் விரைவாக வழிநடந்து தனுக்கோடி தீர்த்தத்தில் வந்து நீராடித் தங்கள் பழைய திவ்ய சரீரம்பெற்று விமானத்திலேறி விண்ணுலகஞ் சென்று இந்திரனோடு சமமாய் உட்கார்ந்திருக்கும் மகிமையைப் பெற்றன.

மேலும் கோதாவரி நதிக்கரையில் வாசம்பண்ணிக்கொண்டிருந்த துராசாரனென்னு மோர் பிராமணன் மகாபாதகர்களின் சிநேகத்தைக் கைக்கொண்டு துர்க்கிர்த்தியஞ் செய்துகொண்டிருந்தான். அப்படியிருக்குங்கால் அவனையோர் வேதாளம் பிடித்துக்கொண்டு வனம் வனாந்திரங்களெல்லாஞ் சுற்றி யலையச்செய்து ஓர் நாள் தனுக்கோடியிலிந்தத் துராசாரனை அமுக்கி வேதாளம் தான் முன்ஜென்மத்தில் பரத்துவாசர் புத்திரன் வேதநிதியாயிருக்குங்கால் பிதுர்தேவதைகளுக்குரிய மாளயசிரார்த்த முதலானவை செய்யாத தோஷத்தினல் சபிக்கப்பெற்ற இந்த வேதாளரூபத்தை விட்டு விஷ்ணுலோகமடைந்தான். புனகம், துராசனன், தீர்த்தத்தினின்றும் வெளியேறி தான் வசித்துக்கொண்டிருந்த கோதா

வரிக்கரை யில்லாததை நோக்கி, இது வென்னவதிசயம் நாம் எங்கிருந்தோம் இங்கு வரவேண்டியகாரண மென்னவென்று பலவிதமாயோசித்துச் சிறிதுதூரஞ் சென்றபோது அவ்விடத்தில்தபசுபுரிந்துகொண்டிருந்த தத்திரேய முனிவரிடஞ்சென்று வணங்கி இது தனுக்கோடியென்றும் தன்னைப் பிடித்திருந்த வேதாளத்தின் வரலாற்றையும் சொல்ல அறிந்துகொண்டு தன் யதாஸ்தானமடைந்து பிதிர்தேவதைகளுக்குரிய கிரித்தியங்களைச் சரிவரநடத்தி வாழ்ந்திருந்து இறுதியில் மோக்கவீடெய்தினன். இந்தத் தீர்த்தத்தில் நீராடினவர்கள் கங்கை, யமுனை, சரச்சுவதி, நருமதை, காவேரி, குமரி, கோதாவரி, சிந்து, தாமிரபருணி, துங்கபத்திரி, கிருட்டிணி என்னுமிந்தப் பதினொருதீர்த்தங்களி லாடிய பலனை யடைவார்கள். இதில் எவையெவைகளை நினைத்து ஸ்நாநம் பண்ணுகிறார்களோ அவைகளெல்லாஞ் சித்திக்கும். பெற்றோர்களிற் சிறந்த திதிகளில் சிரார்த்தஞ் செய்யாவிடினும், மாளயமாவது செய்யவேண்டும். அம்மாளயமும் புரட்டாசிமுதல் கார்த்திகைமாதத்திற்குள் புரியவேண்டும். மாளயசிரார்த்தத்தில் பிதாவழிக்காக மூன்று பிராமணர்களுக்கும், விசுவதேவர்களுக்காக இரண்டு பிராமணர்களுக்கும், விஷ்ணுவுக்காத ஒரு பிராமணனுக்கும் ஆக ஒன்பது பிராமணர்களுக்கும் திருப்தி செய்யவேண்டும். அப்படிச் செய்ய சக்தியில்லாவிடின், பிதாவழிக்காக ஒன்றும், மாதாவழிக்காக ஒன்றும் விசுவதேவர்களுக்காக ஒன்றும் விஷ்ணுவுக்காக ஒன்றும் ஆக நான்கு பிராமணர்களுக்குமாத்திரம் திருப்திசெய்தாலே போறும் இந்த மாளயசிரார்த்தம்புரியத் தன்னிடம் பொருளில்லாவிடில் பிராணரிடத்திலாவது க்ஷத்திரியரிடத்திலாவது வணிகரிடத்திலாவது மேலாங்குடியிற்பிறந்த சூத்திரர்களிடத்திலாவது யாசகஞ்செய்து நடத்தலாம். அப்படியும் முடியாவிடின் பசுவின்வாயிற் புல் லிடலாம். அப்படியும் முடியாவிடின் ஒரடர்ந்த காட்டிற்சென்று, ஹே! பிதிர்களே, ஹே! நான் மாளயசிராத்தஞ்செய்யப் பொருளிலேன் பொருளிலேன் என்று வயிற்றிலறைந்துகொண்டு அரற்றலாம். மஹாளயஞ்செய்த பலத்தினாலே அரிச்சந்திரமஹாராஜன் கார்த்தவீரியார்ச்சுனன் ஸ்ரீராமமூர்த்தி, தருமபுத்திர மஹாராஜன் வசிஸ்டர் அத்திரி, பிருகு, குத்ஸர், கௌதமர், ஆங்கிரஸ், காசியபர், பரத்துவாசர், விசுவாமித்திரர், பாராசரர், மிருகண்டு, முதலானோர்களும், இன்னு மனேகரிஷி சிரேட்டர்களும், சந்திரமதி, லோகிதாசனு

கிய தன்மனைவி, குழந்தையையும், ஆதிபத்தியத்தையும், இராவணன் கொண்டுசென்ற சீதையையும் 'கௌரவர்களை வென்று பட்டாபிஷேகத்தையும், சீவன்முக்தியையும், முறையே யடைந்திருக்கிறார்கள். இதற்குச் சமானமான தீர்த்தம் எங்கணுங் கிடையாது இதுவரை சேதுவிற்பிரதானமான இருபத்துநான்கு தீர்த்தங்களின் பெருமையைச் சொல்லிவிட்டேன். இனிமேலாகத் தேவீபட்டணத்துக்கு மேற்றிசையில் திருப்புல்லாரணியமென்ன ஒரு க்ஷேத்திரமுளது. அந்தச்சேத்திரத்திலுள்ள, க்ஷீரகுண்டத்தின் பெருமையையும், இன்னுமுண்டான இதரதீர்த்தங்களின் பெருமையையும் உங்களுக்குச் சொல்லுகிறேன் கவனமாய்க் கேட்பீர்களென்று சூதபுராணீகர் சொல்லத் துடங்கினர்.

இருபத்துநான்காவது அர்த்தியாயம் முற்றிற்று.

இருபத்தைந்தாவது அத்தியாயம்.

பாலோடை என்ற க்ஷீரகுண்டம்.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

தண்டுளப மாேனநோக்கி முத்கலா முனியாகஞ் சமைக்க மாலும்
வண்டறைபூங் குழற்றிருவோ டணுகியவிப் பாகமுண மறைசேர் மெய்யன்
கண்டடிவீழ்ந் தியான்பயயா கம்புரிய வெண்ணியெனக் கழற வன்பு
கொண்டனந்த சுரபியினு லளித்தபா லோடையணி கூறுவோமால்.

முத்திக்குவித்தாகிய ஸ்ரீராமமூர்த்தியானவர், சேது கட்ட ஆரம்பித்துத் தருப்பசயனத்திலமர்ந்த இடமேஇப்பொழுது திருப்புல்லணையென விளங்கிக் கொண்டிருக்கிறது. அவ்விடத்திலிருப்பது இந்த க்ஷீரகுண்டமென்னுந் தீர்த்தம், முற்காலத்தில் தவத்தினிற்சிறந்த முத்கலமா முனியென்பவர். தண்டுளவணிந்த தாமோதரனை நோக்கித்தபசு செய்ய, விஷ்ணு இலக்குமி சமேதராய்ப் பிரசன்னமாகி, ஹே ! முனியே! உமக்கு வேண்டிய வரங்களைக்கேளுமென்ன, முனி பணிந்து, மாதவ! நான் ஒரு யாகஞ்செய்ய மனங்கொண்டேன். அந்தயாகத்தில் பாலைக்கொண்டு காலைமாலையில் நின்மயமாகிய அக்கினியில் ஹோமம்பண்ண விருப்புற்றேனென்றான். உடனே முகுந்தன் மனமகிழ்ந்து, விசுவகர்மாவாலோர் வாவிசெய்வித்து, அவ்வாவி நிரம்பக்காலைமாலை, இரண்டு

வேளைகளிலும், காமதேனுவை யழைத்துப்பால் சுரக்கரியமஞ் செய்து அந்தர்த்தான மாயினர். பின்னந்த முத்கலமா முனி அநேக ஆயிரவருட காலம் இவ்வாவியின் பாலமொண்டு அக்கினியில் ஹோமம் பண்ணி விஷ்ணுபதத்தை யடைந்தார். கிருதயுகத்தில் பிர்மாவின் புத்திரிகளான, விந்தை கத்துரு என்னுமிரண்டு பெண்களைக் காசிபமுனிவர் விவாகஞ் செய்து, விந்தையின் வயிற்றில் கருடனையும், கத்துருவயற்றில் அனந்தன், வாசுகி முதலான பாம்புக் கூட்டங்களையுந் தந்து வாழ்ந்துகொண்டிருந்தார். அக்கால், தேவேந்திரனுடைய உச்சைச்சிரவஸ் என்ற வெள்ளைக்குதிரைவர, விந்தை, கத்துருவென்றுஞ்சகோதரிகளிருவர்களும்கண்டு, கத்துரு அக்குதிரையின்வால் கறுப்பென்றும், விந்தை வெளுப்பென்றும் ஒருவருக்கொருவர் சபதம்போட்டுக்கொண்டு தோற்றவர், கெலித்தவருக்கு அடிமையாகிவிடுகிறதென்றும் தீர்மானித்துக்கொண்டார்கள். பின் கத்துருவென்பவள் தன்பிள்ளைகளாகிய பாம்புகளை யழைத்து எப்படியாவது என் சபதம் நிறைவேறும்படி அக்குதிரையின் வாலிலொட்டிக்கொண்டு கறுப்பாகக் காட்டிவிடுங்களென்றுசொல்ல பாம்புக ளதற்குடன்படாததுகண்டு நீங்கள்ஜனமேஜயனுடைய சர்ப்பயாகத்திலிறக்கக்கடவீர்களென்று சபித்தனள். உடனே அப்பாம்புகளில் கார்க்கோடகன்அஞ்சித் தன்றாயின்காலில்வீழ்ந்து நானப்படியே செய்கிறேனென்றுசொல்லிப் போய்உச்சைச் சிரவஸ்என்ற வெள்ளைக்குதிரையின்வாலில் ஒட்டிக்கொண்டது. அதன்மேல், விந்தையும், கத்துருவும்போய்ப்பார்க்கக் கறுப்பாயிருக்கக்கண்டு கத்துரு, விந்தையைத் தன்னடிமையாக்கிக்கொண்டாள். அனந்தரம், கத்துருவென்பவள் விந்தையைப்பார்த்து அடி சேடியாகிய விந்தாய் நான் தேவலோகம் போகவேண்டியதிருப்பதினலே என்னை நீயும், என் பிள்ளைகளாகிய பாம்புகளை உன் பிள்ளையாகியகருடனுந் தூக்கிக்கொண்டு செல்லுங்களென்றுசொல்லினள். அப்படியே கத்துருவும், கருடனும் தேவலோகத்திற் கிவர்களைத்தூக்கிச்சென்று மீண்டுவந்து, கருடன் தன்றாய்விந்தையினலடிமைத்தொழிலான விபரங்களெல்லாங் கேள்வியுற்று, அவள்சொற்படி பாம்புகளிடஞ்சென்று, ஹே! சகோதரர்களே, என்றாயார்அடிமைத்தொழில் நிவர்த்திசெய்துகொள்ள உங்களுக்கென்னவேண்டுமென்ன, பாம்புகள் கருடனைப்பார்த்து, நீஎங்களுக்குச்சீக்கிரம் அமுதங்கொண்டுவந்து

கொடுப்பையாகில் உன்றுயின்அடிமைத்தொழில் நீங்குமென்று சொல்லின. அதைக்கேட்டு கருடன் அதிவேகமாகத் தாயிடம்வந்து சங்கதிகளைச்சொல்லி அன்னவளீந்தவரங்களைப்பெற்றுத் தேவநாட்டிற்சென்று ஆயுதபாணிகளாய்வந்த தேவர்களைப்புறங்காட்டியோடக்கடும்போர்புரிந்து அப்பால் அமுதத்துக்குக் காவலாயிருந்த பௌமனனைத் தன்மூக்கினுல் கடித்துக்கொன்றுவிட்டு, விஷ்ணுவினிடமிருந்து சாகாவரம்பெற்று, தான்விஷ்ணுவுக்கு வாகனமாகவுங் கொடியாகவுமிருக்க வொப்புக்கொண்டு அமுதத்தைத் தசும்போடு தூக்கிவரும்வழியில், இந்திரன்வச்சிராயுதத்தால், தன்றலைமேற்புடைக்க, இந்திரனையும் அவன் வச்சிராயுதத்தையு மிகழ்ந்து, தன்னழகுள்ளசிறகிலொன்று கொடுத்துச் சுபர்ணனென்னும் பேரடைந்து பாம்புகளிடம் அமுதத்தைக்கொண்டுவந்து அவைகள்சொன்னபடி தர்ப்பைபரப்பியதில்வைத்துவிட்டுத் தன்றுயினடிமையைநீக்கிக்கொண்டு கத்துருவைப்பார்த்து, நீயென்றுயை வஞ்சகமாய் அடிமைத்தொழிலுக் குட்படுத்தியதால், என்னுடைய பிதாவும், நின்னுடையநாதருமான காசிபமுனிவரின் பணிவிடைக்கு கந்தவளில்லையென நிராகரிக்கப்படக்கடவையென்று சபித்துச்சென்றுன். பின்னிந்தப்பாம்புகள் அமுதங்கிடைத்ததைப்பற்றிச் சந்தோஷித்து ஸ்நாநம்பண்ணிவந்து தான்புசிக்கவேண்டுமென்ன நினைத்துக்குளத்திற்கேகின. அப்பொழுது சமையம்பார்த்துக்கொண்டிருந்த இந்திரன் இதுதான்சமையமென்று, குடத்தோடு அமுதத்தைத்தூக்கிச்சென்றுன். பின் ஸ்நாநம்பண்ணப்போயிருந்த பாம்புகள்வந்துபார்த்து அமுதத்தைக் காணுதுவருந்தி, கீழே அக்குடத்தை வைக்கப்பட்டிருந்ததர்ப்பையை ஆவலோடு நக்க அவைகளின் நாக்கிரண்டு பிளவாய்ப் பிளந்து போயிற்று. அன்றுமுதல் பாம்புகள் பிளவு நாக்குடையதாயின, பின், கருடன் வரத்தையேற்ற கத்துருதன் பர்த்தாகாசிப முனிவரிடஞ் செல்ல முனிவர் எதிரில் நின்றகத்துருவைப் பார்த்து முனிந்து அடிவஞ்சகி என் கண் முன்நில்லாதே நில்லாதே என்று சொல்லி நிராகரிக்க கத்துரு தன் பர்த்தாவின் காலில் வீழ்ந்து என்னை யெப்படியாகி லுங்காப்பாற்றி ஆட்கொள்ளு மென்றிரைஞ்ச முனிவர் கிருபை கூர்ந்து சாபவிமோசன மாயுரைத்த இந்த க்ஷீரகுண்டஸ்நாநத்தைச்செய்து விமோசனம் பெற்றுத் தன் நாயகனுக்குப் பணிவிடை புரிந்து வாழ்ந்து கொண்டிருந்தாள் இதில் நீராடு

வோர் சகல நதிகளில் நீராடிய பலனையும் சகல யாகங்களின் பல னையுந் தருமென்பதிற் சந்தேகமேயில்லை.

இருபத்தைந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

இருபத்தாறவது அத்தியாயம்.

கபிதீர்த்தம்.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

பலமிகுவா னரகணங்க டடமியற்றி யதிற்குடைந்து பரிவி னோடு
மலகில்வர மீந்ததுவும் நிறைவின்றிச் சரியமா லடியிற் றாழ்ந்து
மலைமகள்சோ தரமுகுந்தா வடியேங்கள் புரிந்தசுனை மறிவிலாத (மால்.
நிலைவரவும் பெறவருள்வா யெனப்புரிந்த புனற்பெருமை நிகழ்த்து வோ

இது கந்தமாதனத்தின் கண்ணுள்ளது இராவண சம்ஹாரமுடி த்து ஸ்ரீராமபிரானோடு திரும்பி வந்த வானரப் படைகள் ஓர் தட முண்டு பண்ணி அதில் நீராடி வேண்டிய வரங்களளித்தது மல்லா மல் காளமேக வண்ணன் அடியிற்றாழ்ந்து தாங்கள் நீராடிய இத் தீர்த்தத்திற்கு வரங்களளிக்க வேண்டுமென்றுபிரார்த்திக்க அப்ப டியே திருமால் வேண்டிய வரங்களை யளித்தார் இத்தீர்த்தத்தில் அயன், இந்திரன், ஆதித்தன், சந்திரன் முதலான தேவர்களும் கௌதமர், நாரதர், அகத்தியர், முதலான முனிவர்களும் நீராடி வானரங்களால் நீராடியதுபற்றி இதற்குக் கபிதீர்த்தமெனப் பெ யர்தந்து தம்தம்பதியடைந்தார் அன்றுதொட்டிதற்குக் கபிதீர்த்த மெனப்பெயர் வழங்கிக்கொண்டுவருகிறது. பூர்வகாலத்தில் சரயூ நதிக்கரையிலுள்ள உமாபதியென்னுமோர்பட்டணத்தில் நூறுபுத் திரர்களோடு அரசுசெய்துகொண்டிருந்த சக்கிரவர்த்தியாகிய விசு வாமித்திரர் காமதேனு விஷயமாய் வசிஷ்டரோடு பெரும்போர் புரிந்ததினுற்றன் நூறு பிள்ளைகளை யிழந்து பராரியாய் தவமே சிறந்தது ஆகையால் நாமும் தபசுபுரிந்து பிரமரிஷியாக வேண்டு மென்று நினைந்து இமயமலைச் சாரலில் சென்று கௌசிக நதிதீர த்தில் பஞ்சாக்கினி மத்தியில் கோபத்தை யடக்கி நின்று தேவவ ருஷமாயிரமாண்டு தபசு செய்து கொண்டிருந்தார். அக்காலையில் தேவேந்திரன் முதலினோர் பார்த்து இத்தவத்தை யழிக்க வேண்டு மென்று நினைத்து அதிரூபலா வண்ணியமுள்ள ஊர்வசியையும்

துணையாக மன்மதனையுமனுப்பி ஊர்வசிவந்து எதிரில்கட்டிக்கொண்டு நிற்பதை முனிவன்கண்டு இது இந்திரன் மாயையென்றுஉடனே யவ்வூர்வசியைப் பத்து லட்சம் வருடம் கல்லாய்க் கிடக்கவும் அதன்மேல் ஒரு பிராமணனால் விமோசனம் பெறவும் சபித்தனர். அப்படியே ஊர்வசி கல்லுருவாகி அவர் ஆச்சிரமத்தின் முன் கிடக்குங்கால் அகஸ்தியர் சிஷ்யனான சுவேதன்மலமூத்திராதிகளை இறைத்துத் தன் தபசைக்கெடுக்க எண்ணங்கொண்டிருந்த அங்காரகையென்னும் ராட்சசியைக் கொன்று வரும்படி கல்லாய்க் கிடந்த ஊர்வசியை யெடுத்து அபிமந்திரித்து விட அங்காரகை பயந்து இந்தக் கபிதீர்த்தத்தில் ஒளித்துக்கொள்ள ஊர்வசியாகிய அக்கல் பின்றொடர்ந்து சென்று அவ்விராட்சசியின் றலையில்பொத்தென்று விழுந்து தீர்த்தம் தன்மேற்பட்ட அளவிலே கல்லுருவம் நீங்கிப் பெண்ணுருவடைந்து அரம்பாஸ்திரீகளோடு தன்பதியைச் சேர்ந்தனள். இந்தக் கபிதீர்த்தமிருக்கு மிடத்தை இப்போது பாம்பனென்று சொல்லுகிறார்கள். அதன் கரையில் பாலசுப்பிரமணிய க்ஷேத்திரமும் பைரவக்ஷேத்திரமு மிருக்கின்றன. சேதுயாத்திரை செய்பவர்கள் அங்கு சென்று தரிசிக்காதுவரக்கூடாது இத்தீர்த்தத்தில் ஸ்நாநம்பண்ணினவர்கள் கங்கை, யமுனை, சரச்சுவதி முதலான தீர்த்தங்களிற்குடையும் பலனை யடைவார்களென்பதிற் சந்தகமேயில்லை.

இருபத்தாராவது அத்தியாயம் முற்றிற்று.

இருபத்தேழாவது அத்தியாயம்.

சரசுவதி காயத்திரி.

எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

தடநெடுங்கட் கலைமகளை விதித்துப் போதன் றழுவிடநோக் குஞ்சமையந்தருக்கிச் சிந்தை, யுடன்படா தவளுழையா யோட வன்னோனுறு கலையாய்ப் பின்றொடர வும்ப ரேற்றும், விடையுடையான் சிலைகுனித்துக் கலையைக் கொல்ல மெலிசரச்சு வதிகாயத் திரியும் வேரித், தொடையணிந்த பதியடையக் குடைந்த வன்னோர் தூய்நாமப் புட்கரங்க டொகுத்துச் சொல்வாம்.

இந்தத் தீர்த்தம் கந்தமாதனத்தின் கண்ணுள்ளது ஆதிகாலத்தில் நான்முகக் கடவுளானவன் தான் சிருட்டித்த வாக்கின்தைய

லாகிய புத்திரி அதிரூபவதியா யிருக்கக் கண்டு மோகிக்க, அதைக் கண்ட அப்பெண் சம்மதப்படாதவளாகி மானுருவெடுத்தோட, பிரமனுங் கலைமானுருக்கொண்டு பின்றொடர்ந்தான். புத்திரியைத் தழுவப் பின்றொடர்ந்த அநீதத்தைச் சந்திர சடாதரமூர்த்தியான பரமேச்சுரன் கண்டு கோபமீறி பினுகமென்னும் வில்லிலம்புகளைத் தொடுத்து எய்ய அப்பிரமனுகிய கலைமடிந்தது. உடனே அக்யின் சரீரத்தினின்று ஓர் ஜோதியுண்டாகி ஆகாயத்தில்மிருகசீரிட நக்ஷத்திரமாகி விட்டது, இந்த மாதிரியாகத் தன் கணவனுகிய பிரமனிறந்ததைக் கேட்டு சுரசுவதி, காயத்திரி என்னு மனைவியரிருவர்களும் துக்க சாகரத்திலாழ்ந்து கந்தமாதனகிரிக்குச் சென்று தங்கள்பேரா லிரண்டு தீர்த்தங்களை யுண்டு பண்ணி அதில் நாடோறும் நீராடி ஈசனை நோக்கி நெடுங்காலங் கடுந்தவமிழைக்க பார்வதி சமேதராய் ஈசன் பிரசன்னமாகித் தபசு செய்து கொண்டிருந்த சரசுவதி காயத்திரி என்னும் பெண்களைப் பார்த்து, ஹே! பெண்காள் நீவிர் செய்த தபசால் நாம் மிகுந்த சந்தோடங்கொண்டோம். உமக்கு வேண்டும்வரங்களைக் கேளுமென்றனன். அதைக்கேட்ட பெண்களிருவரும் அநேக தோத்திரங்களாற்றுதித்து, பிரபூ எங்கள்நாயகனுக்கு யிரையும், நாங்கள் நீராடின இத்தீர்த்தங்களுக்கு வரங்களையுந் தந்தருளல் வேண்டுமென்றுபிரார்த்திக்க, அப்படியே யீசனளித்து அந்தர்த்தானமாயினர். அன்றுதொட்டு சரஸ்வதி. காயத்திரியென்னும் நாமங்களைப் பெற்றுத்தனித்தனியேவிளங்கிக் கொண்டிருக்கின்றன.

பூர்வத்தில் அபிமன்னுவின் புத்திரனுன பரீக்ஷித்து மஹாராஜன் வேட்டமாடச் சென்று ஓர்மானைத் துரத்திக்கொண்டு வெகுதூரம் போய்க்காணுது அவ்விடத்தில் அதிகமௌனத்திலிருந்த சமீகமுனிவரை நோக்கி மான்போன வழியைக் கேட்டான் அவர்பேசா திருக்கக்கண்டு, சினந்து அங்கு இறந்துகிடந்த பாம்பையெடுத்தவா கழுத்தைச்சுற்றிப் போட்டுவிட்டுத் தன்பதியையடைந்தான். பின் அம்முனிவரின் புத்திரரான சிருங்கிமுனிவர் பார்த்து, இக்கொடிய செய்கையைச் செய்தவன் ஏழுநாளில் தட்சகனுலிறந்து விடக்கடவானென்று சபிக்க, சமீகமுனிவர் தன் மகனைக்கோபித்து கௌரமுகனை யனுப்பி பரீட்சித்து மஹாராஜனுக்கு, இச்சாபத்தை அறிக்கைசெய்து வரும்படி யனுப்ப, அப்படியே கௌரமுகன் சொல்லித் திரும்பினுன், அரசன்கேட்டுத்

திடுக்கிட்டு சமுத்திரத்தினடுவிலோர் பெரியகம்பம் நட்டுஅதன் பேரில் விசாலமான ஓர் மண்டபமியற்றி மந்திரவாதிகளையும் தபோதனர்களையுஞ் சுற்றிலுமிருக்கச் செய்து தானுப்பணமர்ந்து ஸ்ரீமந் நாராயணனைச் சிந்தித்துக்கொண்டிருந்தான். தக்ஷகன் முனிபுதல்வன் சாபம் பொய்த்துப்போகாதபடி வேதியனாகவரும் போது பரீட்சித்தைப் பாம்புதீண்டப் போகிறதாகக் கேள்விப் பட்டு அவ்விஷத்தைத்தீர்த்து வேண்டியபொருள் பெறலாமென்று எண்ணங்கொண்டுவந்த காசிபரென்னும் பிராமணனைக்கண்டு அவ ரோடு சேர்ந்து ஓர் பட்டுப்போன ஆலவிருட்சத்தா லன்னவன் வல்லமையை யறிந்து விலையுயர்ந்த இரத்தினங்களைக் கொடுத்து அரசனிடஞ் செல்லாது மீண்டு காசிபர் தன் பதிக்கேகும்படிசெ ய்து இழந்தைப்பழத்தின்வழியாய்ப் புழு உருவத்தோடு சென்று ராஜனைச் சுற்றிக்கொள்ள அங்கிருந்த யாவர்களும் பயந்தோ டிவிட்டார்கள் அரசன் மண்டபத்தோடு சாம்பராய் எரிந்துபோ னான். பின் தக்ஷகனிடம் பொருள்வாங்கி மீண்டுசென்ற காசிபர், யாவர்களாலும் இகழப்பட்டுக் கடைசியில் சாகல்யமுனிவரிடஞ் சென்று முறையிட அன்னவரானுரைத்த இந்தத் தீர்த்தத்தில் மு ழுகி பாபவிமோசனம்பெற்றுத் தன்பதியடைந்து யாவர்களாலும் புகழப்பட்டு வாழ்ந்துகொண்டிருந்தார். இராஜதுரோகி, பிதிர்த் துரோகி, குருத்துரோகிமுதலான துரோகிகளாயிருந்தாலும் இந் தத் தீர்த்தத்தில் ஓர்தினம் நீராடினவளவிலேயே சகல பாபத்தி னின்றும் விலகி மோக்ஷசாம்பிராஜ்ஜியத்தை யடைவார்கள்.

இருபத்தேழாவது அத்தியாயம் முற்றிற்று.

இருபத்தெட்டாவது அத்தியாயம்.

இரணவிமோசனம்.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

ஆன்றமறை யாராய்ச்சி யிலதிருடி கடனுகு மருமை வாய்ந்த
சான்றயா காதிகிருத் தியமிலது தேவகடன் றரணி தன்னில்
வான்றவழு மகப்பேறி லாததுவே பிதிர்க்கடனும் வழுத்துமிந்த [ம்.
மூன்றுடனேனையகடனைத்தீர்க்குமிரண தீர்த்தமதின்முறையைச்சொல்வா

இது சேதுமத்தியிலுள்ளது. வேதமுதலானவைகளை ஓதாதவர்கள் ரிஷிகளுக்குக் கடனாளியாயும் யக்ஞாதிகளைப் புரியாதவர் தேவர்களுக்குக் கடனாளியாயும் புத்திரனைப்பெறாதவர் பிதுர்க்களுக்குக் கடனாளியாயுமாகிறார்கள். இவ்வகையான மூவகைக் கடனாளிகளும் இத்தீர்த்தத்தில் நீராடுவார்களாகில் அந்த இரணங்களினின்றும் விமோசனமடைவார்கள். ஆனதுபற்றியே இது இரணவிமோசனமெனப் பெயர்பெற்றது.

இருபத்தெட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

இருபத்தோன்பதாவது அத்தியாயம்.

பாண்டவ தீர்த்தம்.

எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

குந்திமைந்த ரைவர்களும் ராஜசூயங் குறிக்கு முன
மிலக்குமிநீர் குடைய வேண்டி
வந்திடுங்காற் கந்தவரைச் சார்பின் மேன்மை
வாய்ந்தமடு வியற்றியதின் மருவி யாடிச்
சந்ததமு மிதிற்குடைந்தோ ரெவர்க்கும் ஞான
சம்பத்தோ டேனையவுந் தருமி தென்னச்
சுந்தரஞ்சேர் வரமளிக்கப் பெற்ற னோர்பேர்
துலக்கியபாண் டவதீர்த்தஞ் சொல்லு வோமால்.

பாண்டுமைந்தர்களான தர்மன், வீமன், நகுலன், சகாதேவன் என்னும் ஐவர்களும், தங்கள் பிதாவாகிய பாண்டுமஹாராஜன் இந்திரயோகத்தை யனுபவிக்கும்படியாக,நாரதரிடம்சொல்லி யனுப்பிய ராஜசூய யாகஞ்செய்வதற்கு முன் கிருஷ்ணபகவான் உத்திரவுப்படி சகல ஐசுவரியங்களையுமடைய இலக்குமிதீர்த்தத்திற்கு வரும்வழியில், கந்தமாதனகிரிச்சாரலில், ஒரு தடாகமுண்டு பண்ணி இதில் நீராடினவரெவர்களானாலும், கல்வியுடைமை,பொருளுடைமைகளையும் அடைவார்களென வரமளித்துச் சென்றனர். அன்றுதொட்டிதற்குப் பாண்டவதீர்த்தமென அவர்கள் பெயரே விளங்கிக்கொண்டு வருகிறது. இத்தீர்த்தத்தில் பதினாயிரங்கோடி கோடி உத்தமதீர்த்தங்களும் வாசம்பண்ணிக்கொண்டிருக்கின்றன அன்றியும் ஆதித்தியர்களும், வசுக்களும், ருத்திரர்களும் மருத்

துக்களும், சாத்தியர்களும் சதாவாசம் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். இந்தத் தீர்த்தக்கரையில் ஒரு பிராமணனுக்கு அன்னமிடில் லட்சப்பிராமணர் போஜனஞ்செய்த தொப்பாகும் சந்தேகமேயில்லை.

இருபத்தொன்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

முப்பதாவது அத்தியாயம்.

தேவதீர்த்தம்.

எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்

மண்டலத்திற் புகழ்சிறந்தங் குலவு கந்த மாதனச்சா ரலிற்புனித வாங்க ளான, விண்டலத்தோ ரளிமிகும ஹேச யாகம் விழைத்திடவோர் தடமியற்றி விழைவி னோடு, பண்டுமறை நூல்வழியே யாடித் தத்தம் பகரவொணுத் தவமகிமைப் பலத்தா லன்பு, கொண்டளித்த பலவரங்க ளேற்ற தேவ கோப்பெருமை யுலகரியக் கூறு வோமால்.

இந்திராதி தேவகணங்கள் அசுரர்களை வெல்லும்பொருட்டு மஹேசுரயாகஞ் செய்யும்போது, நீராடுவதற்காக தேவர்களாலுண்டாக்கப்பட்டது பற்றி இத்தீர்த்தத்திற்கு தேவதீர்த்தமெனப் பெயராயிற்று. இதில் நீராடினவர்கள் சகல தீர்த்தங்களின் பலனையும், சகல யாகங்களின் பலனையும் காயத்திரி யாதிமஹா மந்திர ஜபபலனையும் அடைவார்களையமேயில்லை.

முப்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

முப்பத்தோராவது அத்தியாயம்.

சுக்ரீவ, நள, நீல, பசுக்கண்ணன் தீர்த்தங்கள்.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

மிக்கபலங் கொண்டிலங்கை யழித்தவா னரப்படையின் வேந்தன் றானை
முக்கியசே னதிபதி நளனீலன் பசுக்கண்ணன் மூழ்கிப் பின்னர்
தக்கவா மீந்திடவேற் றன்னோர்கள் பேராலே தழைக்கு மேலாஞ்
சுக்ரீவ நளனீல பசுக்கண்ணன் றீர்த்தமதின் றூய்மை சொல்வாய்.

அதிக பராக்கிரமத்தோடு இலங்கையை யழித்தவானரசைனியங்களுக்கு வேந்தனாகிய சுக்ரீவனாலேற்படுத்தப்பட்டது சுக்ரீவ

தீர்த்தமென்றும், சேனாதிபதியாகிய நளனாலேற்படுத்தப்பட்டது நளதீர்த்தமென்றும், நீலனாலேற்படுத்தப்பட்டது நீலதீர்த்தமென்றும், பசுக்கண்ணனாலேற்படுத்தப்பட்டது பசுக்கண்ணத்தீர்த்தமென்றும், கந்தமாதனகிரிச்சார்பில் தனித்தனியே விளங்கிக்கொண்டிருக்கின்றன. இவைகளின் ஸ்நாநமுஞ் சிலாக்கியமே.

முப்பத்தோராவது அத்தியாயம் முற்றிற்று.

முப்பத்திரண்டாவது அத்தியாயம்.

அங்கத, குமுத, நர, கய, பனசு, சரப, கவைய தீர்த்தங்கள்.

எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

அங்கதன் குமுத னரன்கயன் பனச னழகுறு சரபன்மா கவையன்
தங்கிநீ ராடி யதற்குடைத் தவர்க்குச் சகலநன் னிதிகளு மேலாம்
மங்கள கரமும் புரிகுக வெனப்பல் வரங்களு மளித்ததை யேற்றுத் [வாம்]
துங்கமே மிகுமன் னவர்களின் பெயராற் றுலங்குபுட் கரங்கணேர் சொலு

வாலிகுமாரனான அங்கதன், குமுதன், நரன், கயன், பனசன், சரபன், கவையனிவர்கள் தனித்தனியே ஒவ்வொரு மடுவியற்றி நீராடிவேண்டிய வரங்களளித்தேகினர் அன்று தொட்டு அன்னவர்களின் பெயரால் அங்கத தீர்த்தமென்றும், குமுததீர்த்தமென்றும், நரதீர்த்த மென்றும், கயதீர்த்தமென்றும், பனசதீர்த்தமென்றும், சரபதீர்த்தமென்றும், கவையதீர்த்தமென்றும் விளங்கிக்கொண்டிருக்கின்றன. இவைகளில் நீராடினவர்கள் மஹாபாதகங்களினின்றும் விடுபடுகிறார்கள். அன்றியும், கல்வியில் நானே பெரியவனென அகந்தை கொண்டு, வித்துவான்களையும், ஞானிகளையும், பிராமணர்களையும் தூஷித்து யாவர்களாலு மிகழப்படுகிற கொடியர்களும் இதிலோர் பொழுது நீராடுவர்களாகில் மேற்கூறிய பாதகங்களினின்றும் விடுபட்டுப் புகழ்ச்சியை யடைவார்கள்.

முப்பத்திரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

முப்பத்துமூன்றாவது அத்தியாயம்.

விபீஷண தீர்த்தம்.

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

வல்லமைசே ரிலங்கைமன னிளவல்வீ டணனதிக மகிழ்வி னோடு [ற்
சொல்லருமோர் தடமியற்றிக் குடைந்தெருஞ்சேர்ந்தாங்கு தோய்வ ராணு
கல்வியொடு வளமிருபோ கமுஞ்சேர வரமளித்துக் கனதை யார்ந்த
மல்கலுறு தன்பெயரால் வழங்குவீ ணதீர்த்த மகிமை சொல்வாம்.

பராக்கிரமமிகுந்த இலங்கேசன் சோதரனான விபீஷணன் மனக்கு தூகுலத்தோடு ஓர் மடுவுண்டாக்கி நீராடி வேண்டியவரங்களையளித்தேகினன் அன்றுதொட்டு, விபீஷணதீர்த்த மென்று வழங்கிக் கொண்டிருக்கிறது. இதின் ஸ்நாநமும் மகிமையுடைத்தானதே.

முப்பத்துமூன்றுவது அத்தியாயம் முற்றிற்று.

முப்பத்துநான்காவது அத்தியாயம்.

விபீஷணன் மந்தரிகள் தீர்த்தம்.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

வந்துதிரு மாலடியிற் புகுந்தவீ டணன்சமுகம் வதியு முத்தி
மந்திரிகள் வீர கேதனன்வீர ஞரணியன் வயங்குஞ் சீர்த்தி
தந்திர்ஞ ரணனிவர்கள் குடைந்துபல வரமீயச் சார்ந்தே யன்னோ
விந்தைபெரும் பேரடைந்து விளங்குதீர்த் தங்களணி விளம்பு வோமால்.

திருமாலடியிற் சரணடைந்த விபீஷணனுடைய மகிமையும் சாத்மீக முந்தங்கிய சபையில் வீற்றிருக்கும் யோசனையிற் சிறந்தவமைச்சர்களான வீரகேதனன், வீரன், நாரணியன், நாரணனிவர்கள் தனித்தனியே ஒவ்வொரு தீர்த்தங்கள் பெயராலுண்டாக்கி நீரடினவர்களுக்குச் சர்வாபீஷ்டங்களும் பெருக வரமளித்தேகினர் இந்தத் தீர்த்தங்களின் ஸ்நாநமும் உத்தமமானதே.

முப்பத்து நான்காவது அத்தியாயம் முற்றிற்று.

முப்பத்தைந்தாவது அத்தியாம்.

நாகதீர்த்தம்.

எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

அறம்பொருள்வீ டன்பளிக்கப் பெருமை வாய்ந்தே அழகுபெறு மனை தர்க ளருளச் சேர்ந்த, மறங்குலவுங் கொடியபவம் நசிக்கச்சீத வாரியெனக் குணமதனில் வழங்கப்பாரிற், பிறங்கியவெம் மனந்தாதி யஷ்டநாகம் பீடு யரத் தடமியற்றிப் பெருநீராடித், திறங்குலவும் வாம்பெறுமந் நாகதீர்த்தச் செயலையெடுத் திவ்வுலகிற் செப்பு வோமால்.

காசிபர் குமாரர்களான வாசுகி, அனந்தன், தக்கன், சங்க பாலன், குளிகன், பதுமன், கார்க்கோடகன் என்னும் அஷ்டநா கங்கள் ஓர்தடமியற்றி அதிநீராடின அதுபற்றியதற்கு நாகதீர்த்த மெனப் பெயராயிற்று இதில் நீராடினவர்களுக்கு அறம்பொருள், வீடு இன்பம் இவைகளைப் பயக்கும் மணமில்லாதவர்கள் நல்ல ரூபலாவண்யமுள்ள ஸ்திரீயையும் மக்களில்லாதவர்கள் மக்களை யும் அடைவதோடு, தாங்கள் செய்தபவம் நீங்கி வாழ்வார்கள்.

முப்பத்தைந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

முப்பத்தாறவது அத்தியாயம்.

பிரமஹத்திவிமோசனம்.

எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

வரையரையன் மகளையிடங் கொண்டவீசன் வந்துதரிசனங்கொடுத்த மகிமை யாலே, விரைகமழ்பைந் துளவணிரா மனைவிட் டத்தி விலகியோ டிடவுலகம் வீயு மென்ன, நிரைமருவி ராமனுளங் கொண்டு வில்லால் நிலங் கிழித்து மடுவியற்றி நீங்கா துள்ள, பிரமஹத்தி தனைவீழ்த்தி வரங்க ளீந்து பெருமைமிகச் செய்புனற்சீர் பேசு வோமால்.

மலைமகளையிடப்பாகத்தில் வைத்தவரும் சம்ஹாரகர்த்தாவு மான சாக்ஷாத்பரமேசுரன் ரிஷபத்தின்மீதுவந்து ஸ்ரீராமபிரானு க்குத் தரிசனங்கொடுத்த மகிமையினாலே ஸ்ரீராமபிரானைப்பிடித்தி ருந்த பிரமஹத்திநீங்கி யோட்டமெடுத்தது. அதைக்கண்டு தசரத ராமன் ஆ! ஆ! இதைப்பார்க்கும் விஷயத்தால் உலகத்திலுள்ளவர் கள் அநீதமா யிறந்துவிடுவார்களென்று நினைத்துத் தன்கோதண்ட

த்தினுலோர் மடுவையுண்டாக்கி பிரமஹத்தியையதிற்றள்ளி அதன டுவில் பைரவரைக்காவலாயிருக்கும்படி பிரதிஷ்டைபண்ணி ஓர் தீர்த்தமுண்டாக்கியதினீராடி, பிரமஹத்திவிமோசனம் பெற்று வேண்டியவரங்களை யளித்தேகினர். இத்தீர்த்தம் இராமலிங்கத்தி ற்கு வடபாரிசத்திலிருக்கிறது. மஹாபுண்ணியதீர்த்தம் குஷ்ட ரோகமுதலான கொடியநோயை யுடையவர்களும், பைத்தியர்களு மிதிலோர்பொழுதாடில் க்ஷணத்தில்நீங்கும்.

முப்பத்தாருவது அத்தியாயம் முற்றிற்று.

முப்பத்தேழாவது அத்தியாயம்.

சேதுமூலம், நவபாஷாணம், சாவித்திரி.

எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

முன்னமுரைத்த நான்கு பத்து மூன்று மூன்று புனல்க ளுடன்
பன்னுஞ் சேது மூல நவ பாஷா ணஞ்சா வித்திரயோ
டுன்னு மைம்பா னிரண்டெனவே யுரைத்தா ரறிவிற் றேர்ந்தோர் மேற்
சொன்ன மூன்று தீர்த்த மதின் றூய்மை யெடுத்துத் தொகுத்திடுவாம்.

முன் முப்பத்தாறு அத்தியாயங்களில்சொன்ன நாற்பத்தொ ன்பதுதீர்த்தங்களோடு இந்தச்சேதுமூலம், நவபாஷாணம், சாவித் திரியென்னும் மூன்று தீர்த்தங்களைச்சேர்த்து ஐம்பத்திரண்டுதீர்த் தங்கள் வெளிப்படையாம். இவைகளன்றியும், கந்தமாதனத்தில், தேவர்களாலும், முனிவர்களாலும் சமைக்கப்பட்டுள்ளன பதினு யிரங்கோடி தீர்த்தங்களென்றும், சொல்லுகிறுர்கள். சேதுமூலம், நவபாஷாணம், சாவித்திரிஎன்னுமிந்தமூன்றுதீர்த்தங்களும் சேது யாத்திரை போனவர்களுக்கு முதலில் ஸ்நாநஞ்செய்யவேண்டிய வைகளே இவைகளுக்கு நிகரானதீர்த்தங்களெங்கணுங் கிடையா. என்று சூதபுராணிகர்சொல்ல, சௌனகாதியர்கள்கேட்டு ஹே! நாதா நீர் சகலதீர்த்தங்களின் விசேஷங்களைச் சொல்லிவிட்டீர். இனிமேலாக இராமநாதர்மகிமையையும் சேதுமாதவர் வரலாற் றையும், சேதுயாத்திரையின் முறையையும் இன்னெருதரஞ் சேது மகிமையையுங்கேட்க விருப்புற்றேமென்ன சூதர் தன்குருவாகிய வேதவியாசரைப்பணிந்து, முனிவர்காள்! இராமநாதரின் மகிமை யைப்பற்றி ஒர்கதை என்குருவால் கேள்வியுற்றிருக்கிறேன்.

அதையும் மற்றவைகளையுஞ் சொல்லுகிறேன் சவனமாய்க் கேளுங் களென்று சொல்லத்தொடங்கினர்.

முப்பத்தேழாவது அத்தியாயம் முற்றிற்று.

முப்பத்தெட்டாவது அத்தியாயம்.

இராமநாதர் மகிமை.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

தூயமதி குலத்துதித்து வழுதிநா டாண்டமனுச் சுருதி தேர்ந்த
நேயமிகு சங்கரபாண் டியன்வேட்ட மாடமுன்கா னேர்ந்த காலை
ஏயசா கலமுனிவன் மனைவியோ டிணைபிரியா திருத்த னோக்கிப்
பாயவரு புலியெனத்தன் சரத்தம்பி னுல்வீழ்த்திப் பதியைச் சேர்ந்தான்.

இதுவுமது.

சேர்ந்தபின ராங்குளமா தவர்வெறுக்க மனஞ்சிதைந்து தீயில் வீழப்
போந்தருணம சரீரீ சொலக்கேட்ட விறையணையிற் பொலிந்து நாளும்
ஆர்ந்திலங்குந் திருவிரா மேச்சுரத்தி லீரயன மார்ந்து தன்கை [வாம்
சார்ந்தநிதி யளித்தரனைப் பணிந்தத்தி தொலைத்தவொரு தகைமை சொல்

மகா சிறப்புற்றோங்கிய சந்திரகுலத்துதித்துப் பாண்டியநாட்டை மனுநீதியா யரசளித்த சங்கரபாண்டிய னென்னு மரசன், ஓர்நாள் ஆயுதபாணியாய் வேடர்களோடு இருளடர்ந்த கானகஞ் சென்று சிங்கம், புலி, கரடி, யானை, பன்றி, கலை, மான் முதலான மிருகங்களைக் கொன்று கடையில், தன் கண்முன்றோன்றி துள்ளி வேகமாயோடும் மானைத்துரத்திக் கொண்டு சைனியங் களை விட்டுப் பிரிந்து நெடுந்தூரமோடியும், மானகப்படாததது கண்டு வருந்திப் பின்றிருடருகையில் அவ்விடத்தில் புலியுரியைப் போர்த்துக் கொண்டு சாகலைமாமுனிவரும் அன்னவர் பத்தினியும் உட்கார்ந்திருக்கக் கண்டு புலியென நினைத்துத் தன்கரத்திலுனேற்றி யிருந்த அம்புகளை விடுத்துக் கொன்றான் பின் சாகலைமா முனிவரின் புத்திரன் சாங்கலன் வந்து, தன்றாயுந் தந்தையுமிறந்து கிடப்பதைக் கண்டு ஆறாக்கவலை கொண்டு பலவிதமான அன்னை உபசாரங்களையும் தந்தை சாத்திரங்களைப் போதிக்குந் திறங்களையுஞ் சொல்லி யழுதுகொண்டு நின்றான். அவ்வழுகுரலைக் கேட்டுச் சங்கரபாண்டியன் அவடத்திற்கோடி வந்து, ரிஷிபுத்திரன் கத்திக்

கொண்டு நிற்பதையும், அருகில் இருவர் கொலையுண்டு கிடப்பதையுங் கண்டு விதிர்த்து நின்றான். அப்பொழுதாங்குள்ள தவசிரேட்டர்களும் அழுகுரலைக் கேட்டோடி வந்து ராஜன் வில்லையுடைய கரத்தனாக நிற்பதையும் ரிஷிபுத்திரன் அழுதுகொண்டு நிற்பதையும் இருவர்கள் கீழே யிறந்து கிடப்பதையும் பார்த்து, அழுதுகொண்டிருக்கும் பையனுக்குவேண்டிய நீதிகளைப் புகட்டிச் சிறிது மனமாறும்படி செய்து இந்தப் பிணங்களைத் தகனம் புரிந்து அத்திகளை யெடுத்துக்கொண்டு இராமேசுவரஞ் சென்று அந்த அத்திகளை ஆங்கு ஓரிடத்திற் புதைத்து ஸபிண்டீ கரணாதி சிராத்தங்களைச் செய்யென்று சொல்ல, அப்படியே சாகலை முனிவரின் புதல்வனான சாங்கலன் மறுநாட் காலையிற் றகனஞ்செய்து அத்திகளை யெடுத்துக்கொண்டு இராமேசுரத்திற்குச் சென்றுஅவ்விடத்திலோர் பாங்கில் மேற்கூறிய அத்திகளைப் புதைத்து தனுக்கோடியிற் சென்று ஸ்நாநம்பண்ணி சிராத்தமுதலான கருமங்களை ஓராண்டுவரை புரிந்து கொண்டிருக்குங்கால் ஓர்நாள் சொர்ப்பனத்தில் தன் றந்தையாகிய சாகலைமுனிவர் விஷ்ணுவின் பஞ்சாயுதங்களோடு தாமரைமாலை கௌஸ்துபாபரண முதலானவை தரித்து தன்னன்னையோடு கலுழன் மீது வரப்பார்த்து அடங்காப் பெருமகிழ்ச்சி கொண்டு உடனே பிரயாணமாகித் தன்னாச்சிரமம் வந்தடைந்து நிகழ்ந்த சங்கதிகளை ஆங்குள்ள முனிவர்களுக்குச் சொல்லி மகிழ்ந்திருந்தான். மேற்கூறிய சங்கரபாண்டியன் காட்டைவிட்டகன்று நாட்டுக்கு வந்திருக்குங்கால் ஆங்குள்ள தபோதனர்களால் புருடஹத்தி ஸ்திரீஹத்திகளைச் செய்த பாதகனென்றும் இதற்குத் தீயில் வீழ்ந்து மரணம் பண்ணிக்கொள்வதை யன்றிவேறு பிராயச்சித்த மில்லையென்று மிகழப்பட்டு அக்கினிகுண்டம் வளர்ப்பித்துத் தீயால் விழப்போகுந் தருணம். "வீழாதே' வீழாதே" இதற்குப் பிராயச்சித்தமொன்றுண்டு அதாவது சேதுவில் இராமநாதர் தரிசனம் ஒருவருடம் வரை செய்வையாகில் இந்த இரண்டு ஹத்திகளும் விலகிவிடுமென அசரீரிசொல்லக்கேட்டு உடனே அரசன் பரிவாரங்களோடு அநேக ஒட்டகங்களின் மீது நிதிக்குப் பைகளைப் போட்டுக் கொண்டு வெகு நியமமோடு இராமேது வரமணுகி இராம நாதருக்கு அபிஷேகங்கள் செய்து, தினந்தினம் தனுக்கோடியில் ஸ்நாநம்புரிந்து பிராமணர்களுக்குப் பிரதிதினமும் அன்னமிட்டும், இராமநாதருக்குப் பத்

துப்பாரம் பொருள்கள் கொடுத்தும் ஆராதனை செய்தும் வந்தான். இப்படியே முன்னூற்று ஐம்பத்தொன்பது நாட்களுமுடிந்து, முன்னூற்றறுபதாம் நாட்சாயங்காலம், இராமநாதர் சந்நிதி முன் பாகத்தோத்திரஞ் செய்துகொண் டிருக்கும்பொழுது, சங்கரபாண்டியன் முகத்திலிருந்து, கரியமேகத்தைப் போலத் தேகமும், கோரப்பல்லும் செம்பட்டை மயிருமான பயங்கரமான உருவத்தோடு பிரமஹத்தி வெளிப்பட்டது. அதைக்கண்ட யாவர்களும் அச்சமெய்தி நின்றார்கள், அப்பொழுது இராமநாதர் கிருபையால், பைரவமூர்த்தி சூலத்தோடு தோன்றி அப்பிரம ஹத்தியைச் சூலத்தாற் குத்திக்கொன்றார். பின் சங்கர பாண்டியன் இராமநாதரின் மகிமையை யேத்திப் புகழ்ந்து வேண்டிய தானதருமங்களைச் செய்து, தன் பதியாகிய மதுரைமா நகரையடைந்து ஆங்குள்ள முனிசிரேஷ்டர் களோடு, இராமநாதரின் பெருமையைக் கலந்துபேசி அரசாண்டு கொண்டிருந்தான். இந்த அத்தியாயத்தைப் படிப்பவர்களும் படிக்கும்படி செய்பவர்களும் படிக்கக் கேட்டவர்களும் முக்தர்களாவார்களென்பது சரதமே.

முப்பத்தெட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

முப்பத்தோன்பதாவது.

சேதுமாதவர் வரலாறு.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

ஆலவாய்க் கரசு புண்ணி யநிதியெனு மோரரச னவாமீக் கொண்டு
பாலனுக்குச் செங்கோலை யளித்திரா மேச்சுரத்திற் பாரியோடு
சேலமுட னமர்ந்திடுங்காற் றிருவைமக ளாயடைந்து சின்னாட் பின்னர்
வேலைதுயில் மால்வயோ திகனாக வந்துமகள் மெலிய கையை.

இதுவுமது.

எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

பற்றியிழுத் திடக்கண்டு கோப மீறிப் பகராது பசர்ந்திந்தப் பாவி தன்னைச், சற்றுமன மிரக்கமின்றி யடையு மென்னச் சாற்றியா சன்சயனஞ் சார்ந்த பின்மால், உற்றசிச்சொ ரூபமதைக் கனவிற் காட்ட வோடோடி யரசனுவந் தேற்றிப் போற்றி, நற்றவங்க ளோடுபேர முத்தி யீந்த நம்சேது மாதவர்சீர் நவிலு வோமால்.

திருவாலவாய் க்ஷேத்திரத்தை ஏகசக்ராதிபதியா யரசாண்டபுண்யநிதியெனு மரசன் இராமசேதுவில் ஸ்நாநம் பண்ணவேண்டுமென்ற ஆசையுடைத்தா னவனாகத் தன் பாலகனை மதுரைமாநக ரரசாட்சி செய்யும்படி திட்டஞ்செய்து பத்தினி சமேதனாக சேதுவிற்கு வந்து தனுக்கோடியிலும் மற்றும் கந்தமாதனகிரியிலுள்ள, தீர்த்தங்களிலும் சங்கற்பப்படி நீராடி இராமநாதனை மனச்சுத்தியாய்த் தியானம் பண்ணிக் கொண்டொழுகும் நாட்களில் ஓர்நாள் வைகுண்டவாசனாகிய திருமாலிடம் இலட்சுமியானவள் இப்புண்ணிய நிதியின்பதியை விசேடித்துச் சொல்ல மஹா விஷ்ணுவிதற்குச் செவிகொடா திகழ்ந்து சொல்லக்கேட்ட இலக்ஷுமியானவள் கோபம்பெருகிச் சரேலெனத் தன்னிருக்கையை விட்டெழுந்து அரசன் பத்தியைப் பரிசோதிக்க வேண்டுமென்ற வெண்ணங் கொண்டவளாய் எட்டுவயதுள்ள சிறுமியாகத்தனுக்கோடியின் கரையில் நிற்கப் புண்ணியநிதியெனு மரசன் சமீபத்திற்சென்று பெண்ணின் வடிவத்தை நோக்கிப்புகழ்ந்து, அம்மணீ, நீயாரென்னவினவ இலக்குமியாகிய அச்சிறுபெண் அரசனைநோக்கி அரசே, நான், அநாதை, எனக்குப் பெற்றோருற்றா ரொருவருமில்லை. என்னை பலாத்காரஞ் செய்யுங் கொடியனைத் தாட்சண்யமின்றித் தண்டிக்கிறதாக வாக்களிப்பீராகில் உம்மைத் தகப்பனாகப்பெற்று உமது வீட்டிலேயே உண்டு களித்திருக்க விருப்புற்றனன்என்றாள். அதைக்கேட்ட அரசன், தாயே நானே ஏகபுத்திரனாகவிருக்கிறேன் எனக்கோ பெண்குழந்தையில்லை ஆகையால் நான் உன்னைப் புத்திரியாகப் பாவிக்கிறேன் கேட்டவரத்தையு மளித்தேன் என்று சொல்லி யழைத்துக்கொண்டுபோய் தன் பத்தினியாகிய விந்தியாவளியிடம் சகல விர்த்தாந்தங்களையுஞ் சொல்லி பிள்ளையை அன்னவள்கையி லொப்பிவிக்க விந்தாவளி பெருமகிழ்வினோடேற்று அந்தப்புரஞ்சென்று பிள்ளையைக் காணிநிலத்தையுடையவன் அந்நிலத்தைக் காக்கின்ற முறையைப்போலும் தாரித்திரத்திலேயே யழுந்தின வொருவன் காப்பாற்றுகின்ற பொருளைப்போலும் வளர்த்துக்கொண்டுவந்தாள். இப்படியாக அப்பெண் வளர்க்கப்பெற்றுச் சரியான பருவத்தையடைந்து ஓர்நாள் சிலசேடியரோடு பூஞ்சோலைசென்று மலர்பறித்து விளையாடிக்கொண்டிருக்குங்கால், வேதனைத்தந்தருளிய மாதவன் இலட்சுமியைவிட்டு நீங்கி யிருக்க முடியாதவராகிப் பூலோகத்தில்வந்தெங்கணுந் தேடிக் கண்ணு

ரூது இப்பூஞ்சோலையிற் பார்த்து நாமிவ்வுருவோ டேகுவோமா கில், கைக்ககப்படாளென்று நினைத்து, வயோதிகபிராமணனாக நெற்றியில் திரிபுண்டரஞ்சாத்தி விபூதி உத்தூளனராய்ச் சென்று இனிய வசனங்களைச்சொல்லிக் கரத்தைப்பற்றி யிழுக்க, அப் பெண் பீதியடைந்து அருகினின்ற சகிமார்களைக் கூவிக் கூக்குர லிட்டாள். அதைக்கேட்டு சகிமார்களோடிவந்து ராஜகுமரியின் கையைப்பிடித் திழுத்துக்கொண்டு நிற்கும் கிழப்பிராமணனுக்கு வேண்டிய சமாதானங்களைக் கூறியும், கையைவிடாததுகண்டு பெ ருங்கூச்சலிட் டழுதார்கள். அம்பெருமிரைச்சலைக்கேட்ட அரசன் திடுக்கிட்டோடிவந்து அழுதுகொண்டுநிற்கும் தன் புத்திரியைப் பார்த்து அம்மணீ ஏனழுகிறாயென்றான். அப்பெண் தேம்பியழுது அப்பா! அதோ மரத்தடியிலிருக்கும் பிராமணன் என்னைக் கை யைப்பிடித்திழுத்துப் பலாத்காரஞ் செய்தானென்றாள். உடனே அரசன் அடங்காப் பெருஞ்சினங்கொண்டு அம்மரத்தடியிலிருக் கும் பிராமணனைப் பிடித்துக் காலில்விலங்கிட்டு அன்னாகாரமின்றி கோவிலின் ஓர் மண்டபத்தி லடைத்துவையுங்களென்று தன் ஏவ லாளிகளுக்குக் கட்டளையிட்டுத் தன் புத்திரியை யழைத்துக்கொ ண்டு அரண்மனைவந்து சேர்ந்து புத்திரியை அந்தப்புறத்திற் கனுப் பிவிட்டுத் தான் ஸ்நானமுதலான நித்தியகர்மானுஷ்டானங்களை முடித்துபோஜன முண்டு படுக்கைக்குச் சென்று தூங்கிக்கொண்டி ருக்கும்பொழுது கனவில் அரசன் உத்திரவின்படி காலில் விலங் கிட்டுச் சிறையிலடைக்கப் பெற்ற மஹாவிஷ்ணு வானவர் தன்றி ருவிளையாடலை அரசனுக்குத் தெரியும்படி செய்யவேண்டு மென் கிற வெண்ணங் கொண்டவராய் நீலமேக சாமள ரூபியாயும் சங்கு சக்ரதாரியாயும் துளசிமாலை தாமரைமாலை இவைகள் விளங்கிய திருமார்பை யுடையவராயும் ஆதிசேஷ சயனராயும் தன் புத்திரி யானவள் செந்தாமரை மலரின் மீது இலக்குமியைப் போலாகவும் தோன்ற திடுக்கிட்டெழுந்தந்தப் புறத்திற்கேகித் தன்புத்திரியான வள் கனவின்படியே யிருக்கக் கண்டு மகிழ்ந்து விடிந்த பின்பு தன் புத்திரியை யுமழைத்துக் கொண்டு சிறை மண்டபத்திற்குப்போய் முன் தான்சிறையில் வைக்கச் சொன்ன கிழப்பிராமணன் விஷ்ணு சொரூபியாய்க் கனவின்படி யிருக்கக்கண்டு மஹா விஷ்ணு வென் றறிந்து மாதவா, கேசவா, நாராயணா, கமலா, காந்தா, சாரங்க பாணி, மதுசூதனா, ஜகநாதா, உம்மை நமஸ்கரிக்கின்றேன் அறிவீ

னனுகிய நான் செந்தாமரையையும் செய்யதளிரையும் வென்ற திருத்தாட்களில் விலங்கிடச் செய்த குற்றத்தை க்ஷமித்தருளவேண்டும் நீ தந்தை நான்குழந்தை பிள்ளைகள் செய்த குற்றங்களைத் தந்தையன்றி யெவர்கள் பொறுப்பார்கள், உமக்கு அபகாரமே செய்யவந்த பூதனை முதலானவர்களுக்குக் கூட சாயுஜ்ஜியந்தந்து உபகாரஞ்செய்த பிரபூ இச்சிறுவனுகிய நான்செய்யு மபராதங்களைப்பொறுத்துக் காப்பாற்றியருளுவீரென்னக் கண்ணீர்மலகித் துதித்துநிற்கும் அரசனைப்பார்த்து, ஹே! பக்தா நீ செய்ததெல்லா மன்புபற்றி யல்லது வேறில்லை. அன்றியும் நின் புத்திரியாகிய என் பத்தினிக்குச்செய்த உபசாரங்களெல்லா மெனக்குச்செய்தனவே எனக்குமவளுக்கும் வித்தியாசமே கிடையாது. ஆகையால் நீ யெனக்கு யாதொரு குற்றமுஞ்செய்யவில்லை என்று திருவாய்மலர்ந்தருளினர்.

பின் இலட்சுமியானவள் அரசே நான்விஷ்ணுலோகத்தை விட்டிங்கு நினக்குப்புத்திரியாய்வந்தது நின்னுடைய பக்தியைச் சோதிக்கும் பொருட்டே நினக்குயான்புத்திரி யென்பதில் சந்தேகமே கிடையாது இன்னும் நீடூழிகாலம்வரை நீதியாயும், விஷ்ணுபக்தியையே விசேஷமாகக் கொண்டு மரசாட்சிசெய்து இறுதியில், புனர் ஜனனமில்லாத என்னுடைய சாஜ்யமுங் கிடைக்கக்கடவது. நீ புரிந்த யாகமுதலான பக்திகளில் நாங்களிருவர்களும் திருப்தியடைந்தோமென்று திருவாய்திறந்தருமையாய்ச்சொற்றனள் மாதவன் பின்னுமரசனைநோக்கி அரசே நீ என்னை விலங்கிட்டுச்சிறையில் வைத்தபடியே, இம்மண்டபத்திலேயே சேதுமாதவனென்று பேர்விளங்க விருந்து கொண்டிருக்கிறேன். பரமேசுரனுகிய எம்பெருமானிவண் மூர்த்திகரித் திருப்பதினலே, நானுமிங்கிருக்க விருப்புற்றேன். சேதுயாத்திரைவந்து இராமலிங்கத்தைப் பூஜிப்பவர்களும் காசியிலிருந்து கங்கைகொண்டுவந்து இராமநாதனுக்கபிஷேகஞ் செய்பவர்களும் இங்குவந்து நம்மைத் தரிசித்துச் செல்லவேண்டிய தாவசிகமே. அப்படிச்செய்யா விடிலவர்கள் காசிகங்கை முதலானகொணர்ந்து இராமநாதரை பூஜித்தவரேயல்லர் அன்றியும் நீ எங்களிருவர்களையுந் துதித்த் ஸ்தௌத்தியங்களைச் சொன்னவர்களும், அல்லது சொல்லக் கேட்டவர்களும் வைகுண்டசாதனர்களா யிருப்பார்களென்பதிற் சந்தேகமே இல்லை யெனச்சொல்லி இலக்குமிசமேதராய் அந்தர்த்தானமாயினர், பின் புண்ய

நிதி யெனுமரசன் சேதுமாதவனையும் இராமநாதரையுஞ் சேவிப்பதையே பொருளாகக் கொண்டவன் வதிந்து தேகாந்தத்தில் வைகுண்டபதவியை யடைந்தான் அதுகண்ட அன்னவன் மனைவிந்தாவளியென்பவள் அநுமரணம்பண்ணிப் பதியையடைந்தாள் கங்கைமுதலான புண்ணிய தீர்த்தங்களிலாடுவதைப் பார்க்கிலும் சேதுமாதவனை யோர்தரம்தரிசித்தல் சிலாக்கியமே இவ்வத்தியாயத்தைப் படிப்பவரும் கேட்பவரும் சகலசித்திகளையு மடைவார்களென்பதி லையமே இல்லை.

முப்பத்தொன்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

நாற்பதாவது அத்தியாயம்.

சேதுயாத்திரை விபரம்.

எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

விரிகதிர்ச்செம் மணிகொழிக்குந் திரைசூழ்ந் தோங்கி வியன்பெருகுஞ் சேதுவினை மேவிச்சென்றோர் புரிநியம முறுதவமுங் குணமு மேன்மை பொருந்துகின்ற செழுங்கொடையும் புகழ்நின் றூர்ந்த தரமிகுநன்மந்திரமுமதனுற் கிட்டுந்தகைமைகளும் இராமபிரான்றயவுகூர்ந்து பரம்பெருகத் தருவரமு மின்னுஞ் சார்ந்த பலன்களும்நன் குறவெடுத்துப் பகருவோமால்

மாஹா பாதகங்களைப் போக்கிச் சாதனங்களை யளிக்குஞ் சேது யாத்திரைசெய்ய விரும்புவோர், தம்மாலியன்றமட்டும் யாசகர்களுக்குத் தானதருமங்களைச் செய்தும், வேதியர்களுக்குப் பூரிமுதலானதளித்தும் விபூதி, உருத்திராக்கமாலிகாபரணராய் விரலில் பவுத்திரமிட்டுச் சேதுயாத்திரை பண்ணப்போகிறே னெனச் சங்கற்பஞ்செய்து பாதரட்சை குடைமுதலானவை யில்லாது பாதசாரியாய்நடந்து தாம்பூலம் எண்ணெய் ஸ்திரீசம்போகமிவைகளை நீக்கி வழியில்வீண்காலம்போக்காது சேதுமகத்துவத்தையாவது இராமாயணத்தையாவது அல்லது வேறுபுண்ணியகதைகளையாவதுபாராயணஞ்செய்து கொண்டும் பஞ்சாக்கரத்தையாவது அட்டாக்கரத்தையாவது ஷடாக்கரத்தையாவது ஜபித்துக்கொண்டு சேதுயாத்திரைசெய்து சேதுமூலம்போய்ச்சேர்ந்து வருணனைப்பூஜித்து ஓர்கல்லையாவது ஏழுகல்லையாவது பிப்பிலாதரி

டத்திலிருந்துண்டான கிருத்தியை யுத்தேசித்து, பாஷாணமென் னுற் கொடுக்கப்பட்டதென்று சொல்லிப்போட்டு மஹாவிஷ்ணு சிவபெருமான் இன்னுமுண்டான பெரியோர்களையுஞ் சிந்தித்து இருமுறை ஸ்நாநம்செய்து சூரியனைநமஸ்கரித்து பின்னும் சுக்ரீ வன் அனுமன் முதலானவர்களை நான்கு புறமு மிருக்கும்படி தியானித்து மூன்முந்தரம் ஸ்நானம்பண்ணி பிதுர்த்தர்ப்பணமும் ரிஷிகள் முதலான பிதுர்களுக்குத் திலதர்ப்பணமுஞ்செய்து ஈர வஸ்திரத்தைக் களைந்து உலர்ந்தவஸ்திரமுடுத்திக்கொண்டு முறைப் படி பிதுர்த்தேவதைகளுக்குப் பிண்டம்போட்டுவிட்டுச் சக்கரதீர் த்தத்தில் நீராடி, இராமநாதனைப் பூஜிக்கவேண்டும் இவ்விதிகளெல் லாம் தேவி பட்டணமார்க்கமாய் யாத்திரை செய்பவர்களுக்கே தர்ப்பசயனமார்க்கமா யாத்திரைசெய்பவர்மேற் கூறிய விதிகளின் படியே இங்குஞ்செய்து சக்கரதீர்த்தத்திற் படிந்து பின் வேதாள தீர்த்தமுதலான மேற்சொன்ன தீர்த்தங்களில் முறையே தோய் ந்து இலட்சுமணதீர்த்தத்திற்குவந்து கண்டக்ஷவரம்பண்ணி மூழ்கி இராமதீர்த்தம்போய் அதிலும் ஸ்நாநம்பண்ணித் தானங்கள்வழ ங்கி ஆலயஞ்சென்று இராமநாதனைச் சேவித்து, பிறகு கயை, கங்கை, யமுனை, சரசுவதி, காயத்திரி, பிரமகுண்டம், அனும குண்ட முதலான தீர்த்தங்களிற்குடைந்து கோதானம், பூதானம், கன்னிகாதானம் முதலான முப்பத்திரண்டுதானங்களையும் புரிந்து நீராடி ஆலயஞ்சென்று இராமநாதனையும் சேது மாதவனையும் வணங்கி கோடிதீர்த்தம், தனுக்கோடிதீர்த்த மிவையிரண்டையும் விடுத்து மற்றேனைய தீர்த்தங்களிலும் புனலாடி மீட்டும் இராமநா தனைப்பூஜித்து தனுக்கோடியிற் சென்று தோய்ந்து சிரார்த்தம் தானதருமங்களையுந் தம்மாலியன்றமட்டுஞ் செய்து பின் கோடி தீர்த்தமணுகி ஆடை, பொன், தானியமுதலானவை உத்தமவேதி யர்க்கீந்து இராமநாதனையும பருவதவர்த்தனி யம்மையையும், வலம்வந்து பல துதிகளாலிறைஞ்சி தூபதீபநைவேத்தியமுதலான பூஜோபகாரணங்களைக் கொடுத்து விடைபெற்றுக்கொண்டு சேது மாதவர் சந்நிதானஞ்சென்று ஆங்குந் தூபதீப நைவேத்தியங்கள் கொடுத்தவரிடத்திலும் விடைபெற்றுக்கொண்டு பிரயாணமாகித் தம் பதியையடைந்து பிராமணர்களுக்குப் போஜனமளித்துப் பூரி முதலானவை கொடுக்கவேண்டும். இவ்வண்ணம் புரிந்தாற்றான் சேதுயாத்திரைப்பலன் சித்திக்கும் இராமநாதருங் கிருபையுடைய வராவார் இவர்களைத் தரித்திரத்திலேயே யழுந்திக்கொண்டிருக்கு மொருவனேனுக்கில் க்ஷணத்திற்றரித்திரமிரியும் இந்த அத்தியாயத் தைப்படித்தவர்களும் படிக்கக் கேட்டவர்களும் மேற்கூறியபலன் களை யடைவார்கள்.

நாற்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

நாற்பத்தோராவது அத்தியாயம்.

சேதுபலவிபரம்.

எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

கனம்பெருஞ்செந் தமிழினொடு சுதருந் தெய்வக் கனகமலர் மாதருளு
ங் கனிவுற்றோங்கு, மினம்பரவுஞ் செல்வமும்நன் வாக்குங் காம னெனப்
புகழும் வடிவழகு மிசையும் பூமேல், வனம்பெருகக் குடைபவர்கள் மனம்
போ லென்று மகிழ்வுறவே வான்றருவு மணியும் போலச், தினந்தினமுங்
கொடுத்துமகாசிறப்பையார்ந்தசேதுயாத்திரைப்பலன்சீர் செப்புவோமால்

இந்தச் சேது சகல க்ஷேத்திரங்களிலு மகிமையுடைத்தானது இங்கு செய்யப்பட்ட ஹோமம், ஜப முதலான கிருத்தியங்களும் தானமுதலானவைகளு மெஞ்ஞான்று மழியாப் பலனைத்தரும். தனுக்கோடியில் ஸ்நாநம்பண்ணினவன், காசியில் பத்து வருடம் வேதாகமப்படி கங்கை ஸ்நாநம்பண்ணின பலனையடைவான் மேலும் ஆயிரம் அசுவமேதயாக பலனையும் கோடிஜன்மங்களிற் செய்த பாபங்களை நசிக்க வெல்லா நற்பலன்களையுமடைகிறான். மாசிமாத முதய காலங்களிலும், கிரஹணங்களிலும், உத்தராயந, தக்ஷணாயந, காலங்களிலும் பௌரணமியிலும், அமாவாசையிலும் பௌரணமி சோமவாரத்திலும் * அர்த்தோதயங்களிலும் † மஹோதயகாலங்களிலும் இந்தச்சேது தனுக்கோடியில் நீராடுவார்களேயானால் அதனாலுண்டாகும் பலன்களையெம்மாலெடுத் துரைப்ப தரிதானவைகளே, இந்தத்தனுக்கோடியில், ௩, ௫, ௧௦, ௧௫, ௨௦, ௨௫, ௩௦, தினமளவும்நீராடுகின்றவர்கள் முறையே தரந்தரமாய் மிகுந்தபலனை யடைவார்கள் இந்த இராம சேதுவை நினைத்துக்கொண்டு எவ்விடங்களிலே யாவதிருக்குங் குளங்களில் முழுகினாலும் மேற்கூறிய பலன்களை யடைவார்கள். சேது, அந்த சயனம், கோகருணம், புருஷோத்தம் இந்தத்தலங்களிலெப்பொழுதுஞ் சமுத்திர ஸ்நாநம் பண்ணலாமென் றிருப்பினும் புத்திரசந்தானத்தை விரும்பினோர் வெள்ளிக்கிழமை, செவ்வாய்க்கிழமை, ஞாயிற்றுக்கிழமை இத்தினங்களில் சமுத்திர ஸ்நாநஞ்செய்யக்கூடாது, ஆனால் சேதுவில் மட்டுஞ் சமுத்திர ஸ்நாநஞ் செய்யலாம், பிதுர் கருமஞ்செய்யாதவனும் கருப்பமேற்ற பெண்களும் சேதுவைத் தவிர மற்றைய தலங்களில் வாரி நீராடலொணாது, தனுக்கோடியில் நீராடுவோன், வேறெங்கேயாவது, வசிக்கும் மனிதனை நினைத்து முழுகினாலும், அம்மனிதனும் இத்தனுக்கோடியில் நீராடிய பலனையடைகிறான். ஆனாலிறந்தவர்களையுன்னி

* அர்த்தோதயமென்பது திருவோண நக்ஷத்திரமும். அமாவாசையும், ஆதித்தவாரமும், மகரராவியில் ஒன்றாய்ச் சேருங்காலமாம்.

† மஹோதயமென்பது, திருவோணம், அமாவாசை வியதிபாத மூன்றுஞ் சோமவாரத்திற் கூடிவருங்காலமாம்.

நீராடற்றகா. அப்படிச்செய்ய விரும்பினால், தருப்பையாலேனும்
பொன்னினாலேனும் மரித்தவருருவை நிருமித்து வேதியர்களால்
மந்திரஞ்சொல்லும்படி செய்து அவ்வுருவை மூழ்விக்கலாம். ஆயி
ரம் வியதிபாத புண்ணியகாலத்திற்கு ஓர் அமாவாசை சமம், பதி
னாயிரம் அமாவாசைக்குச் சரி ஓர் ஆதித்தவார அமாவாசை அப்
படிக்கூடிய அமாவாசையோடு திருவோணமுஞ் சேரிலதியுத்தம
மாம். இப்பேர்ப்பட்ட புண்ணியகாலங்களில் தானமாவது ஜபமா
வது ஸ்நானமாவது செய்வதினா லுண்டாகும் பலனைப் பிரமாவும
றியானென்பது சரதமே தானஞ் செய்பவர்கள் மிகுந்தவொழுக்க
முடையவனாகவும் உயர்குடிப் பிறந்தோனாகவுமிருக்கிற பிராமண
னைப் பார்த்துத் தானஞ்செய்ய வேண்டும் ஆங்கு அப்பேர்ப்பட்ட
பிராமணன் கிடைக்காவிடில் வேறெங்கேயாவது மேற்கூறிய வண்
ணமிருக்கும் பிராமணனை உத்தேசித்துத் தானம் செய்துவிட்டு
வீட்டிற்கு வந்து தானஞ்செய்தபொருளை அப்பிராமணனுக்குச்
சேர்ப்பி விக்கவேண்டும் உத்தேசித்தவ னிறந்துவிட்டால் அவன்
சந்ததியாரிடங் கொடுக்கவேண்டும், சந்ததியுமில்லா திருந்தால்
சிவஸ்தலத்திற்குச் சேர்ந்து விடவேண்டும் ஆதிகாலத்தில் திலீபச்
சக்கரவர்த்திகு வசிஷ்டரிவ்விஷயமாயனேக மாயுபதேசஞ்செய்தி
ருக்கிறார். அவ்வண்ணஞ்சற்பாத்திரமறிந்து தானஞ்செய்யாதவன்
அநேக இழியஜன்மங்களிற் பிறந்தழுந்துவான் செய்நன்றிமறந்த
வன், குருமனை விரும்பினோன் இப்பேர்ப்பட்ட மஹாபாதகாக
ளும் இச்சேதுவிலோர் தடவை அர்த்தோதய காலத்தில் ஸ்நாநம்
பண்ணின வளவிலேயே, சகல பவமும் நீங்கிமோட்ச சாயபிராஜ்
ஜியத்தை யடைகிறார்கள் மேலும் இச்சேதுவில் மேற்கூறிய காலத்
தில் ஸ்நாநஞ் செய்வர் பகீரதியில் அறுபதினாயிரவருட ஸ்நாநபல
னையும், மூன்றுலோகங்களிலுமுள்ள தீர்த்தங்கள் கிடையா சேது
யாத்திரைசெய்பவர் அவசியம் இந்தச் சேதுமகத்துவத்தைப்
படித்திருக்கவேண்டும், ஹே. ரிஷீசுவரர்களே இந்தச் சேதுவின்
மகத்துவத்தை நாற்பத்தோ ரத்தியாயங்களாக விரித்துச் சொ
ல்லி விட்டேன், இதிலோ ரத்தியாயத்தை யேனும் ஓரத்தியாயத்
திற் பாதியையேனும் படித்தவர்களுங் கேட்டவர்களும் இம்மை
யில் சகல சுகவைபவங்களை யநுபவித்து மறுமையிலெஞ் ஞா
ன்று மழியாத பரமபதத்தை யடைவார்கள். இப்புராணத்தைப்
படிப்பவர்களுக்குக் கேட்போர் பூமிபொன் வஸ்திர முதலான
[illegible]னங்கள் செய்தால் திரிமூர்த்திகளுந் தமக்குச் செய்ததாகத் திரு
[illegible]யடைவார்களென்று சூதபுராணிகர் சொல்லி விடைபெற்றுத்
[illegible]நுப்பிடஞ்சேர்ந்தார் பின் சௌனகாதியர் ஆனந்த பரவச
[illegible]னந்தோறு மிச்சேது மகத்துவத்தைப் படித்துக்கொண்
[illegible]டுக்கொண்டு மிருக்கிறார்கள்.

[illegible]ற்பத்தோராவது அத்தியாயம் முற்றிற்று சம்பூரணம்.

சூசீபத்திரம்.

சூசீபத்திர முற்றிற்று.